உதயன்

www.onlineuthayan.com

60: பக்கங்கள் சுடர் 27 கதிர் 260 வள்ளுவர் ஆண்டு 2043 ஆடி 28 ஞாயிற்றுக்கிழமை (12/08/2012) UTHAYAN - A Lively National Tamil Daily விலை ரூபா 30.00

கூடியிருந்தவர்கள் கண்ணீர் மல்க டெல்றொக்ஷனின் உடல் அடக்கம்

ஆயிரக்கணக்கானோர் இறுதி ஊர்வலத்தில்

யாழ்ப்பாணம், ஓக.12

சிறைச்சாலையில் அதிகாரிகளின் மோசமான தாக்குதல்களுக்கு இலக்காகி கோமா நிலையில் இருந்து பின்னர் உயிரிழந்த தமிழ் அரசியல் கைதியான மரியதாஸ் டெல் றொக்ஷனின் உடல் பெற்றோர், உற்றார் கதறி அழ நேற்றுமாலை யாழ். புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

டெல்றொக்ஷனுக்கு அஞ்சலி செலுத்துவதற்காக

பார்க்க பக்கம் 4

இரத்தம் கொதிக்கிறது!

டெல்றொக்ஷன் அஞ்சலியில் மனோ

யாழ்ப்பாணம், ஓக. 12

மஹிந்த அரசாலேயே டெல்றொக்ஷன் திட்டமிட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளார். இந்த அயோக்கியத் தனத்தை நினைக்கும் போது இலங்கைக் குடிமகன் என்று சொல்ல வெட்கமாக இருக்கின்றது. தொடர்ச்சியாக இவ்வாறான படுகொலைகளைச் சந்தித்து வருகின்ற தமிழன் என்று நினைக்கும் போது ஆத்திரமாக இருக்கின்றது. இரத்தம் கொதிக்கின்றது.

இவ்வாறு ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

டெல்றொக்ஷனின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்டு இரங்கல் உரை ஆற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தென்னிலங்கை சிங்கள தேசத்தில் மாட்டை வெட்டக் கூடாதென்கின்றார்கள். ஆனால் வடக்கு - கிழக்கு தமிழர்கள் படுகொலை செய்யப்படுகின்றார்கள். மாட்டுக்கு உள்ள உரிமை தமிழர்களுக்கு இல்லையே என்பதையே இது அம்பலப்படுத்துகின்றது.

இது முதல் கொலை அல்ல. அத்துடன் கடைசிக் கொலையாகவும் இருக்கும் என்று நான் எண்ணவில்லை. டெல்றொக்ஷன் இந்த மஹிந்த அரசினாலேயே படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

கடந்த காலங்களில் மேற் கொள்ளப்பட்ட இவ்வாறான

பார்க்க பக்கம் 4

சீனாவுக்குக் காணி இந்தியா கடும் அதிருப்தி

கொழும்பு, ஓக 12

கொழும்பு கொள்ளுப்பிட்டியில் காணி ஒன்றை இலங்கை சீனாவுக்கு வழங்கியுள்ளமை குறித்து இந்திய அரசு கடும் அதிருப்தி தெரிவித்துள்ளது.

கொள்ளுப்பிட்டியில் 250 பேர்ச் காணி ஒன்றை இலங்கை அரசு சீன ராணுவத்துக்கு

பார்க்க பக்கம் 4

பாடசாலை பஸ் சேவைக்கு இனி வடக்கிலும் அனுமதிப்பத்திரம்

யாழ்ப்பாணம், ஓக.12

ஓட்டோக்கள் தவிர்ந்த பாடசாலை சேவையில் ஈடுபடும் வாகனங்களைப் பதிவு செய்து அனுமதிப்பத்திரம் வழக்கும் நடைமுறை வடமாகாணத்தில் முதன் முதலாக வவுனியா மாவட்

பார்க்க பக்கம் 4

இலங்கை குறித்த விடயங்களில் இந்தியாவுக்கு நிதானம் தேவை

'ரைம்ஸ் ஒவ் இந்தியா'வுக்கு ஜனாதிபதி மஹிந்த செவ்வி

புதுடில்லி, ஓக.12

இலங்கை தொடர்பான விடயங்களில் தீர்மானங்களை மேற்கொள்ளும் போது இந்தியா மிக நிதானத்துடன் நடந்து கொள்ள வேண்டும். இலங்கைக்கான தனது ஆதரவை இந்தியா தொடருமானால் இலங்கைக்கு எதிராக இனிமேல் எந்தவொரு தீர்மானமும் முன்வைக்கப்பட வாய்ப்பில்லை என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இலங்கை மீது ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இந்த ஆண்டு முற்பகுதியில் அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானத்துக்கு இந்தியா ஆதரவு வழங்கியமை குறித்துக் கருத்து வெளியிடுகையிலேயே ஜனாதிபதி இப்படிக் கூறியுள்ளார்.

இந்த ஆண்டின் ஆரம்பத்தில் ஜெனிவா மனித

பார்க்க பக்கம் 4

அரசு - கூட்டமைப்பு இடையேமீண்டும் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான முன்றாம் தரப்பு அனுசரணையாளராக தென்னாபிரிக்கா வருகிறது. 1
சூரியகாந்தி

பாலியல் துஷ்பிரயோகங்களில் ஈடுபடும் குற்றவாளிகளுக்கு தூக்குத்தண்டனை கிடைக்கும் என்ற பயம் ஏற்படுத்தப்படவேண்டும். 2
சூரியகாந்தி

கருணாநிதியின் துரோகத்தால் அவர் வசமிருந்த அரசியல் களம் ஜெயலலிதாவின் கைகளுக்கு மாறியது 4
சூரியகாந்தி

இன்றுடன் நிறைவுக்கு வருகிறது ஒலிம்பிக் திருவிழா. 15 தங்கப் பதக்கங்களுக்காக இறுதி நாளான இன்று நடைபெறவுள்ள போட்டிகளே முதலிடத்தைப் பிடிக்கும் நாட்டைத் தீர்மானிக்கும் 18

அண்ணா அறிவாலயத்தில் தி.மு.கவின் டெசோ மாநாடு

தடைக்கு எதிரான மனுவுக்கு உடனடித் தீர்ப்பு இல்லை

சென்னை,ஓக 12

தி.மு.க.வின் ஏற்பாட்டில் சென்னையில் இன்று நடைபெறவிருந்த டெசோ மாநாட்டுக்கு தமிழக அரசு அனுமதி மறுத்துள்ள நிலையில் இந்தத் தடைக்கு எதிர்ப்புத் தெரிவித்து சென்னை உயர்நீதிமன்றத்தில் தி.மு.க நேற்று வழக்கு தாக்கல் செய்தது. எனினும் இந்த வழக்குத் தொடர்பில் உடனடியாகத் தீர்ப்பு எதையும் வழங்க முடியாது என்று நீதிபதி போல் வசந்தகுமார் அறிவித்தார். இதனையடுத்து இன்று ஞாயிற்றுக்கிழமை மாநாட்டைச் சென்னையில் உள்ள தி.மு.க. தலைமையகமான அண்ணா அறிவாலயத்தில் நடத்துவதற்குத் தி.மு.க திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நீதிமன்றத்தில் இருதரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி பால் வசந்தகுமார், இருதரப்பினரையும் சரமாரியாகக் கேள்விகள் கேட்டார். மேலும் இது குறித்த வழக்கு நிலுவையில் இருப்பதால் இந்த வழக்கை விசாரிக்க அவர் மறுத்துவிட்டார்.

பார்க்க பக்கம் 4

ஈழத்துக்கு இந்தியா அனுமதி

சென்னையில் தி.மு.க தலைவர் கலைஞர் தலைமை யில் நடக்கும் டெசோ மாநாட் டில் ஈழம் என்ற வார்த் தையை தவிர்க்குமாறு மத் திய வெளியுறவுத்துறை அமைச்சகம் முன்னர் கூறி யிருந்தது. ஆயினும் இப் போது மீண்டும் அந்த வார்த்தையைப் பயன்படுத் தலாம் என மத்திய உள் துறை அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது.

மாநாட்டின் தலைப்பில், ''ஈழம்'' என்ற வார்த்தை யைப் பயன்படுத்தக் கூடாது என்று அறிவுரை கூறி, வெளி யுறவு அமைச்சகம் கடந்த

பார்க்க பக்கம் 4

புலிகளின் ஆதரவாளர்கள் 22 பேர் கோத்தபாயவுடன் இரகசிய சந்திப்பு

கே.பியின் ஏற்பாட்டில் நடந்தது

கொழும்பு ஓக. 12

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தீவிர ஆதரவாளர்கள் என்று நம்பப்படும் புலம்பெயர் தமிழர்கள் 22 பேர் சில தினங்களுக்கு முன்னர் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவுடன் இரகசியமாகச் சந்தித்துப் பேசியுள்ளனர்.

புலிகளின் முன்னாள் ஆயுதத் தரகரான கே.பி. எனப்படும் குமரன் பத்மநாதன் இந்தச் சந்திப்புக்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தார். அவரது தலைமையிலேயே குழுவினர் கோத்தபாயவைச் சந்தித்துப் பேசினர்.

இலங்கையில் முதலீடுகளைச் செய்வது குறித்தே இந்தச் சந்திப்பின் போது பேசப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

வெளிநாடுகளில் இலங்கை அரசு குறித்து தவறான பரப்புரைகளில் ஈடுபடவேண்டாம் என்று இந்தச் சந்திப்பில் கோத்தபாய அப்போது கேட்டுக் கொண்டார் என்று நம்பகமாகத் தெரியவந்தது.

பார்க்க பக்கம் 4

பக்கச்சார்பற்ற விசாரணை வேண்டும்

புதுடில்லி,ஓக 12

இலங்கையில் இடம் பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பில் நியாயங்களை தேட ஐக்கிய நாடுகள் சபையின் தலைமையிலான பக்கச்சார் பற்ற விசாரணையே ஒரே வழியாகும் என்று சர்வதேச மன்னிப்புச் சபையின் இந்தியாவுக்கான பிரதம நிறைவேற்று அதிகாரி ஆனந்த பத்மநாபன் தெரிவித்துள்ளார்.

பார்க்க பக்கம் 4

SAFARI

சிங்கர் அறிமுகப்படுத்தும் அதிசிறந்த உறுதியான மோட்டர் சைக்கிள்கள்

72 CC 4 ஸ்ட்ரோக் என்ஜின்
மின்சார, கிக் ஸ்ராட்
அலோய் சில்லு
சிவப்பு, நீலம், கறுப்பு, சில்வர் வர்ணங்களில்

GALAXY 100

100 CC ஸ்கூட்டர் 4 ஸ்ட்ரோக் என்ஜின்
மின்சார, கிக் ஸ்ராட்
அலோய் சில்லு
டிஸ்க் பிறேக்
சிவப்பு, நீலம், கறுப்பு வர்ணங்களில்

CAMY 80

80 CC ஸ்கூட்டர் 4 ஸ்ட்ரோக் என்ஜின்
மின்சார, கிக் ஸ்ராட்
அலோய் சில்லு
டிஸ்க் பிறேக்
பாதுகாப்பு அலாம் மணி
சிவப்பு, நீலம், கறுப்பு வர்ணங்களில்

SUPER CUP

4 Stroke 90cc Air Cooled Engine
Starting System : Electric/ Kick
Detachable Rear Seat
Alloy Wheels
Drum Brakes
Colours: RED/BLACK / GREEN

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். சுன்னாகம். மானிப்பாய். சங்கானை. நெல்லியடி. சாவகச்சேரி. கிளிநொச்சி

தவணைக் கொடுப்பனவு முறையிலும் பெற்றுக்கொள்ளலாம்

சிங்கர் - யாழ் மண்ணின் பரம்பரைத் தோழன்.

இந்திய ஜெனரல் அசோக் மேத்தா மீது சிங்கள தேசியவாதிகள் பாய்ச்சல்

கொழும்பு, ஓக 12

இலங்கையில் இந்திய அமைதிப்படையில் பணியாற்றிய தளபதிகளில் ஒருவரான மேஜர் ஜெனரல் அசோக் மேத்தாவுக்கு எதிராகச் சிங்களத் தேசியவாதிகள் கடும் தாக்குதல் தொடுத்துள்ளனர்.

கொழும்பில் நடைபெற்ற பாதுகாப்புக் கருத்தரங்கில் உரையாற்றிய, இலங்கைப் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ, போரின் இறுதிக்கட்டத்தில் சரணடைந்த பெரும்பாலான விடுதலைப் புலிகள் விடுதலை செய்யப்பட்டு விட்டதாகவும், 383 பேர் மீது சட்ட நடவடிக்கை எடுப்பதற்கான விசாரணைகள் இடம் பெற்று வருவதாகவும் கூறியிருந்தார்.

இது குறித்து அந்தக் கருத்தரங்கில் கருத்து



வெளியிட்ட மேஜர் ஜெனரல் அசோக் மேத்தா, விடுதலைப் புலிகள் இயக்கத்தின் போராளிகள் அனைவருக்கும் ஜனாதிபதி பொது மன்னிப்பு அளிப்பது குறித்துச் சிந்திக்க வேண்டும் என்றும், போர்த்தந்திரங்களில் தேர்ச்சி பெற்றவர்கள் என்பதால் அவர்களை இலங்கை இராணுவத்தில் இணைத்துக் கொள்வது பயனுள்ளதாக இருக்கும்'' என்றும் குறிப்பிட்டிருந்தார்.

அவரது இந்த ஆலோசனை சிங்களத் தேசியவாதிகளிடையே கடும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

மேஜர் ஜெனரல் அசோக் மேத்தா, இலங்கை எதிர்ப்பு சக்திகளாலும், விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களாலும், தவறாக வழிநடத்தப் பட்டுள்ளதாகப் பல்வேறு சிங்களத் தேசியவாத ஊடகங்களும் கருத்து வெளியிட்டுள்ளன.

விடுதலைப் புலிகளைப் பற்றி அவர் நன்றாக அறிந்திருந்தும், அனைவருக்கும் பொதுமன்னிப்பு அளிக்க வேண்டும் என்று கூறியிருப்பதை வேடிக்கையான விடயம் என்றும் அந்த ஊடகங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

அதைவிட, விடுதலைப் புலிகளுக்குப் பொதுமன்னிப்பு அளிக்க வேண்டும் என்று கோரும் அவர், முதலில் ராஜிவ்காந்தி கொலை வழக்கில் தண்டனை பெற்றுள்ளவர்களுக்கு இந்தியா பொதுமன்னிப்பு அளிக்குமா என்று சிந்திக்க வேண்டும் என்றும் சிங்களத் தேசியவாதி ஒருவர் கேள்வி எழுப்பியுள்ளார். (த)

ஈழம் என்ற சொல்லுக்குத் தடை தமிழகத் தலைவர்கள் கொதிப்பு

சென்னை,ஓக 12

டெசோ மாநாட்டில் ஈழம் என்ற சொல்லுக்கு மத்திய அரசு தடை விதித்துள்ளதால் கொதித்துப்போயுள்ள தமிழக தலைவர்கள் கண்டன அறிக்கைகளை வெளியிட்டு மத்திய அரசை திட்டித் தீர்த்துள்ளனர்.

சென்னையில் டெசோ மாநாட்டில் ஈழம் என்ற வார்த்தையைப் பயன்படுத்துவதற்கு மத்திய அரசு விதித்த தடையை வாபஸ் பெற வேண்டும் என்று, விடுதலைச் சிறுத்தைகள் கட்சி தலைவர் திருமாவளவன் வற்புறுத்தினார்.

மதுரையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், சென்னையில் நடைபெறும் டெசோமாநாட்டில் ஈழம் என்ற வார்த்தையைப் பயன்படுத்துவதற்கு மத்திய வெளியுறவு அமைச்சகம் விதித்துள்ள தடையை வாபஸ் பெற வேண்டும்-என்றார்.

ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழர்களின் வாழ்வில் ஒன்றிப் போன பழந்தமிழ் சொல்லான ''ஈழம்'': என்பதையே பயன்படுத்தக் கூடாது என்று மத்திய அரசு தடை விதித்திருப்பது தமிழினத்தின் மீதான உச்சகட்ட அடக்குமுறையின் வன்மத்தின் வெளிப்பாடு என்று தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் நிறுவுநர் வேல்முருகன் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

தி.மு.க ஏற்பாட்டில் நடத்தப்படும் ''தமிழீழ ஆதரவாளர்கள் அமைப்பின்'' (டெசோ) மாநாட்டில் ''ஈழம்'' என்ற சொல்லை பயன்படுத்த மத்திய அரசு தடை விதித்து டெசோ அமைப்பாளர்களுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியிருக்கிறது. இது திமுகவுக்கும் மத்திய அரசுக்கும் இடையேயான விவகாரம் மட்டுமே அல்ல. ஒட்டு மொத்த தமிழினத்துக்கு எதிரான இந்திய மத்திய அரசின் உச்சகட்ட வன்மத்தின் துரோகத்தின் அடக்குமுறையின் வெளிப்பாடுதான் - என தமிழக வாழ்வுரிமைக் கட்சி கடும் கண்டனம் தெரிவித்துக் கொள்கிறது-என்றுள்ளது. (த)

தேர்தல் சட்டங்களை மீறிய 11 பேர் கைது

கொழும்பு,ஓக 12

மூன்று மாகாண சபைகளுக்குத் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் தேர்தல் சட்டங்களை மீறிய 11 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தேர்தல் நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிபொலிஸ்மாஅதிபர்காமினி நவரத்ன தெரிவித்துள்ளார்.

தேர்தல் சட்டங்கள் மீறப்பட்டமை குறித்து இதுவரை 14 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதென அவர் குறிப்பிட்டார்.

இதில் அதிகமானவை சட்டவிரோத பிரசாரம் மற்றும் அச்சுறுத்தல் தொடர்பானவை என அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (த)

எருமை மாடுகள் கடத்திய இருவர் விளக்கமறியலில்

யாழ்ப்பாணம்,ஓக.12

14 எருமை மாடுகளை சட்டவிரோதமாக இறைச்சிக்காக வாகனத்தில் ஏற்றிச் சென்ற குற்றச்சாட்டில் வாகன சாரதியையும் நடத்துநரையும் பூந்தோட்டம் பொலிஸார் கைது செய்தனர். அவர்கள் நீதிமன்ற உத்தரவுப்படி விளக்கமறியலில் வைக்கப் பட்டுள்ளனர் என்று யாழ்.பிரதிப் பொலிஸ் மா அதிபர் எரிக் பெரோரா தெரிவித்தார்.

14 எருமை மாடுகள் சட்டவிரோதமாக வாகனத்தில் ஏற்றிக் கொண்டு செல்லப்பட்டபோதே இவர்கள் பொலிஸாரிடம் மாட்டிக் கொண்டனர். கடந்த வியாழக்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றது. அவர்களிடம் மேற்கொண்ட விசாரணைகளில் இருந்து அவை இறைச்சிக்காக கொண்டு செல்லப்பட்டமை தெரியவந்தது.

இதேவேளை-

யாழ்.கொடிகாமத்திலும் ஆடு ஒன்றைக் கடத்திய குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்று அவர் மேலும் தெரிவித்தார். (த-4)

பரீட்சை மத்திய நிலையங்களில் அதிகாரிகள் சிலர் நிதி கொள்ளை

கொழும்பு, ஓக 12

பரீட்சை நிலையங்களில் உதவியாளர்கள் பணியில் இருந்ததாகக் கூறி பணம் பெற்றுக் கொள்ளப்படும் மோசடிச் செயல் இடம் பெற்று வருவதாகக் கல்வி சாரா ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது.

பரீட்சை மத்திய நிலையங்களில் உள்ள பரீட்சை அலுவலகங்களுக்கு ஒரு உதவியாளர் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். ஆனால் நாடு முழுவதும் உள்ள அநேக பரீட்சை நிலையங்களில் உதவியாளர்கள் பெற்றுக் கொள்ளப்படவில்லை எனக் கல்விசாரா ஊழியர் சங்கம் குற்றம் சுமத்தியுள் ளது.

இவ்வாறு உதவியாளர்களைப் பெற்றுக் கொள்ளாமல் போலிப் பெயர்களைக் கூறி உதவியாளர்களுக்கான பணத்தை சில பரீட்சை மத்திய நிலைய பொறுப்பதிகாரிகள் பெற்றுக் கொள்வதாகக் கல்விசாரா ஊழியர் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது குறித்துப் பல வருடங்களாகப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் உள்ளிட்ட அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளபோதும் நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட வில்லை என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(த)



உதயன் இணைய வானொலி

www.uthayanradio.com

தினமொரு பரிசுக் குலுக்கல்

"எப்பொழுதோ முடிந்த காரியம்", "ஒரு பொல்லாப்புமில்லை" போன்ற வாக்கியங்களின் ஊடாகத் தன் பக்தர்களுக்கு ஞானத்தைப் போதித்ததோடு "சிவதொண்டனி" ஆன்மீக ஏட்டினையும் ஆரம்பித்து நடத்திய ஈழத்துச் சித்தரின் இயற்பெயர் என்ன?

1. சதாசிவம் ☐ 3. ஆதி நாராயணன் ☐

2. குமாரசுவாமி ☐ 4. பரமேஸ்வரன் ☐

பெயர் :.....

முகவரி :.....

வயது :..... தொ.பே. இல :.....

சரியான விடைகளை எழுதி, பரிசுக் கூப்பனுடன் பருத்தித்துறை வீதி, நல்லூரில் (பாரதியார் சிலையடி) அமைந்துள்ள உதயன் இணைய வானொலியின் உற்சவ காலச் சிறப்புக் கலையகத்தில் வைக்கப்பட்டுள்ள பெட்டிகளில் இன்று மாலை 7 மணிக்கு முன் இடுவதன் மூலம் பெறுமதி மிக்க பரிசில்களை வெல்லும் வாய்ப்பு

1 ஆம் பரிசு : 4 GB பென் ட்ரைவ்

2 ஆம் பரிசு : கம்ப்யூட்டர் ருடே 6 மாத சந்தா

3 ஆம் பரிசு : அர்ச்சுனா சஞ்சிகையின் 6 மாத சந்தா

நேற்றைய புதிருக்கான விடை : தேவராய சுவாமிகள்

வெற்றிபெற்றோர் :

1ஆம் பரிசு	2ஆம் பரிசு	3ஆம் பரிசு
சி. ஸ்ருதி	சி. லிங்கேசன்	ஆ. மதுஷன்
கல்வியங்காடு	யாழ்ப்பாணம்	நல்லூர்.

பரிசுப் பணம் ஒன்றும் மேற்றிய 7.30 மணிக்கு நிறுவன கணக்கில் வரவு...

அறிமுகம்

BRITISH BUSINESS COLLEGE

140, கோவில் வீதி, நல்லூர்.

10வது வருடத்தில்

BBC

British BUSINESS COLLEGE

Play Group (2+ வருடங்களுக்கு) Montessori (3+ வருடங்களுக்கு) Pre-School (4+ வருடங்களுக்கு)

BBC'd பாலர் பாடசாலைகள்

British Business College இன் ஆங்கில பாட நெறிகள்

IELTS KET DIPLOMA Pre-Foundation

PET IN ENGLISH Level 1,2,3,4

Contact : 021 2225796, 0777 809653, 0776646337

சமாதானத்தை சீர்குலைக்காத போராட்டங்களுக்கு அனுமதி

பிரதிப் பொலிஸ் மா அதிபர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக.12

அரசியல் கைதிகளின் படுகொலையைக் கண்டித்தும் அரசியல் கைதிகளை விடுதலை செய்யக் கோரியும் யாழ்.நகரில் இடம்பெறவுள்ள கவனவீர்ப்புப் போராட்டம் சமாதானத்தைச் சீர்குலைக்காமலும் பொதுமக்களின் போக்குவரத்துக்கு இடையூறு விளைவிக்காமலும் இருக்குமானால் அதற்கு அனுமதி வழங்கப்படும் என்று யாழ்.பிரதிப் பொலிஸ் மாஅதிபர் எரிக் பெரோரா தெரிவித்தார்.

யாழ்.சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

தமிழ் அரசியல் கைதிகளான நிமலரூபன், டெல்றொக்சன் ஆகியோரின் படுகொலையைக் கண்டித்தும், தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யுமாறு கோரியும் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றைத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஏற்பாடு செய்துள்ளது. யாழ்.நகரில் எதிர்வரும் 15ஆம் திகதி புதன்கிழமை.இந்தப் பேரணி நடைபெறவுள்ளது.

இந்தக் கட்சியால் கடந்த முறை காணி சுவீகரிப்புக்கு எதிராக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஆர்ப்பாட்டத்தை யாழ்.பொலிஸார் யாழ். நீதிமன்ற உத்தரவு ஊடாகத் தடுத்தனர். பின்னர் யாழ். மேல் நீதிமன்றில் இதனை எதிர்த்து வழக்குத் தாக்கல் செய்தபோது அந்தத் தடை உத்தரவை மேல்நீதிமன்று நிராகரித்துத் தீர்ப்பளித்தது.

இந்தநிலையில் புதன்கிழமை இடம்பெறவுள்ள கவனவீர்ப்புப் போராட்டம் தொடர்பில் செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்கே மேற்கண்டவாறு பதிலளித்தார் எரிக் பெரேரா.

இதன்படி அன்றைய தினம் நடத்தப்படவுள்ள கவனவீர்ப்புப் போராட்டம் சமாதானத்தைச் சீர்குலைக்காமலும், பொதுமக்களின் போக்குவரத்துக்கு இடையூறு விளைவிக்காமலும் இருக்குமானால் அதற்கு அனுமதி வழங்கப்படும் என்று அவர் தெரிவித்தார்.

யாழ்.பிரதிப் பொலிஸ் மா அதிபர் எரிக் பெரேரா தலைமையில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் யாழ்.சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஸ்ரீ.குகனேசன், யாழ்.மாவட்ட உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ரணவீர, பதில் பொலிஸ் அத்தியட்சகர் போவத்த, யாழ்.தலைமைப் பொலிஸ் பொறுப்பதிகாரி சமன் சிகேர, கோப்பாய் பொலிஸ் பொறுப்பதிகாரி ஆகியோர் கலந்து கொண்டனர். (த-4-86)

யாழ். கடல் நீரேரியில் அனுமதியின்றி கடலட்டை, நண்டு பிடிக்கத் தடை

கடல்தொழில் நீரியல் வளத்துறை திணைக்களத்தின் உதவிப்பணிப்பாளர்

யாழ்ப்பாணம், ஒக.12

யாழ். மாவட்டத்தில் உள்ள கடல் நீர் ஏரியில் கடற்றொழில் பணிப்பாளர் நாயகத்தின் அனுமதியின்றி கடலட்டை, நண்டு பிடிப் பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று யாழ். மாவட்ட கடல் தொழில் நீரியல் வளத்துறை திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் என்.கணேசமூர்த்தி தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடல் நீர் ஏரிகளில் தொழிலாளர்கள் தமக்கென ஒரு இடத்தைப் பிடித்து அடைத்துக் கொண்டு தொழில் செய்து வருகின்றனர். கடலட்டைகள், நண்டுகள் என்பன ஆழ்கடலில் பிடிக்க முடியாது.

இதற்காக ஓரளவு நீர்ப் பரப்பிலே தடிகள் குற்றப்பட்டு, துளைகள் போட்டு வேலியடைத்து கடலட்டை குஞ்சுகள் விட்டு வளர்க்கப்படுகின்றன.

கடலட்டைகள் பெறுமதி வாய்ந்ததால் அவற்றை வளர்ப்பதற்கு கடற்றொழிலாளர்கள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

கடலட்டைகள், நண்டு பிடிப்பதற்கு தடை இல்லை. ஆனால் கடற்றொழில் பணிப்பாளர் நாயகத்தின் அனுமதி பெற்றிருக்க வேண்டும்.

அவ்வாறு கடலட்டை நண்டு பிடிக்க விரும்புபவர்கள் தமக்கு அனுமதி வழங்க வேண்டும் என்ற கடிதத்தை வழங்க வேண்டும். பின் பணிப்பாளர் அனுமதி கிடைத்ததும் தொழில் செய்ய முடியும்.

தீவுப் பகுதிகளிலேயே அதிகம் சட்டவிரோதமாக கடலட்டைகள் பிடிக்கப்பட்டு வருகின்றன.- என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-13)

இயந்திரம் பழுதடைந்தமையால் 'எக்ஸ்றே' பணிகள் மந்தகதியில்

போதனா வைத்தியசாலை நோயாளிகள் சிரமத்தில்

யாழ்ப்பாணம், ஒக. 12

யாழ். போதனா வைத்திய சாலையில் எக்ஸ்றே எடுத்த பட்ப்பிரதிகளைக் கழுவிப் படமாக்கும் இயந்திரம் நேற்று முன்தினம் பழுதடைந்து விட்டது. அதனால் யாழ். போதனா வைத்திய சாலையில் அவசர நோயாளர்களுக்கு மட்டும் எக்ஸ்றே எடுத்து பிரதிகள் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு கழுவி மீள எடுக்கப்படுகின்றன.

எனினும் அந்த இயந்திரத்தைத் திருத்துவதற்கென கொழும்பிலிருந்து தொழில்நுட்பவியலாளர்கள் வந்து திருத்தும் பணியில் ஈடுபட்டுள்ளனர் என்று வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி எஸ். ஸ்ரீபவானந்தராஜா தெரிவித்தார்.

ஒவ்வொரு நாளும் நூற்றுக்கணக்கான நோயாளர்களுக்கு எக்ஸ்றே எடுக்க வேண்டிய நிலையுள்ளது. எக்ஸ்றே எடுத்து அதனைக் கழுவிப் படமாக்கும் இயந்திரம் பழுதடைந்துள்ளதால் தற்போது அவசர நோயாளர்களுக்கு மாத்திரமே எக்ஸ்றே எடுக்கப்பட்டு வருகின்றது. சாதாரண நிலையிலுள்ள நோயாளர்களுக்கு வேறு திகதி வழங்கப்பட்டு வருகின்றது எனத் தெரிவிக்கப்படுகின்றது. முன்னர் எக்ஸ்றே இயந்திரம் அடிக்கடி பழுதடைந்து வந்த நிலையில் தற்போது எக்ஸ்றே பிரதிகளைக் கழுவும் இயந்திரமும் பழுதடைந்துள்ளது.

எனினும் ஒரு சில நாள்களில் இயந்திரம் திருத்தப்பட்டுவிடும் அதன் பின்னர் வழமையான பணிகள் இடம் பெறும் என்று பணிப்பாளர் தெரிவித்தார். (4)

ஜனநாயக ரீதியாக உருவாகிய அமைப்பை தடை செய்வது என்பது நியாயமானதா?

கேள்வி எழுப்புகிறார் தவரட்ணம்

யாழ்ப்பாணம், ஒக.12

ஜனநாயக ரீதியாக மக்களால் தெரிவுசெய்யப்பட்ட அமைப்புக்களை உருவாக்குவதைத் தடை விதிப்பதற்கு யாருக்கு அதிகாரம் உள்ளது? அப்படித் தடை விதிப்பது நியாயமானதா?

இவ்வாறு கேள்வி எழுப்பினார் வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டமைப்பின் தலைவர் சி.தவரட்ணம்.

மாதகல் மேற்கில் கிராமிய கடற்றொழில் அமைப்பு ஒன்று புதிதாக அங்குரார்ப்பணம் செய்து வைக்கப் பட்டது.

யாழ்.மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் என்..கணேச மூர்த்தியின் பணிப்பில் இந்த அமைப்பு 150 உறுப்பினர்களுடன் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

இந்த அமைப்பு அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்ட சில நாள்களிலேயே, கடற்றொழில் அமைச்சரினால் இந்த அமைப்பு தடை செய்யப்பட்டுள்ளதாக உதவிப் பணிப்பாளர் ஊடாகத் தெரியப்படுத்தப் பட்டிருந்தது.

இந்த விடயம் தொடர்பாக கருத்துத் தெரிவிக்கும் போதே வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டமைப்பின் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மக்கள் அவர்களின் சுயவிருப்பின் அடிப்படையில் ஜனநாயக ரீதியாகப் புதிய அமைப்பைத் தெரிவு செய்கின்றனர். அவ்வாறு மக்களால் தெரிவு செய்யப்படுகின்ற அமைப்புக்குத் தடை விதிப்பதற்கு யாருக்கு அதிகாரம் இருக்கின்றது.

கடற்றொழிலாளர்களை - இந்தச் சமூகத்தை ஏன் கேவலப்படுத்த நினைக்கிறார்கள்.

இதேபோன்று கடற்றொழில் சங்கங்களை அங்கீகரிப்பதற்கும் இழுத்தடிப்புச் செய்வது ஏன்?

எனவே இந்த விடயங்கள் தொடர்பில் கடற்றொழில் சமூகத்தைப் புண்படுத்தாத வகையில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்-என்றார். (த-5)

வீதிகளின் திருத்தப் பணி அரைகுறையில் பயணிகளின் போக்குவரத்து நெருக்கடியில்

யாழ்ப்பாணம், ஒக.12

யாழ். குடாநாட்டு பிரதான வீதிகளின் புனரமைப்பு பணிகள் அரைகுறையாக மேற்கொள்ளப்படுவதால் வீதியால் பயணிக்கும் மக்களும் மற்றும் வாகன சாரதிகளும் பெரும் சிரமப்பட்டு வருகின்றனர்.

வீதியோரங்கள் அவசர அவசரமாக வெட்டப்பட்டும் கூட அவை நிரப்பப்படாமல் பெரிய கிடங்காகக் காணப் படுகின்றன.

அதனைவிட கால்வாய்கள் புனரமைப்புக்காக தோண்டப்பட்டும் அவை உரிய முறையில் சீர் செய்யப்படாத நிலையில் காணப்படுகின்றன.

இவ்வாறு குடாநாட்டின் பிரதான வீதிகள் உரியமுறையில் புனரமைப்பு பணிகள் முன்னெடுக்கப்படாத நிலையில் பாதசாரிகள் மற்றும் வாகன போக்குவரத்துச் செய்வோர் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

அனேகமான வீதிகளின் அகலிப்புக்காக வீதியோரங்கள் கிளறப்பட்ட நிலையில் உள்ளதால் இரவில் வீதியால் பயணிப்பவர்கள் அந்த கிளறப்பட்ட பாதுகாப்பற்ற தாழ்ந்த இடங்களில் விழுந்து விபத்துக்கு ஆளாக வேண்டிய நிலைமை தொடர்ந்து வருகிறது.

குறிப்பாக யாழ். நகரில் போக்குவரத்து நெரிசல் அதிகரித்துக் காணப்படும் யாழ். பிரதம தபாலக சுற்று வட்டத்திற்கு அருகில் கால்வாய்க்கென தோண்டப்பட்ட குழி அரைகுறையாக புனரமைப்பு இன்றி காணப்படுகின்றது.

போதிய பாதுகாப்பற்று காணப்படும் இந்த தாழ்ந்த குழியால் வீதியால் பயணிப்போர் சிரமப்பட்டும் வருகின்றனர்.

இவ்வாறு குடாநாட்டின் பல்வேறு இடங்களிலும் வீதிப் புனரமைப்புகளின் போது அரைகுறையாக மேற்கொள்ளப்படும் பணிகளால் மக்களே பெரிதும் பாதிக்கப் படுகின்றனர்.

இந்த விடயம் குறித்து வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் கேட்டபோது:-

இந்தப் புனரமைப்பு பணிகள் தென்பகுதி தனியார் ஒப்பந்தகாரராலேயே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்தப் புனரமைப்பு பணியை துரிதப்படுத்துமாறு சபை கேட்டுள்ளது. எனினும் பணிகள் தாமதமாகவே இடம்பெற்று வருகின்றன.-என்று கூறப்பட்டது. (ம-17)

டெல்றொக்ஷனின் இறுதியாத்திரை..

சீனாவுக்குக் காணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வான்கல உதிரிப்பாகங்களை உற்பத்தி செய்யும் சீன நிறுவனம் ஒன்றுக்கு வழங்கியுள்ளது. இலங்கையின் இந்த நடவடிக்கை குறித்து இந்தியா கடும் அதிருப்தி வெளி யிட்டுள்ளது. இலங்கை அரசிடம் இந்தியாவின் இந்த அதிருப்தி நேரடியாக வெளிப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது. (த)

அண்ணா ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாநாட்டுக்கு 2500 பேருக்கு மட்டுமே அழைப்பிதழ் அனுப் பப்பட்டுள்ளது. எனவே 8000க்கும் குறைவானவர்களே வருவார்கள் என்று டெசோ மாநாட்டு அமைப்பாளர்கள் சார்பில் வாதம் முன்வைக்கப்பட்டது.மாநாடு நடத்துவது பாதுகாப் புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் என்று உளவுத் துறை தகவல் அளித்துள்ளதாகவும், பயங்கரவாதத் தாக்குதல் ஏதேனும் நடத்தப்படலாம் என்பதால் அனுமதி மறுக்கப் பட்டதாகவும் அரசு சார்பில் தெரிவிக்கப்பட்டது.

இரு தரப்பு வாதத்தையும் கேட்ட நீதிபதி போல் வசந்த குமார், டெசோ மாநாட்டுக்கு 8000க்கும் மேற்பட்டவர்கள் வந்தால் என்ன செய்வீர்கள்? மாநாட்டுக்கு வருபவர்களின் பாதுகாப்புக்கு டெசோ மாநாட்டு ஒருங்கிணைப்பாளர்கள் பொறுப்பேற்றுக் கொள்வார்களா? டெசோ மாநாட்டுக்கு அனுமதி கோரியவர் ஒருவர்? தற்போது வழக்குத் தொடர்ந்திருப்பவர் வேறொருவரா? இதில் யார் பொறுப்பேற்பது? ஒரு வேளை சில நிபந்தனைகளுடன் பொலிஸ் அனுமதி அளித்தால் அதனை ஏற்றுக்கொள்வீர்களா? என நீதிபதி சரமாரியாகக் கேள்விகளை எழுப்பினார்.

மேலும், டெசோ மாநாட்டுக்கு வருபவர்களின் பாதுகாப் புக்கு நாங்கள் பொறுப்பு என்று எழுதிக்கொடுத்தால் பொலிஸ் அனுமதி அளிக்குமா எனவும் அவர் அரசிடம் கேட்டார்.

பின்னர், டெசோ மாநாடு குறித்த முக்கிய வழக்கு டிவி ஷன் பெஞ்ச் முன்பு இருப்பதால் இந்த வழக்கை தான் விசாரிப்பது சரியாக இருக்காது. இந்த வழக்கு ஆவணங்களையும் தலைமை நீதிபதிக்கு அனுப்பி வைக்கிறேன் என்று கூறி வழக்கை விசாரிக்க மறுப்புத் தெரிவித்துவிட்டார்.

இதனைத் தொடர்ந்து தி.மு.க. தலைவர் கருணாநிதி தனது கோபாலாபுரம் வீட்டில் கட்சி நிர்வாகிகளுடன் அவசர ஆலோசனை நடத்தினார்.உயர்நீதிமன்றத்தில் அனுமதி கிடைக்காமையால் அண்ணா அறிவாலயத்தின் பின்புறம் உள்ள கலைஞர் அரங்கில் மாநாட்டை நடத்தி முடிக்க தி.மு.க. திட்டமிட்டு இருப்பதாகத் தெரிகிறது.

இதேவேளை, சென்னையில் இன்று இடம்பெறவுள் ளதாக அறிவிக்கப்பட்ட டெசோ மாநாட்டில்கலந்து கொள்வதில்லை எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தீர்மானித்துள்ளது. (த)

ஈழத்துக்கு இந்தியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வியாழக்கிழமையன்று டெசோ மாநாட்டு அமைப்பின் செயலர் ஹஸன் முகமது ஜின்னாவுக்கு கடிதம் அனுப்பியிருந்தது.இந்த நிலையில், இதற்குத் தி.மு.க தலைவர் கருணாநிதி உள் ளிட்ட பல தலைவர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்தார்கள். ஈழம் என்பது பல்லாண்டுகளாகப் பயன்படுத்தப்படும் வார்த்தை என்றும், அதில் தவறு ஏதும் இல்லை என்றும் அவர்கள் தெரி வித்திருந்தனர். இது தொடர்பாக, மத்திய அரசுக்கு தி.மு.க சார்பில் கடிதமும் அனுப்பப்பட்டது.

இந்த நிலையில், ஈழம் என்ற வார்த்தையைப் பயன்படுத் திக்கொள்ள மத்திய அரசு தற்போது அனுமதியளித்துள்ளது. டெசோ மாநாடு தொடர்பான வழக்கு விசாரணை நேற்று சனிக் கிழமை சென்னை உயர்நீதிமன்றத்தில் நடைபெற்றபோது, டெசோ மாநாட்டு அமைப்பாளர்கள் சார்பில் ஆஜரான வழக்கறிஞர் வில்சன் இந்தத் தகவலை நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

இதேவேளை, டெசோ மாநாட்டில், ஈழம் என்ற சொல்லைப் பயன்படுத்த இந்திய மத்திய அரசு தடைவிதித்துள்ளபோதும், மாநாட்டில் அந்த வார்த் தையைப் பயன்படுத்துவது எனத் தி.மு.க. முன்னதாக முடிவு செய்திருந்தது.

''பட்டினப்பாலை என்ற இலக்கிய நூலில் பூம்புகார் கடற் கரையில் வந்து நின்ற படகுகளில் இறக்குமதி, ஏற்றுமதிக் காக வந்த பொருள்கள் என்ன என்பதைக் குறிக்க ஈழத்து உணவும் காழகத் தாக்கமும் என்ற வார்த்தைகள் இடம் பெற்றுள்ளன.எனவே ஈழம் என்பது இல்லாத சொல் அல்ல, கற்பனை சொல்லும் அல்ல. வரலாற்றிலேயே இடம்பெற்ற சொல்'' என்று தி.மு.க. தெரிவித்திருந்தது. (த)

இரத்தம் கொதிக்கிறது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொலைகளுக்கு எதிராகத்தான் நாங்கள் கிளர்ந்தெழுந்தோம். இதற்காகத்தான் டெல்றொக்ஷன் கைது செய்யப்பட்டு அதற்காகவே படுகொலையும் செய்யப்பட்டுள்ளார்.

தமிழர்கள் வெள்ளைவானில் கடத்தப்படுகின்றபோதும் நடு வீதியில் சுட்டுக் கொல்லப்படுகின்ற போதும் பத்திரிகை யாளர்கள் கொலை செய்யப்படுகின்ற போதும் விசாரணை செய்யப்படுகின்றோம். கொலையாளிகள் இன்னும் பிடிபடவில்லை என்று அரசு தெரிவிக்கின்றது.

ஆனால் டெல்றொக்ஷன் விடயத்தில் இவ்வாறு செய்ய முடியாது. ஏனெனில் அவர் படுகொலை செய்யப்பட்டது அரச பாதுகாப்புடனான சிறைச்சாலைக்குள். 3 வருடங் களுக்கு முன்னர் முள்ளிவாய்க்காலில் பல்லாயிரக்கணக் கான தமிழர்களை இந்த அரசு கொன்று குவித்தது. இருப்பினும் அதன்மூலம் இன்னும் திருப்தி அடையாத அரசு இப்போதும் தமிழர்களைத் தேடி தேடி கொல்கின்றது.

இதற்கு நாம் மேற்கொள்ளும் ஜனநாயக ரீதியான போராட்டங்கள் மூலமே பதில் சொல்ல முடியும். இந்தப் படுகொலைகளை செய்யும் அரசுக்கு எதிராக தேசிய, சர்வ தேச மட்டத்தில் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண் டும். நாம் எமது சொந்த மண்ணில் போராடினால்தான் சர்வ தேசம் துணைக்குவரும். டெல்றொக்ஷனின் மரணம் சொல் லும் செய்தியும் நாம் போராட வேண்டும் என்பதே - என்றார்.

தொடர்ந்து உரையாற்றிய ஐக்கிய சோஷலிச கட்சியின் செயலாளர் சிறிதுங்க ஜெயசூரிய,

மன்னார் நீதிமன்றச் சம்பவம் தொடர்பாக வருத்தத்தைத் தெரிவித்த ஜனாதிபதிக்கு, படுகொலை செய்யப்பட்ட டெல் றொக்ஷனின் தாய்க்கு முன்பாக வந்து மன்னிப்புக் கேட்ப தற்கு ஏன் முடியாமல் இருக்கின்றது.

இந்த நாட்டில் சாதாரண மக்களுக்கு இருக்கின்ற நீதி, டெல்றொக்ஷன், நிமலரூபனுக்குக் கிடைக்கவில்லை - என்றார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப் பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் உரையாற்றுகையில்:-

படுகொலை செய்யப்படுபவர்கள் தமிழர்களாக இருப்ப தால் விசாரணைகள் எதுவும் இல்லை. இந்த நாடு ஜனநாயக சூழலில் இல்லை. ஒன்றில் இராணுவ ஆட்சி அல்லது பொலிஸ் இராச்சியம் தான் உள்ளது.

டெல்றொக்ஷனை மருத்துவமனையிலும் காலில் விலங் குடன் வைத்திருந்தார்கள். நாங்கள் வெளியிலே கொண்டு சென்று சிகிச்சையளிப்பதற்கு கேட்போது மறுத்த இந்த அரசு இன்று சாகும்வரை வைத்து வேடிக்கை பார்த்திருக்கிறது - என்றார்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் குமார் பொன்னம்பலம் கஜேந்திரகுமார் தனது உரையில்:-

சிறைச்சாலைக்குள் படுகொலை செய்யப்படுவது இன்று நேற்று நடந்த விடயமல்ல. காலம் காலமாக இந்த அரசுகள் இந்தப் படுகொலையைச் செய்துகொண்டிருக்கின்றன. நாம் இந்தப் பிரச்சினையை சரியான முறையில் இனங்காணாவிட் டால் இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கமுடியாது. (த-5)

பக்கச் சார்பற்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாடு விரைவில் நடைபெறவுள்ள நிலையில், இலங்கையின் பிரச்சினை சர்வதேச கண்ணுக்கு மீண்டும் வெளிப்படும்.எனினும், இதன்போது ஒருபக்கம் அல்லாது, இலங்கைப் படையினரும் அதேநேரம் விடுதலைப் புலிகளும் செய்த போர்க்குற்றங் களும் முன்னிலைப்படுத்தப்படும் என்று ஆனந்த பத்ம நாபன் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை அரசைப் பொறுத்தவரையில், மனித உரிமை கள் மீறல் தொடர்பில் பக்கச்சார்பற்ற விசாரணைகளை மேற்கொள்ள வேண்டிய பெரும் பொறுப்பை அது கொண் டுள்ளது என்றும் அவர் கூறினார்.

புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புலம்பெயர் நாடுகளில் இருந்து வந்த புலிகளின் ஆதர வாளர்கள் முன்னாள் புலிகளின் புனர்வாழ்வு நடவடிக்கை, அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பான விடயங்கள் என்பவற்றைக் கோத்தபாயவிடம் இருந்து கேட்டறிந்து கொண்டனர். அதேவேளை இலங்கையில் முதலிடுவதாக இருந்தால் தமக்கு அதற்குச் சாதகமான சூழல் ஏற்படுத் தப்பட வேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தியதாகவும் -

அத்தகைய ஒரு சூழல் ஏற்படுவது இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதில்தான் தங்கி இருக்கிறது என்று அவர்கள் கூறியதாகவும் -

அவ்வாறான சூழலிலேயே நம்பிக்கையுடன் முதலிட புலம்பெயர் தமிழர்கள் முன்வருவார்கள் என்று அவர்கள் சுட்டிக்காட்டினர் என்றும் -

சந்திப்பில் கலந்து கொண்டவர்கள் தரப்பிலிருந்து தெரிவிக்கப்பட்டது.

ஆஸ்திரேலியா, கனடா, ஐக்கிய ராச்சியம் (லண்டன்), சுவிஸ், பிரான்ஸ், நோர்வே ஆகிய நாடுகளைச் சேர்ந்த வர்களை உள்ளடக்கிய 22 பேரே இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர். அதன் பின்னர் அவர்கள் வடக்கு -கிழக்குப் பகுதிகளுக்கும் பயணம்செய்து நிலைமைகளை நேரில் அவதானித்துள்ளனர். (உ-01)

கூடியிருந்தவர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுப் பெரும் திரளான மக்கள், அரசியல் தலைவர்கள், மனித உரிமை ஆர்வலர்கள் திரண்டு வந்து அவரது இறுதி ஊர்வலத்தில் கலந்துகொண்டனர்.

டெல்றொக்ஷனின் சடலம் அஞ்சலிக்காக வைக்கப்பட்டி ருந்த அவரது வீட்டுக்கு அண்மித்த பகுதிகளில் பொலிஸார் மற்றும் கலகமடக்கும் பொலிஸார் வாகனங்கள் சகிதம் குவிக்கப்பட்டிருந்தனர்.அத்துடன் இராணுவப் புலனாய்வுப் பிரிவினரும் அந்தப் பகுதிகளில் காணப்பட்டனர்.

இவ்வாறானதொரு நிலையில், டெல்றொக்ஷனின் உடலுக்கு அஞ்சலி செலுத்துவதற்காகத் தெற்கில் இருந்து அர சியல் பிரமுகர்கள், மனித உரிமை செயற்பாட்டாளர்கள் உட் பட முக்கிய பிரமுகர்கள் இறுதிச் சடங்குக்கு வந்திருந்தனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப் பினர்களான சுரேஷ் பிரேமச்சந்திரன், செல்வம் அடைக் கலாநாதன், சிறிதரன், சிவசக்தி ஆனந்தன், முன்னாள் நாடா ளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செ.கஜேந்திரன், கே.சிவாஜிலிங்கம், ஆனந்த சங்கரி ஆகி யோருடன் ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன், ஐக்கிய சோசலிசக் கட்சியின் செயலாளர் சிறிதுங்க ஜயசூரிய மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாநகர சபை உறுப்பினர்கள், பிரதேச சபைகளின் தவிசாளர்கள் உட்பட பலர் டெல்றொக்சனின் உடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்தினர்.

ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்ட சடலம் பாசையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் வைத்துத் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டுப் பின்னர் 'பாண்ட்' வாத்தியங்கள் முழங்க ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு நல்லக்கம் செய்யப்பட்டது. பாசையூரியல் இருந்து யாழ்.மரியன்னை தேவாலயத்துக்கு அண்மையில் அமைந்துள்ள கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலை வரை சடலம் ஊர்வலமாக எடுத்துச் செல் லப்பட்டது. சேமக்காலையில் பெற்றோர், உற்றார் கதறியழ கூடியிருந்தவர்கள் கண்ணீர் மல்க டெல்றொக்ஷனின் சடலம் அடக்கம் செய்யப்பட்டது. (த-5)

பாடசாலை பஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டத்தில் ஆரம்பிக்கப்பட் டுள்ளதாக மாவட்ட சிறுவர் பாது காப்பு அதிகாரி த.செல்வகுமார் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையானது நாடா ளாவிய ரீதியில் பாடசாலை சேவையில் ஈடுபடும் வாகனங் களைப் பதிவுசெய்து அனுமதிப்பத்திரம் வழங்கும் நடவடிக் கையில் ஈடுபட்டுள்ளது.

சிறுவர் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும், பாட சாலை சேவையில் ஈடுபடும் வாகனங்களைப் பதிவு செய்து அனுமதிப்பத்திரம் வழங்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

சிறுவர் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும், பாட சாலை சேவையில் ஈடுபடும் வாகனங்களின் தரத்தை உறு திப்படுத்துவதற்கும், சாரதி மற்றும் உதவியாளர்களின் விவ ரங்களைச் சேகரிப்பதையும் நோக்கமாகக் கொண்டு இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

இதற்கமையவே வடக்கு மாகாணத்தில் முதற்கட்டமாக வவுனியாவில் இந்த நடைமுறை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கடந்த புதன்கிழமை பாடசாலைச் சேவையில் ஈடுபடும் 7 வாகனங்களுக்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் செப்ரெம்பருக்கு முன்னர் பாடசாலைச் சேவையில் ஈடுபடும் அனைத்து வாகனங்களும் அனுமதிப் பத்திரம் பெறல் வேண்டும். தவறும் வாகனங்களுக்கான அனுமதி செப்ரெம்பருக்குப் பின்னர் கட்டுப்படுத்தப்படும். அனுமதிப் பத்திரம் பெறுவதற்கான விண்ணப்பப் படிவத்தை வவுனியா மாவட்ட தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை யில் பெறலாம். - என்றார். (த-4)

இலங்கை குறித்த விடய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உரிமைகள் சபையில் இலங்கை மீது அமெரிக்கா வால் கொண்டு வரப்பட்ட தீர்மானத்தை இந்தியா ஆதரித்ததிலி ருந்து இது வரை இறுக்கமான கருத்தெதனையும் வெளிப் படுத்தாத ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, தமது மௌனத் தைக் கலைத்துக் கொண்டு இந்தக் கருத்தை வெளியிட் டுள்ளார்.

கடந்த மார்ச் மாதத்தில் ஐ.நா. மனித உரிமைகள் சபை அமர்வில் அமெரிக்காவின் தீர்மானத்துக்கு ஆதரவாக இந்தியா வாக்களித்ததற்குப் பின்னர், முதல் தடவையாக 'ரைம்ஸ் ஒவ் இந்தியா'வுக்கு அலரி மாளிகையில் வைத்து ஜனாதிபதி மஹிந்த இந்தச் செவ்வியை வழங்கியுள்ளார்.

மனித உரிமை மீறல்களுக்கு எதிரான தீர்மானத்தின் வலு வைக் குறைக்க, இந்தியா இலங்கைக்கான தனது ஆதரவைத் தொடருமானால், இலங்கைக்கு எதிராக இனி எந்தவொரு தீர்மானமும் முன்வைக்கப்பட வாய்ப்பிருக்காது என ஜனாதிபதி இந்தச் செவ்வியில் தெரிவித்துள்ளார்.

எந்தவொரு நல்ல முயற்சியும் எப்போதும் பாராட்டுக்கு உள்ளாகும். நாம் கோரிய கால அவகாசத்துக்கு இந்தியா ஆதரவளித்திருந்தால் ஐ.நாவில் இத்தகையதொரு தீர்மானம் முன்வைக்கப்படாதிருந்திருக்கக்கூடும்.

இந்தியா தனது அயல் நாடுகளுடன் சரியான விதத்தில் தொடர்புகளைப் பேணுவதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று ஜனாதிபதி குறிப்பிட்டார்.

அமெரிக்காவின் தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களித் ததால் இந்தியாவுக்கு எதிரான உணர்வலைகள் இலங்கை மக்கள் மத்தியில் உருவானமை குறித்த கேள்விக்குப் பதில ளித்த ஜனாதிபதி, இலங்கையரும் இந்தியர்களும் ஒரே இன மல்ல. அதேபோன்று மக்களும் உணர்வுகள் அற்றவர்களல்ல. இந்தியாவும் இலங்கையும் ஒரே கலாசார மற்றும் வரலாற்று பெறுமதிகளைப் பகிர்ந்து கொண்டால் நாம் மேற்குறித்த நிலைப்பாடு குறித்து சிந்திக்கலாம் எனத் தெரிவித்தார்.

இரு நாடுகளும் இணைந்து பயணிக்க வேண்டியுள்ளது. இவ் விரு நாடுகளுக்கும் இடையேயான பிணைப்பு ஜெனிவா வாக்களிப்பால் மாறியுள்ளதாக நான் உணரவில்லை. நடந்து முடிந்தவையாகவே இருக்கப்படும். தற்போது எதிர்காலம் பற்றி நாம் சிந்திப்போம். எமக்கு இடையே நெருங்கிய நட்பு நிலவுகிறது. இரு நாடுகள் மத்தியிலும் தொடர்ந்தும் நல்லுறவு நிலவுகிறது என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

இலங்கையில் சீனத் தலையீடு அதிகரிப்பதாக கூறப்படுவது பற்றி அவர் குறிப்பிடுகையில்,

இந்தியா சீனாவுடன் கொண்டிருக்கும் வர்த்தகத் தொடர்பு அளவுக்கு இலங்கை கொண்டிருக்கவில்லை எனத் தெரிவித்தார்.

இலங்கையின் ஏற்றுமதி, இறக்குமதி, வர்த்தகம், தொழில் துறை முதலீடுகளில் இந்தியாவே முன்னுரிமை வகிக்கிறது. ஆசிய வலய முன்னணியில் இந்தியா கொண்டுள்ள ஆர் வத்தை இலங்கை தடுக்காது. இந்தியாவின் அத்தகைய அச்சம் எதுவும் காணப்படவில்லை எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

சீனாவினால் நிர்மாணிக்கப்படும் அம்பாந்தோட்டை துறைமுகம் மற்றும் விமான நிலையத்தில் செயற்பாட்டு நிர் வாகம் சீனாவிடம் ஒப்படைக்கப்படமாட்டாதென உறுதிமொழி எதனையும் ஜனாதிபதி இந்தச் செவ்வியின்போது வழங்க வில்லை.

அம்பாந்தோட்டை வேலைத்திட்டத்தை ஏற்குமாறு முதலில் இந்தியா கோரப்பட்டதாகவும், கொழும்புத் துறை முக நிர்மாண ஒப்பந்தம் ஹொங்ஹொங்கைத் தளமாகக் கொண்டியங்கும் ஒரு நிறுவனத்துக்கு வழங்கப்பட்ட தாகவும், இந்தியா கொழும்புத் துறைமுக நிர்மாண சேவை களைப் பெற்றுக்கொள்ள விருப்பம் வெளிப்படுத்த வில்லையெனவும் அவர் தெரிவித்தார்.

சீனா 2009ஆம் ஆண்டில் முடிவடைந்த யுத்தத்துக்கு உதவியமைக்காக ஜனாதிபதி நன்றி தெரிவித்தார்.

சரியான கோணத்தில் ஒரு விடயம் குறித்து பார்வை யைச் செலுத்துவது முக்கியமானது. இந்தியா காங்கேசன் துறை துறைமுக நிர்மாணத்தை கையேற்றுள்ளது. சீனா அம்பாந்தோட்டை துறைமுகத்தை நிர்மாணிக்கிறது. இந்தியா பலாலி விமான நிலையத்தை புனர்நிர்மாணம் செய்கிறது எனவும் ஜனாதிபதி தனது செவ்வியில் குறிப்பிட்டார். (த)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

‘தேசத்தின் மகுடம்’ கண்காட்சி வடக்கில் நடத்த முடியுமா?

ஆராய்கிறது ஜனாதிபதி செயலகம்

யாழ்ப்பாணம்.ஓக.12

வடமாகாணத்தில் தேசத்தின் மகுடம் கண்காட்சியை 2014இல் நடத்துவதா? கைவிடுவதா? என்பது குறித்து ஜனாதிபதி செயலகம் ஆராய்ந்து வருகின்றது.

2013 தேசத்தின் மகுடம் கண்காட்சி கிழக்கு மாகாணத்தில் இடம்பெறவுள்ளது. மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை, பொலநறுவை ஆகிய மாவட்டங்களை மையமாக வைத்தே இந்தக் கண்காட்சி இடம் பெறவுள்ளது.

இதில் ஏற்கனவே தென்னிலங்கையில் காட்சிப் பொருள்களாக வைக்கப்பட்ட சில கூடங்கள் தவிர்க்கப்படலாம் எனத் தெரியவருகிறது.

எனினும் வடமாகாணத்தில் 2014 இல் இந்தக் கண்காட்சியை நடத்துமாறு வடபகுதியில் உள்ள அரச திணைக்களத் தலைவர்களும், அமைச்சர்களும் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

போரினால் பாதிக்கப்பட்ட மாகாணம் ஒன்று மீளக் கட்டியெழுப்பப் பட்டு வரும் இந்த வேளையில் வடக்கு மாகாணத்திலும் முக்கியத்துவம் கொடுத்து ‘தேசத்தின் மகுடம்’ கண்காட்சியை வடக்கில் நடத்துவதற்கான சாத்தியக் கூறுகளே அரச மட்டத்தில் வலுவாக உள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (த-41)

கல்வி அமைச்சின் சுற்றறிக்கைகளை அதிகாரிகள் பின்பற்றுவது அரிது

இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம் .ஓக.12

கல்வி அமைச்சின் சுற்றறிக்கைகளை வலயக் கல்விப் பணிப்பாளர்கள் பின்பற்றுவது அரிதாகவுள்ளது. அது தொடர்பில் மேலதிகாரிகளும் நடவடிக்கை எடுப்பது இல்லை என்று இலங்கை ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ரான்லின் குற்றம் சுமத்தியுள்ளார்.

இது பற்றி அவர் மேலும் கூறியதாவது:-

தேசிய கல்வி நிறுவகம் ஆசிரியர்களுக்கு பட்டப்படிப்பு கற்கை நெறிகளை ஒழுங்கு செய்து நடத்திவருகிறது. வார இறுதி நாள்கள் மற்றும் விடுமுறை நாள்களில் இந்தக் கற்கை நெறிகள் இடம்பெறுகின்றன.

இவர்கள் பரீட்சை எழுதுவதற்கு முன்னர் 10 நாள்கள் விசேட விடுமுறை வழங்கப்பட வேண்டும் என்று கல்வி அமைச்சின் சுற்றறிக்கை கூறுகிறது. ஆனால் ஆசிரியர்களுக்கு சில வலயக் கல்விப் பணிப்பாளர்கள் விடுமுறை வழங்குவதில்லை. இதனால் ஆசிரியர்கள் தனிப்பட்ட விடுமுறை பெற்றே பரீட்சைக்கு முன்னரான தமது ஆயத்தங்களைச் செய்ய வேண்டிய நிலை உள்ளது.

இதற்கு குறிப்பிட்ட அனைத்து ஆசிரியர்களுக்கும் வலயக் கல்விப் பணிப்பாளர்கள் விசேட விடுமுறை வழங்க வேண்டும். அந்தச் சுற்றறிக்கையை சகல வலயக் கல்விப் பணிப் பாளர்களும் பின்பற்ற வேண்டும். அது பற்றி அவர்களுக்கு மேலுள்ள அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வில்லை-என்றார். (த-4)

தமிழ் மக்களின் இருப்பு பாதுகாக்கப்பட வேண்டும்

கொழும்பு மாநகர சபை உறுப்பினர் பாஸ்கரா

கொழும்பு, ஓக. 12

இலங்கையில் கடந்த ஒரு மாதமாக மதவாத, இனவாத செயற்பாடுகளை அரசு ஊக்குவிப்பது அதிகரித்துச் சென்றுள் ளது. அதைக் கண்டிக்காத செயற் பாடுகளும் தலைதூக்கி உள்ளதை காணக்கூடியதாகவுள்ளது. இந்த நிலையில் தமிழ் மக்களின் இருப்பு பாதுகாக்கப்பட வேண்டும்.

இவ்வாறு ஜனநாயக மக்கள் முன்னணியின் ஊடகச் செயலாளரும், கொழும்பு மாநகர சபை உறுப்பினருமான சி. பாஸ்கரா தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கிழக்கு மாகாண, சப்ரகமுவ மாகாண சபைத் தேர்தல் அறிவிக்கப்பட்டு ஒரு மாத காலத்தை உற்று நோக்கும் பொழுது, வன்முறைகள் மலிந்த நாடு இலங்கை என்பது தெட்டத் தெளிவாகக் காணக்கூடிய தாக இருக்கின்றது.

அம்பாறையில் உள்ள பாணம விநாயகர் ஆலய சிலை அபகரிக்கப் பட்டமை, இராஜகிரிய தெஹிவளையில் அமைந்துள்ள பள்ளிவாசல் தொழுகையை தடுத்தமை போன்ற வன்முறைச் செயற்பாடுகளுக்கு பௌத்த தேரர்கள் முன்னின்று ஒத்தாசை செய்தமை பௌத்த தர்ம போதனைகளுக்கு மாறான செயலாகும்.

இதுமட்டுமன்றி யாழ்ப்பாணத்திலிருந்து - கிளிநொச்சி வந்த இளைஞன் பயணச் சீட்டு, மிகுதிப் பணம் கேட்ட போது பஸ்சாரதி, பஸ் நடத்துநர்கள் தாக்கி பஸ்ஸால் தள்ளி இறக் கும் வரை தாக்கியமை, கிழக்கு மாகாண தேர்தலில் போட்டியிடும் தமிழ்க் கூட்டமைப்பு உறுப்பினரின் வீடு தாக்கப்பட்டமை அதேபோல் சப்ரகமுவவில் திடீர் இராணுவ சோதனை மேற்கொள்ளப் பட்டமை,

> கிழக்கு மாகாண, சப்ரகமுவ மாகாண சபைத் தேர்தல் அறிவிக்கப்பட்டு ஒரு மாத காலத்தை உற்று நோக்கும் பொழுது, வன் முறைகள் மலிந்த நாடு இலங்கை என்பது தெட்டத் தெளிவாகக் காணக்கூடியதாக இருக்கின்றது.

சப்ரகமுவ மாகாண இரத்தினபுரிப் பகுதியில் தனிப்பட்ட தகராறு காரணமாக நள்ளிரவு தமிழர் ஒருவரின் வீட்டுக்குள் புகுந்து காடையர் தாக்கியமை போன்ற சம்பவங்கள் இலங்கை மதவாத, இனவாத செயற்பாடுகளில் மிஞ்சி நிற்பதைப் பறைசாற்றுகின்றன.

முக்கியமாக வவுனியாச் சிறைச் சாலையில் நடந்த தாக்குதலில் இரண்டாவது கைதியும் இறந்தமை எல்லா வன்முறைக்கும் சிகரம் வைத்தால் போல் உள்ளது. இந்த நிலையிலிருந்து மீள வேண்டுமானால் கிழக்கு மாகாண, சப்ரகமுவ மாகாணத் தேர்தலில் தமிழ்மக்களுக்கு உரிமைக் குரல் கொடுக்கும் கட்சி அங்கத்தவர்களைத் தெரிவு செய்ய வேண்டும்.

அப்போதுதான் எமது குறைகள் ஓங்கி ஒலித்து உலக நாடுகளின் கவனத்துக்கும் சென்று உலக நாடுகளின் அழுத்தங்களால் எமது உரிமைகள் பெற வழியேற்படும்.- என்றார். (ம)

விரிவுரையாளர்கள் தெரிவுக்கு கேள்வி கோரப்படாமை ஏன்?

யாழ்ப்பாணம்.ஓக.12

கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்கு விரிவுரையாளர்களைத் தெரிவுசெய்வதற்கான விண்ணப்பங்களைக் கோருமாறு கலந்துரையாடலின் போது ஆளுநர் உத்தரவிட்டு ஒரு மாதமாகியும் இதுவரை கேள்வி கோரப்படவில்லை என்று ஆசிரியர் சங்கம் குற்றஞ் சுமத்தியுள்ளது.

பயிற்சி பெறவுள்ள ஆசிரியர்களுக்கு ஆசிரியர் தராதரத்திலுள்ளவர்கள் விரிவுரையாற்றுவதை விட பட்டப்பின் படிப்பு, முதுகலைமாணி படித்த தராதரமுடையவர்கள் விரிவுரையாற்றுவது பயிற்சி பெறும் ஆசிரியர்களுக்கு மிகப் பயனுள்ளதாக அமையும்.

இவ்வாறு தகுதியுடையவர்கள் பலர் இங்கு உள்ள போதும் அவர்கள் விரிவுரையாளர்களாகத் தெரிவு செய்யப்படவில்லை. பக்கச்சார்பாகவே 6 ஆசிரியர்களும் தெரிவு செய்யப்பட்டுக் கல்லூரியில் தற்காலிக விரிவுரையாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர் என இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றஞ் சாட்டி யுள்ளது.

ஒரு மாதத்துக்கு முன்னர் வடமாகாண ஆளுநர் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் இலங்கை ஆசிரியர் சங்கம் இந்த விடயம் தொடர்பில் எடுத்துக் கூறியது. இது பற்றி ஆராய்ந்த பின்னர் விரிவுரையாளர் நியமனம் தொடர்பில் மீள விண்ணப்பங்களைக் கோருமாறு வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளருக்கு ஆளுநர் உத்தரவிட்டிருந்தார். அது இன்னும் கோரப்படவில்லை என்று சங்கம் தெரிவித்தது.

இது தொடர்பில் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலனுடன் தொடர்பு கொண்ட போது,

“விரிவுரையாளர்களை கேள்வி கோரல் மூலமாக எடுக்க முடியாது. நிரந்தர விரிவுரையாளர்களாக இல்லாத படியால் அவ்வாறு எடுக்க முடியாது” என்றார். தற்காலிக விரிவுரையாளர்களாக கேள்வி கோருவது தொடர்பில் கேட்ட போது மத்திய கல்வி அமைச்சுத் தான் அதனைச் செய்ய வேண்டும். கல்லூரி அதிபர் இது தொடர்பில் அறிவிக்க முடியும் என்றார்.

இது தொடர்பில் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அதிபர் எஸ். கணபதிப்பிள்ளையுடன் தொடர்பு கொண்டு கேட்ட போது;

கேள்வி கோருவதற்கான அதிகாரத்தைக் கல்வி அமைச்சுத்தான் தர வேண்டும். விரிவுரையாளர் பற்றாக்குறை நிலவியதனால் தேர்ந்தெடுக்கப்பட்ட சில ஆசிரியர்களை வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளருக்கு அறிவித்தேன். அவர் அந்த ஆசிரியர்களை பாடசாலைகளிலிருந்து கலாசாலைக்கு மாற்றினார்.

இது தொடர்பாக கல்வி அமைச்சுக்குத் தெரியப்படுத்தியுள்ளேன் அதன்பின்னரே முடிவு தெரியவரும் - என்றார்.

(த-4)

ஈழத்தமிழர் பால் உள்ள உணர்வை பலவீனப்படுத்தும் போக்கு வேண்டாமே

தமிழகத்தின் மூத்த-வயதான-அரசியல் தலைவரும் அறிஞர் அண்ணாதுரை நிறுவிய திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவருமான கலைஞர் கருணாநிதி சென்னையில் இன்று (12.08.2012 இல்) நடத்துவதற்கு ஏற்பாடாகி இருந்த ஈழ ஆதரவாளர் அமைப்பின் (TESOவின்) மாநாடு நடை பெறுவதற்கு தடை விதிக்கப்பட்டுவிட்டது.

ஜெயலலிதா தலைமையிலான தமிழக அரசு உத்தேச மாநாட்டுக்குத் தடை விதித்துள்ளது. அந்த உத்தரவு நீதி மன்றத்தில் அறிவிக்கப்பட்டும் விட்டது. பொலிஸார் அதனை இன்று நடைமுறைப்படுத்துவர் என்ற தகவலும் வெளியிடப்பட்டுள்ளது. மொத்தத்தில் ஈழ ஆதரவாளர் அமைப்பின் உத்தேச மாநாடு தடைப்பட்டு விட்டது.

ஆரம்பத்திலேயே, குறிப்பிட்ட உத்தேச மாநாட்டை தமது கட்சியின் அரசியல் பலத்தை, தமிழக மக்களின் ஆதரவின் ஊடாக நிமிர்த்துவதற்கான ஓர் உத்தியாக-உபாயமாகவே-கலைஞர் கருணாநிதி வகுத்துக்கொண்டார் என்று பலதரப்புகளாலும் கருதப்பட்டது.

இலங்கையில் உக்கிரப் போர் நடைபெற்று, பல்லாயிரக் கணக்கான ஈழத் தமிழர்கள் இலங்கை அரசினால் அழிக்கப்பட்ட போது, தமிழகத்தை ஆட்சிசெய்த கருணாநிதி, மத்திய அரசில் அவரது கட்சி ஓர் அங்கமாக இருந்த நிலையிலும், அதனைத் தடுப்பதற்கு எந்த நடவடிக்கையையும் கையிலெடுக்காத கருணாநிதி, அதற்கு வக்கற்ற கலைஞர், இப்போது டெசோ மாநாட்டைக் கூட்டுவதாகத் துள்ளிக் குதித்தமை, ஈழத் தமிழர்களின் நெஞ்சங்களை நெருடியதை அவரைச் சார்ந்தோர் அறியாமல் இல்லை. இலங்கை அரசு கொத்துக் குண்டுகளை ஈழத் தமிழர் பிரதேசங்களில் ஏவிய போது வக்கற்று இருந்தவர், 1985 ஆம் ஆண்டில் தாம் உருவாக்கி தமிழக மக்களிடம் வாக்குச் சேகரித்த டெசோவை கலைஞர் இப்போது தூக்கிப்பிடித்துக் கொண்டிருப்பது, புத்துயிர் கொடுக்கத் துடிப்பது, தலையில் வைத்து ஆடுவது, முழுக்க முழுக்க, தமக்குச் சொந்த அரசியல் ஆதாயம் தேடுவதற்கே என்பது எல்லோருக்குமே தெரிந்ததுதான்.

இலங்கை வாழ் தமிழ் மக்களுக்கு நேர்ந்துள்ள, இக்கட்டான இப்போதைய நிலைமை-

அவர்களின் சுயாட்சி உரிமை பறிக்கப்பட்டு அரசியல் அதிகாரமற்ற அநாதைகளாக விடப்பட்டுள்ளமை-

அவர்களின் பூர்வீக வாழ்விடங்களை, அவற்றுக்குரிய மண்ணை கபளீகரம் செய்வது, மொழி, மத, கலாசார விழுமியங்களையும் அவற்றுக்கு மூலாதாரமாக இருப்பவற்றையும் அற்றுப் போகச் செய்து, வரலாற்றை மாற்றிப் பதிப்பதற்கான செயற்பாடுகள் ஓங்கி வளர்வதற்கு புதிய சூழமைவு ஒன்றை உருவாக்குவது-

அவை குறித்து தட்டிக் கேட்க, நியாயம் வழங்குமாறு வற்புறுத்த எவரும் இல்லாமை-

ஆகிய பின்னடைவுகளால் நொந்து நூலாகிப் போய் வாடி வதங்கிக் கொண்டிருக்கும் தொப்புள் கொடி உறவுகளுக்கு உதவ வேண்டும் என்று இதயசுத்தியுடன் செயற்படும் விருப்பு, கலைஞர் கருணாநிதிக்கு மட்டுமன்றி தமிழக அரசியல் தலைவர்களில் எவருக்குமே முழு அளவில் இல்லை எனலாம். ஈழத் தமிழர்களின் விவகாரத்தை முதலாக, ஆதாரமாக வைத்துத் தத்தமது அரசியல் ஆதரவையும் செல்வாக்கையும் உயர்த்தும் நோக்குடனேயே அவர்கள் செயற்படுகிறார்கள் என்பதில் கனத்த உண்மை இல்லாமலும் இல்லை.

மேலும், ஈழத் தமிழர்களின் விவகாரத்தில், இந்திராகாந்தி காலத்துக்குப் பின்னர், தமது சொந்த அரசியல் வியூகங்களுக்கு ஒத்திசைவாகவே புதுடில்லி அரசுகள் செயற்பட்டு வருகின்றன. ஒரு காலத்தில் இந்தியாவைத் தமது பெரிய சகோதரன் (Big Brother) என்று வரித்துக்கொண்டு, அதற்கேற்ப ஓரளவிலேனும் செயற்பட்டு வந்த இலங்கை அரசுகள், காலப்போக்கில் அதனைத் தூர வைக்கும் போக்கிலேயே கருமமாற்றி வருகின்றன.

இலங்கை அரசு நடத்திய போரில், புதுடில்லி அரசு மிக நெருக்கமாகச் செயற்பட்டு அதற்குப் பக்கபலமாக நின்று பல்வேறு வகைப்பட்ட போர்க்களப் பின்னூட்டல் தந்திரோபாய உதவிகளை வழங்கியமை இப்போது பரகசியம்.

ஆனால், அது ஈழத் தமிழர்களின் அரசியல் மற்றும் வாழ்வுரிமை நலன்களை வழங்குமாறு இடித்துக் கூறும் உரத்துக்கூறும் நிலைக்கு வரவில்லை. கடந்த வருடம் நடைபெற்ற ஐ.நா. மனித உரிமைகள் மாநாட்டில், இலங்கையில் தேசிய நல்லிணக்கத்தின் அவசியத்தை வலியுறுத்தி அமெரிக்கா கொண்டுவந்த பிரேரணையை ஆதரிப்பதில் நழுவி வழுவிப் பின்னர் ஆதரித்தமையில் இருந்து,-

ஈழத் தமிழர் விவகாரத்தில் இந்திய மத்திய அரசு தன்னை ஆத்மார்த்தமாக ஈடுபடுத்துமா, அதன் பொருட்டு “உறுக்கிக்” கூறும் நிலையில் உள்ளதா என்பதனை எவரும் புரிந்து கொள்ள இயலும்.

இப்போதும் கூட, கருணாநிதியின் இயக்கமான டெசோ என்ற தலைப்பில் தானும் ஈழம் என்ற வார்த்தையைப் பயன்படுத்தக்கூடாதென இந்திய மத்திய அரசு அறிவித்தமைக்கு, காரணங்களும் உள்நோக்கங்களும் உள்ளதை எவரும் இலகுவில் வகுத்துப் பகுத்து உணரலாம்.

எனவே, கலைஞர் கருணாநிதி போன்ற தலைவர்கள், ஈழத் தமிழர்களின் நிலை குறித்து அனைத்துலகத்தின் பார்வை சற்றுத் திரும்பியுள்ள சூழ்நிலையைக் குழப்புவதற்கான, அதனைக் குழப்பிவிடும் சுய அரசியல் நலன் நாடிய செயற்பாடுகளில் ஈடுபடாமல் இருப்பதே மெத்தவும் நல்லது.

தான் ஆடாவிட்டாலும் தன் தசை ஆடும் என்ற மொழிக்கு ஏற்ப, தமிழகத் தமிழ் மக்களின் ஈழத் தமிழர் உரிமைகளை நாடிய உணர்வை, அங்குள்ள அரசியல் தலைவர்கள் வெகு அவதானத்துடனும் பின் விளைவுகளைக் கருத்தில் கொண்டும் கையாள்வதே உகந்தது. அவ்வழி நோக்கி அவர்கள் சிந்திப்பார்களாக.

சமூகத்தை வலுவூட்டுவதற்கு 34 லட்சத்து 45ஆயிரம் ரூபா

முரண்பாடுகளால் பாதிக்கப்பட்ட சமூகத்தை வலுவூட்டும் ஈ.சி.எ.சி திட்டத்தின் கீழ் வவுனியா மாவட்டத்திற்கு 34 லட்சத்து 45 ஆயிரம் ரூபா சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனத்தால் வழங்கப்பட்டுள்ளது .

கடந்தகால இடர்களினால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கத்திற்காக இந்த நிதி வழங்கப்பட்டுள்ளது -

விதவைகள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், ஊனமுற்ற குடும்பங்களின் சுயதொழில் மேம்பாட்டிற்கென 56 ஆயிரம் முதல், ஒருலட்சத்து 2 ஆயிரம் வரை அவரவர் குடும்ப நிலைக் கேற்ப சுயதொழில் முயற்சிக்கு உதவிகள் வழங்கப்பட வுள்ளன.

> இடர்களினால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கத் திற்காக இந்த நிதி வழங் கப்பட்டுள்ளது.

சர்வதேச தொழிலாளர் தொழில் நிறுவனத்தின் அனுசரணையுடன் சமூகசேவைகள் திணைக்களம், பொஸ்கோ நிறுவனம் இந்த நிதியை வழங்கியுள்ளன.

இதன் அடிப்படையில் வவுனியா மாவட்டத்திலுள்ள செட்டிகுளம், வவுனியா, வவுனியா தெற்கு ஆகிய பகுதிகளில் 74 பேருக்கு இந்த உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. வவுனியா தெற்கு பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த 7 பேரில் 4 பெண்களுக்கும், 3 ஆண்களுக்கும், வவுனியாவில் 08 பெண்களுக்கும், 06 ஆண்களுக்கும், செட்டிகுளத்தில் 35 பெண்களுக்கும், 18 ஆண்களுக்கும் இந்தக் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளதாக சமூகசேவைகள் திணைக்களத்தைச் சேர்ந்த சமூகசேவை உத்தியோகத்தர் எ. ஸ்ரீனிவாசன் தெரிவித்தார். (க-400)

12பயனாளிகளுக்கு கடன்தொகைகள்

அக்கராயன் கெங்காதரன் குடியிருப்புக் கிராமிய அபிவிருத்தி அமைப்பின் கீழ் 12 பயனாளிகளுக்கு 3 லட்சத்து 80 ஆயிரம் ரூபா கடனாக வழங்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட மீள் எழுச்சி திட்டப்பிரதிப் பணிப்பாளர் அ.விஜயகிருஷ்ணனின் பணிப்புரைக்கு அமைவாகச் சமூகவலுவூட்டலாளர் செ.குகதாசனின் ஒழுங்குபடுத்தலின் கீழ் இந்தக் கடன் தொகைகள் வழங்கப்பட்டுள்ளன. கிராமிய அபிவிருத்தி அமைப்பின் தலைவர் இ. தவஞானசீலன் தலைமையில் இந்தக்கடன் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது .

இதே வேளை கெங்காதரன் குடியிருப்பு கிராமிய அபிவிருத்தி அமைப்பினால் இம்மாஸ் நகர் , 50 வீட்டுத்திட்டப் பகுதிகளில் குடிதண்ணீர் நெருக்கடியைத் தீர்க்கும் வகையில் இரண்டு திறந்த கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது . (க-18)

தொடரும் மின்தடையால் மாணவர் பாதிப்பு

மன்னார், ஓக. 12

மன்னாரில் தற்போது தொடர்ந்து மின் தடைகள் ஏற்படுவதனால் க.பொ.த.உயர் தரப் பரீட்சைக்குத் தோற்றும் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த மாணவர்கள் பல்வேறு இடையூறுகளுக்கு முகம்கொடுத்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீண்டகாலமாக மன்னார் மாவட்டத்தில் இடம்பெற்று வந்த மின்தடை தற்போது அதிகரித்த நிலையிலேயே காணப்படுகின்றது.

இரவு, பகல் என்று பாராது தற்போது மின்வெட்டுத்தொடர்ந்த வண்ணமே உள்ளது. இதனால் பரீட்சைக்குச் செல்லும் மாணவர்கள் பல்வேறுஅசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

இது தொடர்பாக மின் பாவனையாளர்கள் பல தடவை மின்சார சபைக்குத் தெரிவித்தபோதும் மின்சார சபை அதிகாரிகள் அதனைக் கவனத்தில் கொள்ளாது செயற்பட்டு வருவதாக மின் பாவனையாளர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் பல அரச உயர் அதிகாரிகள் உள்ளபோதும் அவர்கள் இது வரை தலையிட்டுத் தீர்வைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கவில்லை என வும் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே உயர்தரப் பரீட்சை முடியும் வரையாவது மன்னார் மாவட்டத்தில் மின் தடையைத் தவிர்க்குமாறு மாணவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-12)

வவுனியா செயலகத்தில் அச்சகம்

நெளுக்குளம், ஓக. 12

வவுனியா செயலகத்தில் அச்சகம் ஒன்று ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

மாவட்டச் செயலகத்தின் தகவல் பிரிவிலேயே எதிர் வரும் 17ஆம் திகதி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இதனைத்திறந்துவைக்கவுள்ளார்.

வவுனியா மாவட்டச் செயலகத்தின் அச்சுத் தேவைகளை இந்த அச்சகம் பூர்த்தி செய்யுமெனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை மாதாந்தப் பத்திரிகை அல்லது சஞ்சிகை ஒன்றை வெளியீடு செய்வதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

பாடசாலைகளின் அச்சுத் தேவைகளைக் குறைந்த கட்டணத்தில் நிறைவேற்று வதற்கும் இந்த அச்சகம் உதவுமெனவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-402)

இரணைமடுக்குளத்தில் நன்னீர் மீன்பிடி

கிளிநொச்சி இரணைமடுக்குளத்தில் நன்னீர் மீன் பிடிக்காக மேலும் ஒரு கிலோ மீற்றர் தூரத்துக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

நன்னீர் மீன் பிடி தொழிலாளர்களின் வேண்டுகோளுக் கிணங்க இராணுவத்தினரின் மேற்படி அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளதாக திருவையாறு அம்பாள் நகர் கிராம அபிவிருத்திச் சங்கம் தெரிவித்துள்ளது. (6)

நலன்புரி சங்கத்தின் அங்குரார்ப்பணக் கூட்டம்

துணுக்காய்ப் பிரதேச சபையின் நலன்புரி சங்கத்துக்கான அங்குரார்ப்பணக் கூட்டம் கடந்த 6 ஆம் திகதி இடம்பெற்றுள்ளது. இந்தக் கூட்டம் பிரதேச சபையின் கேட்போர் கூடத்தில் சபையின் தவிசாளர் வீ.இராசரத்தினம் தலைமையில் இடம்பெற்றது. இதன் போது புதிய நிர்வாகிகளும்தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவராக வீ.இராசரத்தினமும், செயலாளராக க.அன்ரனியும், பொருளாளராகத் திருமதி எஸ்.சிவதர்சினியும் தெரிவு செய்யப்பட்டனர்.

மேலும் உபதலைவராகத் திருமதி மகேஸ், உபசெயலாளராக சி.ரவீந்திரநாதன் ஆகியோரும் நிர்வாகசபை உறுப்பினர்களாக வே.லவேந்திரன், மு.செல்வகுமார், சி.யேசுதாசன், அரியரத்தினம் ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டனர். (க-415)

பெற்றோருக்கான ஒன்றுகூடல்

மஹிந்த சிந்தனை வேலைத் திட்டத்தின் கீழ் 5000 ஆரம்பப் பாடசாலைகள் அபிவிருத்தி செய்தல் திட்டத்தில் மு/பாண்டியன்குளம் ஆரம்பப் பாடசாலை அபிவிருத்தி செய்யப்படவுள்ளது.

இதனால் அந்தப் பாடசாலையின் பெற்றோருக்கான ஒன்றுகூடல் பாண்டியன்குளம் மகாவித்தியாலயத்தில் நாளை திங்கட் கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.இந்தஒன்று கூடலில் அனைத்து பெற்றோர்களும் சமுகம் தருமாறு பாண்டியன் குள ஆரம்பப் பாடசாலை அதிபர் தெரிவித்துள்ளார். (ம-418)

மூத்த சட்டத்தரணி மு.சிற்றம்பலத்தின் சேவை நலன் பாராட்டு விழா அண்மையில் இடம்பெற்றபோது சிதம்பரபுரம் ஸ்ரீ நாகராஜ வித்தியாலய அபிவிருத்திச் சங்க செயலாளர் மருத்துவர் ஏ.செல்வநாயகம், சட்டத்தரணி கௌரவிக்கிறார். (ம-402)

கள்ள நோட்டு பாவனை வன்னியில் அதிகரிப்பு

வன்னி மாவட்டத்தில் கள்ள நோட்டுப் பாவனை அதிகரித்துள்ளதாக யாழ்.மாவட்டப் பிரதிப் பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்துள்ளார். கடந்தவாரம் வன்னிமாவட்டத்தில் கள்ள நோட்டுக்களை மாற்ற முற்பட்ட மூவர் கையும் மெய்யுமாகப் பிடிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் ஊடக வியலாளர்களுக்கும் யாழ். மாவட்ட பொலிஸ் உயர் அதிகாரிகளுக்கும் இடையேயான வாராந்த சந்திப்பு யாழ்ப்பாணம் பிரதிப் பொலிஸ்மா அதிபர் எரிக் பெரேரா தலைமையில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் நேற்று இடம்பெற்றது.

இதில் கருத்துக் கூறிய பிரதிப் பொலிஸ்மா அதிபர் மேற்கண்டவாறு கூறினார்.

புளியங்குளம் பகுதியில் 5 ஆயிரம் ரூபா நோட்டுக் கொடுத்து எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருள் நிரப்ப முயன்ற இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

இவர்கள் கடந்தமாதம் 29 ஆம் திகதி 5 ஆயிரம் ரூபா பணம் கொடுத்து எரிபொருள் நிரப்பிக் கொண்டு மிகுதிப் பணம் பெற்றுச்சென்ற பின்னர் வங்கியில் பணம் வைப்பிடச்சென்றவேளையில் கள்ள நோட்டென இனங் காணப்பட்டது. மீண்டும் 9 ஆம் திகதி இருவரும் 5 ஆயிரம் ரூபா பணத்தை கொண்டு வந்து எரிபொருள் நிரப்ப முற்பட்ட வேளையில் புளியங்குளம் பொலிஸாருக்கு எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர் தகவல் கொடுத்தார்.

இதனையடுத்துக் குறித்த இருவரும் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டுவிளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர். மற்றுமொரு நபர் கிளிநொச்சி பொலிஸாரால் ஆயிரம் ரூபா கள்ள நோட்டுடன் கைது செய்யப்பட்டு கிளிநொச்சி நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்று அவர் மேலும் கூறினார். (ம-86)

இடர்களால் பாதிக்கப்பட்டோருக்கான நிவாரணக் கொடுப்பனவுகளை பெற்றுக்கொள்ள முடியும்

வவுனியா, ஓக.12

பிரதேச செயலகங்கள் மூலம் தற்செயல் நிவாரணத்திற்கு விண்ணப்பித்தவர்களுக்கான கொடுப்பனவுகள்கிடைக்கப்பெற்றுள்ளன.

யானைகளினால் ஏற்பட்ட சொத்து இழப்பு மற்றும் இயற்கை இடர்களால் பாதிக்கப்பட்டு நிவாரணம் கோரி விண்ணப்பித்த 15 பேருக்கான தற்செயல் நிவாரண நிதியே வந்து சேர்ந்துள்ளது.

கொடுப்பனவுகள் கிடைக்கப்பெற்றோர் விவரம் வருமாறு:-

க.சுரேஸ்குமார், காயன்குளம், செட்டிக்குளம், பொன்னுத்துரை லூர்தம்மா - பனிக்கர் நீராவியடி, பொன் ராசா கனகசெல்வராசா-காயன்குளம், மு. இராம கிருஷ்ணன் - காயன்குளம் , நடராஜா சிவகுமார் காயன்குளம்,சு. விக்கினேஸ்வரன் காயன்குளம், பொ. செல்வராசா-காயன்குளம், சங்கரலிங்கன் தவநந்தன் காயன்குளம், சு. சிவதாஸன் - காயன்குளம் , பா. சுப்பிரமணியம் காயன்குளம், மு.முருகையா காயன்குளம், அ. இரவிச் சந்திரன் தம்பனைச்சோலை, மகாறம்பைக்குளம் பொ. தனலட்சுமி மகாறம்பைக்குளம், இ.சாந்தினி மகாறம்பைக்குளம்,தர்மபாலன்-ஜெயபாலன் -மகாறம்பைக்குளம்

மேலே பெயர் குறிப்பிட்டவர்கள் உடன் தத்தமது பிரதேச செயலகங்களில் பணிபுரியும் சமூகசேவைகள் உத்தியோகத்தர்களுடன் தொடர்பு கொண்டு கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது . (க-400)

கிளிநொச்சி கல்வி வலயத்தில் 13 ஆரம்ப பாடசாலைகள் அபிவிருத்திக்குத் தெரிவு

அக்கராயன், ஓக. 12

5 ஆயிரம் ஆரம்பப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் கீழ் கிளிநொச்சிக் கல்வி வலயத்தில் 13 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயம், இந்து ஆரம்ப வித்தியாலயம், அக்கராயன் ஆரம்ப வித்தியாலயம், அன்னை சாரதா வித்தியாலயம், முரசுமோட்டை ஆரம்ப வித்தியாலயம், தர்மபுரம் இல.01 அ.த.க.பாடசாலை, முழங்காவில் ஆரம்ப வித்தியாலயம், பளை ஆரம்ப வித்தியாலயம், திருவையாறு ஆரம்ப வித்தியாலயம், கல்மடுநகர் அ.த.க.பாடசாலை, கட்டைக்காடு அ.த.க.பாடசாலை, தம்பிராசபுரம் அ.த.க.பாடசாலை, கரியாலை நாகபடுவான் இல.03 பாடசாலை ஆகிய பாடசாலைகளே தெரிவுசெய்யப்பட்டுள்ளன. இந்தப் பாடசாலைகளுக்கு பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் தலா 5 லட்சம் ரூபா வீதம் வழங்கப்படவுள்ளது.

பாடசாலைகளின் அடிப்படை வசதிகளை மேம்படுத்தல், விளையாட்டு முற்றம், வேலி என்பன அமைத்தல் போன்ற அடிப்படைத் தேவைகளுக்கு இந்த நிதி பயன்படுத்தப்படவுள்ளது. (க-18)

கிரவல் மண்ணால் அவதியுறும் பயணிகள்

நெளுக்குளம், ஓக. 12

வவுனியாவிலுள்ளகுறுக்கு வீதிகளில் காணப்படும் கிரவல் மண் பயணிகளுக்குத் தொடர்ந்தும் இடையூறாகக் காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வீதிகளுக்குக் கிரவல் மண் பரவப்பட்டுப் பல மாதங்கள் கடந்த நிலையிலும் தார் இடப்படாததால் கிரவல் வீதிகளாகவே காட்சியளிக்கின்றன.

இறம்பைக்குளம் பாடசாலை, வவுனியா மகாவித்தியாலயம், சைவப்பிரகாச மகளிர் பாடசாலை ஆகியன வற்றுக்குச் செல்லும் ஆயிரக் கணக்கான மாணவர்கள் கிரவல் மண்ணிலிருந்து எழும் புழுதியால் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றனர். இவர்கள் அணிந்து செல்லும் வெள்ளை நிறமான சீருடைகள் செந்நிறமாகக் காட்சியளிப்பதைக் காண முடிகின்றது. இதனால் உளவியல் ரீதியிலும் இந்த மாணவர்கள் பாதிப்படைந்து காணப்படுகின்றனர். அத்துடன் பல்வேறு சுவாசத் தொற்றுக்களுக்கும் இவர்கள் உள்ளாகி வருகின்றனர்.

மழைகாலம் ஆரம்பிக்கவுள்ளதால் இந்த வீதிகள் சேறும் சகதியுமாக மாறிப் பெரும் பாதிப்புக்களை ஏற்படுத்தலாமென மக்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

எனவே இனியும் தாமதிக்காது இந்த வீதிகளுக்குத் தார் ஊற்றிச் சீரமைப்புப் பணிகளை மேற்கொள்ளுமாறு பாதிக்கப்பட்டு வரும் மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-402)

நல்லூர் கந்தனின் 20 ஆம் நாள் வீதியுலாக் காட்சி



விழா சிறப்புற வாழ்த்துவோர்:
வெஸ்ரா இன்டஸ்றீஸ்
குளப்பிட்டி றோட், ஆனைக்கோட்டை.
தொ.பே.021 4591372
(C/1987)(6-7-2)

"ஞானவேல் ஒளிர்ந்தது முருகா"

கடமையைச் செய்தேன்
கவலை ஒழிந்தது,
கல்வியைப் போதித்தேன்
கண்கள் குளிர்ந்தன,
உடையன குறைத்தேன்
உள்ளம் தெளிந்தது,
உன்னைப்பார்த்தேன்
உண்மை தெரிந்தது,
விடையது கேட்டேன்
வினாவோ மறைந்தது,
விசரனாய் திரிந்தேன்
வயிறு நிரம்பியது,
நடையினில் சென்றேன்
நல்லூர் தெரிந்தது
நல்லூரைப் பாடினேன்
ஞானவேல் ஒளிர்ந்தது

கே. எஸ். சிவஞானராஜா
கொக்குவில்,

என்ன முடிவெடுப்பாய்

வேலவனின் நாமமதை
விண் அதிரச் சொல்லி நின்றோர்
காலமெல்லாம் உந்தன்
காலடி தொழுது நின்றோர்
எதிர்காலம் என்னவென்று
ஏங்கியே வாடுகின்றார்
ஏரோடும் சீரோடும்
பார் புகழ வாழ்ந்தவர்கள்
வேரோடு சாய்ந்திங்கு
வேதனையில் விம்முகிறார்
சோதனையும் வேதனையும்
வேல்கொண்டு ஓழிப்பவனே
எம்மவரின் வேதனைக்கு
என்ன முடிவெடுப்பாய்

நடராசா சந்திரலிங்கம், அச்சுவேலி

அருளின் அருளே நல்லூர்

ஈழத்தின் இமயமே எம் நல்லூர்
இன்பத்தின் இதயமே எம் நல்லூர்
பெருமைக்கு பெருமை எம்நல்லூர்
பெருமை சேர் குணங்கள் தருமே நல்லூர்
வருந்திவரம் கேட்போரை காக்குமேநல்லூர்
வசந்தத்தின் சோலை வனமேநல்லூர்
வேண்டாக் குணங்களை
வேர் அறுக்கும் நல்லூர்
அருளுக்கு அருளே நல்லூர்.

பொன்னையா சகலகலாநிதி,
அச்சுவேலி.

வேல் முருகன்
வணிக நிலையம்
இல.56 A(378). இல 295 (21).
மணிக்கூட்டு வீதி. யாழ்ப்பாணம்.
TP: 021 222 9437 (C/1965)(2-6-7)

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தால் மேற்கொள்ள இருக்கும் வேலைத்திட்டம்

தென்மராட்சி ஓக. 12

தென்மராட்சி பிரதேச செயலகத்தால் இந்த வருடம் பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தின் நிதி ஒதுக்கீட்டில் எட்டு வேலைத்திட்டங்கள் மேற்கொள்ள இருக்கின்றன என்று அறிவிக்கப் பட்டுள்ளது. அதன்படி மேற்கொள்ளவிருக்கும் வேலைத் திட்டங்கள் வருமாறு:-

கச்சாய் தெற்கு வினோபா பாலர் பகல் பராமரிப்பு நிலைய அபிவிருத்தி வேலைகளுக்கு 98 ஆயிரம் ரூபாவும், குடமியன் பிள்ளையார் கோயில் அபிவிருத்திப் பணிக்காக 49 ஆயிரம் ரூபாவும், மிருசுவில் வடக்கு குருக்கள் மாவடி வீரகத்தி விநாயகர் ஆலய கட்டடவேலைக்காக 73,500 ரூபாவும், கெற்பேலி கிழக்கு லிங்கேஸ்வரர் ஆலயம், வீரபத்திரர் ஆலயம் ஆகியவற்றின் பூஜைப் பொருள்களுக்காக 24,500 ரூபாவும், கொடிகாமம் வெள்ளாம் போக்கட்டி மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்துக்கு தையல் இயந்திரம் வழங்க 45 ஆயிரம் ரூபாவும், கைதடி-நாவற்குழி வள்ளியம்மன் ஆலய புனரமைப்புக்காக 49 ஆயிரம் ரூபாவும், விடத்தற்பளை கிராம அபிவிருத்திச் சங்கத்துக்கு மலசலகூடம் அமைக்க 49 ஆயிரம் ரூபாவும், ஒதுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (3-9)



வடமாராட்சி -12

கரவெட்டி தேவமாதா தேவாலய வருடாந்தப் பெருந்திருவிழா கடந்த 6 ஆம் திகதி திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நவநாள் வழிபாடுகளுடன் நடைபெற்றுவருகின்றது. எதிர்வரும் 14 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 5 மணிக்கு நற்கருணை வழிபாடும், ஆசிர்வாதமும் இடம் பெறும் .

மறுநாள் 15 ஆம் திகதி புதன் கிழமை காலை 6.30 மணிக்கு கரவெட்டி பங்குத்தந்தை அருட்திரு எமில் போல் தலைமையில் திருவிழா கூட்டுத் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு, தேவமாதாவின் திருச்சொருப பவனியுடன் திருவிழா நிறைவடையும். (3-8)

* * *

சுன்னாகம் , மயிலணி முத்துமாரி அம்பாள் ஆலய வருடாந்த அலங்காரத் திருவிழா நேற்று ஆரம்பமாகியது. தொடர்ந்து பதினொரு தினங்கள் நடைபெறவுள்ள இந்தத் திருவிழாவில் தினமும் மாலை 3.30 மணிமுதல் அபிஷேக, ஆராதனைகள் நடைபெறும். இறுதி நாளான எதிர்வரும் 21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணி முதல் சங்காபிஷேகமும் மாலை 5 மணி முதல் பூஜை, திருவூஞ்சல், உற்சவமும் இடம்பெறும். (3)

சைக்கிள்களுக்கான உரிமம் பெறல்

வடமராட்சி, ஓக.12

சைக்கிள்களைப் பயன்படுத்துவோர் சைக்கிள்களுக்கான உரிமத் தகடுகளைப் பிரதேசசபையில் பெற்றுக்கொள்ளுமாறு கரவெட்டிப் பிரதேச சபை பொதுமக்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.

உரிமத்தகடுகள் இன்றி சைக்கிள்களை வைத்திருப்போர் மீது விரைவான காலப் பகுதியில் பொலிஸார் நடவடிக்கை எடுக்கவிருப்பதால் சைக்கிள் உரிமையாளர்கள் உரிமத்தகடுகளைப் பெற்றுக்கொண்டு எதிர்கொள்ளும் சிரமங்களைத் தவிர்க்குமாறும் அறிவுறுத்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (3-8)

நாய் குறுக்கீடு; இளைஞன் காயம்

தென்மராட்சி, ஓக.12

வீதியின் குறுக்கே ஓடிய நாயினால் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞனுக்கு முழங்காலில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை மீசாலை புத்தூர் சந்தியில் இடம்பெற்றது. மோட்டார் சைக்கிள் நாயுடன் மோதியதில் தூக்கி வீசப்பட்டு காயமடைந்த மட்டுவில் வடக்கைச் சேர்ந்த சிவச்சந்திரன் சுதர்சன் (வயது-19) என்பவர் சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிசிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (3-9)

இடிந்துவிழும் நிலையில் ஆனைக்கோட்டைப் பாடசாலை

புனரமைக்குமாறு கோரிக்கை

நவாலி,ஓக.12

ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலையின் சில வகுப்பறைகளின் கூரை மரங்கள் உழுத்துப்பழுதடைந்த நிலையிலுள்ளதால் எந்த நேரமும் முறிந்துவிழும் நிலை ஏற்பட்டுள்ளது.

இப்பாடசாலை கடந்த நூறு வருடங்களுக்கு முன் கட்டப்பட்டுள்ளதால் தற்போது இவற்றின் கூரை மரங்கள் உக்கி உழுத்த நிலையிலுள்ளதுடன் ஓடுகளும் பழுதடைந்தும் கழன்றும் உள்ளன. இவற்றை கூரை மீதேறி சீர் செய்வதற்கு மரங்கள் முறிந்த விழும் என்ற அச்சத்தினால் யாரும் முன்வரவில்லை.

சில வகுப்பறைகள் திணைக்களங்களின் உதவியுடன் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இதேபோன்று பழுதடைந்திருக்கும் இக்கட்டடங்களையும் திருத்தியமைக்க நாடாளுமன்ற உறுப்பினர்களோ பொது நிறுவனங்களோ முன்வர வேண்டும் என்று பாடசாலைச் சமூகத்தினரும் பொதுமக்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இப்பாடசாலைகளில் ஆண்டு ஒன்று முதல் ஆண்டு ஒன்பது வரை வகுப்புக்கள் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (3-100)

சாவகச்சேரி நகரப் பகுதியில் வடிகால் துப்புரவுப் பணி

தென்மராட்சி, ஓக.12

சாவகச்சேரி நகர்ப்பகுதியில் வீதி அகலிப்பின்போது அமைக்கப்பட்ட வடிகால்கள் நகராட்சி மன்ற பணியாளர்களால் துப்புரவு செய்யப்பட்டு வருகின்றன.

சாவகச்சேரி வைத்தியசாலை தொடக்கம் சாவகச்சேரி நீதிமன்றம் வரையான ஒரு கிலோ மீற்றர் தூரத்தின் இரு மருங்கிலும் வடிகால் அமைக்கப்பட்டது. அதன் பின்னர் வீதி அகலிப்பு பணிகள் இடம்பெற்றதால் வடிகாலுக்குள் பெருமளவு மணல் மற்றும் சிறுகற்கள் வீழ்ந்து குவியல்குவியலாகக்காணப்பட்டன.

வீதிக்கு தார்க்கலவை போடுவதற்காக வடிகாலுக்கு கொங்கிறீற் மூடிகள் போடப்பட்டு மூடப்பட்டன. வடிகாலுக்குள் காணப்பட்ட கல், மணல் மற்றும் கழிவுப் பொருள்கள் அகற்றப்படாததால் மழை காலத்தில் வடிகால் ஊடாக வெள்ளம் வழிந்தோட முடியாமல் டெங்கு நுளம்பு உற்பத்தி நிலை உருவாகலாம் என நகர்ப்பகுதி வர்த்தகர்களின் கோரிக்கை உதயனில் செய்தியாக வெளியானதையடுத்து வடிகால்களை துப்புரவு செய்யும் பணிகள் நேற்றுமுன்தினம் தொடக்கம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (3-9)

சாரதி அனுமதிப்பத்திரம் வழங்குமாறு மாற்றுத் திறனாளிகள் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஓக.12

மாற்றுத் திறனாளிகளுக்கு சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கப்படும் நடைமுறையை மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் கிடப்பில் போட்டிருப்பதால் சாரதி அனுமதிப்பத்திரத்துக்காக விண்ணப்பம் செய்த மாற்றுத்திறன் கொண்ட தொழில் முயற்சியாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகள் தெரிவித்ததாவது:-

யாழ். மாவட்டத்தில் மாற்றுத் திறனாளிகளுக்கு சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கப்படும் நடைமுறை இல்லாத காரணத்தால் தொழில் முயற்சியை நோக்காகக் கொண்ட மாற்றுத் திறனாளிகள் ஒன்றுகூடி சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றுத் தருமாறு கோரிக்கை விடுத்திருந்தனர்.

இதன் காரணமாக மோட்டார் போக்குவரத்து திணைக்களம் புதிய சுற்றறிக்கை ஒன்றை வெளியிட்டு இதன் பிரகாரம் தகுதியுடைய விண்ணப்பதாரிகளுக்கு சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கப்படும் எனத் தெரிவித்திருந்தது.

எனினும் சுற்றறிக்கையில் இருந்து அதிக மாற்றுத்திறனாளிகள் விலக்கப்பட்டிருந்தாலும் 30 இற்கும் மேற்பட்ட தகுதியுடைய விண்ணப்பதாரிகள் சாரதி அனுமதிப்பத்திரத்துக்காக விண்ணப்பம் செய்திருந்தனர்.

இந்த நிலையில் விண்ணப்பம் செய்து பல மாதங்கள் கடந்த நிலையிலும் மோட்டார் போக்குவரத்து திணைக்களம் சாரதி அனுமதிப்பத்திரம் வழங்க முன் வரவில்லை. இதனால் மாற்றுவலுவுள்ள தொழில் முயற்சியாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருப் பதாக கவலை தெரிவித்துள்ளனர்.(3-14)



DMI COMPUTER EDUCATION நிறுவனத்தால் ஜோன் பொஸ்கோ வித்தியாலயத்தில் நடத்தப்பட்டு வருகின்ற கணினிப்பயிற்சி மையத்தில் பயிற்சியை நிறைவு செய்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு அதிபர் அருட்சகோதரி மரிய ஜீவந்தி தலைமையில் இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் சிரேஷ்ட முகாமையாளர் ரி.தேவராஜன் கலந்து கொண்டு பரிசில்களை வழங்கினார். (த)

தீவகப் பிரதேசத்தில் புதிதாக ஹோட்டல்கள்

யாழ்ப்பாணம், ஓக. 12

யாழ். குடாநாட்டில் சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்காக புதிதாக ஹோட்டல்களை அமைக்கும் நடவடிக்கைகளை உல்லாசப் பயணத்துறை அமைச்சு மேற்கொள்ளவுள்ளது.

மண்டைதீவு, சாட்டி, புங்குடுதீவு ஆகிய பிரதேசங்களில் ஐந்து நட்சத்திர மற்றும் மூன்று நட்சத்திர ஹோட்டல்களை அமைப்பது தொடர்பாக ஆராயப்பட்டுள்ளது.

உல்லாசப்பயணத்துறை அமைச்சின் உயரதிகாரிகள் மேற்படி இடங்களைப் பார்வையிட்டதுடன் வேலணை பிரதேசசபைத் தலைவர் செயலாளருடன் இந்த விடயம் குறித்து கலந்துரையாடியுள்ளனர்.

முதலீட்டு ஊக்குவிப்புச் சபை, உல்லாசபயணத்துறை அமைச்சு என்பன இணைந்து இந்தச் செயற்றிட்டத்தை முன்னெடுக்க உள்ளன.

அத்துடன் நயினாதீவிலும் மண்டைதீவிலும் உல்லாசப் பயணிகளை கவருவதற்கான இடங்கள் தெரிவு செய்யப்பட்டு பிரதேசசபையின் அனுசரணையுடன் உல்லாசப் பயணத்துறை அமைச்சு திட்டங்களைச் செயற்படுத்த உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (த-41)

259 ஆவது கிளை கிளிநொச்சியில்

முழு நாடும் உள்ளடங்கும் வகையில் 258 கிளைகளுடன் அரசின் பிரதான அபிவிருத்தி வங்கியான பிரதேச அபிவிருத்தி வங்கி வடமாகாணத்தில் தனது கிளை வலையமைப்பை விரிவாக்கும் வகையில் கிளிநொச்சி மாநகரில் தனது 259ஆவது கிளையை திறந்து வைத்தது.வங்கியின் தலைவி கோசலா ஜயவர்தன மற்றும் பிரதான நிறை வேற்று அதிகாரி ரத்னசிறி சிறிவர்த்தன ஆகியோரின் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

யாழ். குடாநாட்டில் நுழைவாயில் அமைந்துள்ள கிளிநொச்சி நகரம் மற்றும் சூழவுள்ள பிரதேசங்கள் துரிதமாக அபிவிருத்தியடைந்து வரும் வடக்கு மற்றும் வன்னிப் பிரதேச பொருளாதார அபிவிருத்தியின் அடிப்படை இலக்காக கொண்ட பிரதேச அபிவிருத்தி வங்கி கிளிநொச்சிப் பிரதேசத்துக்கு வருகை தருவது கிளிநொச்சி மக்களின் வாழ்வில் ஒளியைக் கொண்டு வரும் என்பது சகலரினதும் அசையாத நம்பிக்கையாகும்.

நாட்டின் அபிவிருத்திப் பயணத்தில் கிளிநொச்சிப் பிரதேசம் கமத்தொழில், கால்நடை வளர்ப்பு ஆகிய துறைகளுக்கு விசேடமாக கவனம் செலுத்துவதுடன் அபிவிருத்தி யுத்திகள் கையாளும் இந்தச் சந்தர்ப்பத்தில் அத்துறைகளுக்கான நிதி வசதி மற்றும் இணைப்பு சம்பந்தமான விசேட நிபுணத்துவம் கொண்ட பிரதேச வங்கி முக்கியமான பொறுப்பை நிறைவேற்றுவதற்கு தகுதியுடையதாகும். விசேடமாக துரித பொருளாதார அபிவிருத்திக்கு சிறிய நடுத்தர அளவிலான துறைகளுக்கு கடன் வசதி வழங்குவதுடன் நிலையான அபிவிருத்திக்கு குறைந்த வருமானம் பெறும் பிரஜைகளின் முழுமையான பங்கு பற்றுதலுடன் சிறு குழுக்கள் முறைமையினூடாக சிக்கனம், சேமிப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் குடும்பத்தின் ஜீவனோபாய அபிவிருத்தி திட்டங்கள் போன்றவற்றுக்கு வங்கி அர்ப்பணிப்புடன் செயலாற்றும் என்பதை இந்த நிகழ்வில் பங்கு கொண்ட பெருந் திரளான மக்கள் மத்தியில் சொற்பொழிவாற்றிய வங்கியின் தலைவி திருமதி கோசலா ஜயவர்தன குறிப்பிட்டார்.

தேசிய வங்கியான பிரதேச அபிவிருத்தி வங்கி நவீன வங்கி வசதிகள் அனைத்துடன் எதிர்காலத்தில் செயற்படவுள்ளதென்பதால் கடந்த காலங்களில் அபிவிருத்தி வங்கித் துறையில் சற்று தொலைவில் இருந்த கிளிநொச்சி வாழ் மக்களுக்கு பிரதேச அபிவிருத்திவங்கியின் வருகையின் மூலம் மீண்டும் வழமை போல தனது வங்கி சேவையை பெற்றுக் கொள்ள முடியுமென்றும் அதற்காக அனைவரையும் அழைப்பதாக வங்கியின் நிறைவேற்று அதிகாரி ரத்னசிரி சிரிவர்தன தனது உரையின் போது பங்கு பற்றிய மக்கள் மத்தியில் குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வில் கிளிநொச்சி பிரதேச பாதுகாப்புப் பிரிவினர் மற்றும் அரச நிறுவனங்களின் தலைவர்கள் உட்படப் பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டனர் ''புகைப்படம் கிளிநொச்சிக் கிளை வங்கியும் தலைவியினால் திறந்து வைக்கப்படுவதைக் காட்டுகின்றது.

2012 ரெயின்போ விவரக்கொத்து ஆயுன்வேதத்தை ஊக்குவிக்கிறது

தேசிய விவரக்கொத்து தகவல் சேவை வழங்குநர்களான எஸ்.எல்.ரி. ரெயின்போ பேஜஸ், வர்த்தக மற்றும் சமூகம் சார் பெறுமதிமிக்க 1,300இற்கும் அதிகமான பிரிவுகளையும், 20,000 இற்கும் மேற்பட்ட பட்டியல்களையும் கொண்ட 2012ஆம் ஆண்டுக்கான தமது புதிய SLT (எஸ்.எல்.ரி.) ரெயின்போ பேஜஸ் விவரக்கொத்தினை வெளியிட்டுள்ளது.

நடைமுறை வாழ்க்கைக்கு தேவையான பயனுள்ள தகவல்களைக் கொண்ட ஒரு பொக்கிஷமான குறித்த இந்த SLT ரெயின்போ பேஜஸ் விவரக்கொத்து, மேல் மாகாணத்திலுள்ள வாடிக்கையாளர்களுக்கு இலவசமாக விநியோகிக்கப்படுகின்றது. SLT ரெயின்போ பேஜஸ் விவரக்கொத்தானது, நாட்டில் வெளியிடப்படும் ஒரேயொரு வகைப்படுத்தப்பட்ட விவரக்கொத்தாக விளங்குவதனால், முழுமையான விவரக்கொத்து சேவையினை அனைவருக்கும் வழங்கும் ஒரேயொரு வழங்குனராக SLT இனை முன்நிறுத்துகின்றது.

2012ஆம் ஆண்டுப் பதிப்பு முறையாக உரிய வகையில் முறையாகப் புதுப்பிக்கப்பட்டுள்ளதுடன், அதன் அட்டையில் 'ஆயுன்வேதம்' தொடர்பாகருத்தாக்கத்தினைக் காட்சிப் படுத்து கின்றது.

SLT வாடிக்கையாளரல்லாதோரின் நலன்கருதி, குறித்த இந்த விவரக்கொத்தினை www.rainbow pages.lk என்ற இணையத்தளத்தினூடாக பார்வையிடும் வகையில் SLT தகுந்த நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இந்த இணையத்தளமானது மிகுந்த பிரபல்யம் பெற்றுள்ளதுடன், தமக்கு விருப்பமான பொருட்கள் சேவைகள் குறித்து தேடல்களை மேற்கொள்ளும் சர்வதேச நாடுகளிலிருந்தான இணையப் பார்வையாளர்களையும் ஈர்த்துள்ளது. (த)

பிரட்டோக்கின் இன் 2 ஆவது கிளை

அதிகரித்துவரும் வாடிக்கையாளர்களைக் கவருவதற்காக பிரட்டோக் நிறுவனம் தனது இரண்டாவது கிளையை பார்க் வீதி, கொழும்பு 02 இல் திறந்து வைத்துள்ளது.

புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த பேக்கரி பன்றி இறைச்சி மற்றும் மதுபானத்தை உணவுப் பொருள்களில் சேர்ப்பதைத் தவிர்த்துள்ளது. ப்ரெட்டோக்கில் தமது ஆரோக்கியத்தில் கூடிய கவனம் எடுக்கும் வாடிக்கையாளர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் விதத்தில் கோதுமை, தீட்டாத அரிசியில் தயாரிக்கப்பட்ட பதார்த்தங்கள் மற்றும் சூரியகாந்தி விதையில் தயாரிக்கப்பட்ட பண்டங்கள் ஆகியவை கிடைக்கின்றன.

நல்ல உணவை உண்ண விரும்பும் வாடிக்கையாளர்களை ப்ரெட்டோக் திருப்திப்படுத்துகின்றது. இதனுடன் 'பெமிலி பட்ஜெட் பெக்' எனப்படும் புதிய தயாரிப்பையும் அறிமுகப் படுத்தியுள்ளது.

இதில் பல்வேறு விதமான உணவு வகைகளை மலிவான விலைக்குப் பெற்றுக் கொள்ள முடியும்.

ப்ரெட்டோக்கில் தயாரிக்கப்படும் அனைத்து உணவுப் பண்டங்களும் சிங்கப்பூரிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன.

ஆகவேதான், எமது உள்ளூர் வாடிக்கையாளர்களின் மனம் விரும்பும் வகையில் பல்வேறு சுவைகளை இவர்களால் வழங்கமுடிகின்றது.

செலான் வங்கியின் பரிசு மேல் பரிசு வெகுமதித் திட்டத்தின் ஆடம்பர வீடு

செலான் வங்கியின் பரிசு மேல் பரிசு (Seylan Thagi Pita Thagi) வெகுமதி வழங்கல் திட்டத்தின் இறுதிச் சீட்டிழுப்பில், பள்ளேகல பிரதேசத்தைச் சேர்ந்தவரும் நான்கு மாதங்களான பச்சிளம் பெண் குழந்தையின் தாயாருமான அச்சலா நக்கவிட்ட (வயது 27) என்பவர் மிகவும் எதிர்பார்க்கப் பட்டிருந்த ரூபா 15 மில்லியன் பெறுமதியான ஆடம்பர வீட்டினை வென்றெடுக்கும் அதிர்ஷ்டசாலி வெற்றியாளராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். தனது கணவர் ஹர்ஷ மற்றும் குழந்தையான தருக்கி ஆகியோருடன் வருகைதந்திருந்த திருமதி, அச்சலா, செலான் வங்கி தலைவர் மொஹான் பீரிஸ் (ஜனாதிபதி சட்டத்தரணி) இடமிருந்து தனக்குரிய பரிசான புத்தம்புதிய வீட்டின் திறப்பினை சம்பிரதாய பூர்வமாகப் பெற்றுக் கொண்டார். (த)

SLIIT மற்றும் பிரிட்டிஷ் கவுன்சில் இணைந்து ஆங்கில கற்கைநெறிகள்

முதற்தர மேல்நிலைக்கல்வி நிலையமான SLIIT மற்றும் பிரிட்டிஷ் கவுன்சில் இணைந்து SLIIT கல்வி நிலையத்தில் IELTS கற்கைநெறிகளை முன்னெடுப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளன. இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் SLIIT இன் பிரதம நிறைவேற்று அதிகாரியும், முகாமைத்துவப் பணிப்பாளருமான பேராசிரியர் லலித் கமகே - மற்றும் பிரிட்டிஷ் கவுன்சிலின் நாட்டுக்கான பரீட்சைகள் பிரிவின் நிர்வாகி - ஹரியட் கார்ட்னர் ஆகியோர் கைச்சாத்திட்டனர்.

இந்த நிகழ்வில் SLIIT இன் தலைவர் பேராசிரியர் எஸ்.கருணாரட்ன, கணினிப் பிரிவின் பீடாதிபதி கலாநிதி மலித விஜேசுந்தர, உபேக்ஷா ரத்னசேன - (IELTS பேராசிரியர் ஆங்கில மொழிப் பயிற்சி பிரிவு - பிரிட்டிஷ் கவுன்சில்), SLIIT கல்வியகத்தை சேர்ந்த என்ட்டோய்னட் ஹேட்டியாரச்சி - தலைவர்/ ஆங்கில மொழி பயிற்சி பிரிவை பிரதிநித்துவப்படுத்துபவர் மற்றும் டிலீப மனவடு - சந்தைப்படுத்தல் பணிப்பாளர்- ஆங்கிலம் மற்றும் பரீட்சை பிரிவு ஆகியோர் பங்குபற்றியிருந்தனர். (த)

மாயமாகிவிடும் தலைக் கவசங்கள்

நவாலி, ஓக.12

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் நிறுத்தி வைக்கப்படும் மோட்டார் சைக்கிள் களிலுள்ள தலைக்கவசங்கள் மாயமாகி விடுகின்றன.

செயலகத்துக்கு தமது அலுவல்களின் நிமித்தம் மோட்டார் சைக்கிள்களில் வருபவர்கள் அவற்றை நிறுத்திவிட்டு தலைக்கவ சங்களைக் கழற்றி மோட்டார் சைக்கிளில் தொங்கவிட்டுச் செல் கின்றனர்.

தமது அலுவல்கள் முடிந்து வெளியில் வந்து மோட்டார் சைக் கிளைக் எடுக்கும்போது அதில் வைக்கப்பட்ட தலைக்கவசம் மாயமாகி விடுகிறது.

இவ்வாறு கடந்த ஒரு மாதத்தில் பல தலைக்கவசங்கள் மாய மாகி உள்ளன.

இதேவேளை இந்தச் செயலகத்தில் அண்மைக்காலமாக சைக்கிள் திருட்டுகள் அடிக்கடி இடம்பெற்று வந்ததும் இங்கு குறிப்பிடத் தக்கது.

(3-100)

விற்பனைக்கு

உடுவில் மகளிர் கல்லூரிக்கு முன்பாக 100 யார் தூரத்தில் மல்வம், ஞான வைரவர் கோயிலண்மையில் (லவ் லேனூடாக செல்லலாம்) 4-1/2 பரப்புக்காணி தனி வீடு, கிணற்றுடன் விற்பனைக்குண்டு. Aug 12th - 19th நேரில் பார்வையிடலாம்.

(சி/2232)(6.7.8)

077 2724373
077 8194205

காணி அல்லது காணியுடன் கூடிய வீடு தேவை

நல்லூர், கொக்குவில் , திருநெல்வேலி ஆகிய பிரதேசங்களை உள்ளடக்கியதாக இருப்பது விரும்பத்தக்கது.

தொடர்பு : 077 6872620

(21657)(6-7-8)

வீடு விற்பனை

நுணாவில் பிரதேசம், கல்வயல், ரயர்சேரியில் (நூக்கை அம்மன் வீதி)

3Rooms, 2ha, kitchen உடன் 4½ பரப்பு காணியுடன் வீடு உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 7724 469

(சி/2235) (45.6.7)

கார் விற்பனைக்கு

8ஸ்ரீ 9000 தொடர் இலக்கமுடைய மொரிஸ் மைனர் கார் உடன் விற்பனைக்குண்டு

தொடர்பு: மு. நந்தகுமாரன், சண்டிலிப்பாய் வடக்கு, சண்டிலிப்பாய்.

தொ.பே. 077 3365 374, 021 2240 064

(சி/21684) (45.6.7)

வீடு, காணி விற்பனைக்கு

ஊர்காவற்றுறை, கரம்பன் மேற்கு இல.44, அயத்தாம் பலம் வீதியில் 7 பரப்புடன் கூடிய காணியும் இரண்டு வீடுகளும் உடன் விற்பனைக்கு உண்டு. பெரிய வீடு, மின்சார வசதிகளுடன் தங்கக் கூடிய முறையிலும் சிறிய வீடு கூரைகள் இல்லாமலும் உள்ளது.
(சிவம் டெக்ஸ்டைல்ஸ்/ பாலா பிறதர்ஸ் வீடு)

தொடர்புகளுக்கு: N.சுந்தரலிங்கம்
011 2335330/ 0776 175898

(சி/2233) (5-7-6)

பால் வழங்குநருக்கான விண்ணப்பம் கோரல்
Calling for Organized Milk Suppliers

வடக்கு மற்றும் கிழக்கு பிர தேசங்களில் முன்மொழியப்பட்ட பாற்பண்ணை திட்டத்தை நடை முறைப்படுத்த வழங்குநர்கள் தேவைப்படுகின்றனர்.
தொழில்நுட்பம் மற்றும் நுட்பத்துறை ஆகியவற்றை உச்ச அளவில் பயன்படுத்தி உற்பத்தியை அதிகரிப்பதற்குத் தகைமையுள்ளவர்கள் தங்களது முழு விவரங்களையும் உள்ளடக்கி தொடர்புகொள்ளக்கூடிய தொலைபேசி இலக்கங்களையும் குறிப்பிட்டுப் பின்வரும் ஈமெயிலுக்கு விண்ணப்பங்களை அனுப்பவும். நாங்கள் உங்களுடன் தொடர்புகொள்கின்றோம்.

Email:maserativ12power@gmail.com

(சி/2242) (5-6-1)

மரண அறிவித்தல்

இளையதம்பி இராசரத்தினம்

(ஓய்வுபெற்ற தபாலதிபர்)

கோப்பாய் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி இராசரத்தினம் (ஓய்வு பெற்ற தபாலதிபர்) கடந்த (09.08.2012) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி - செல்லம்மா தம்பதியரின் மூத்த மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா - இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், சரஸ்வதியின் அன்புக்கணவரும், விமலராஜன் (நோர்வே), மகிழ்ராஜன் (கனடா), யோகராஜன் (கனடா), கலையரசி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், அமிர்தினி (நோர்வே), சொரூபாவதி (கனடா), பாமினி (கனடா), யோகராசன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனும், அகிலினா, விதுரன் (நோர்வே), நவீன், சயன், ரஷானா, ஹர்ஷனா, நீதன், சாம்பவி (கனடா) ஆகியோரின் அருமைப் பேரனும், பூபாலசிங்கம், காலஞ்சென்ற தனபாலசிங்கம் மற்றும் சிவபாக்கியம், கமலாதேவி, விவேகானந்தம், கனகமணி ஆகியோரின் அருமைப் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.08.2012) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 11.30 மணிக்கு கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோப்பாய் சரவணபவநந்தா வித்தியாசாலை அருகில்,
கோப்பாய் வடக்கு.

தகவல்
குடும்பத்தினர்.

(A/2230)(6.8.7)

பதவி வெற்றிடங்கள்

எமது நிறுவனத்தின் யாழ்ப்பாணம், உடுப்பிட்டி, நெல்லியடிக் கிளைகளில் பின்வரும் வெற்றிடங்கள் உள்ளன.

01. Receptionist / Secretary / Office Assistant
02. விரிவுரையாளர்கள் (Hotel Management / Computing / Business Managemant / Beauty Therapy)
03. Trainee English Teachers / English Teachers
04. Marketing Staffs / Sales Assistants நேர்முகப் பரீட்சைக்கான

பதிவுகளுக்கு 0777 172660 தொடர்பு கொள்ளவும்.

International Knowledge Pool
No.19, Thanarajah building (People's Bank)
Stanley Road, Jaffna.

(21688) (6.7.8)

மரண அறிவித்தல்

செல்லர் கணேஷ்

சங்குவேலி, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், வசிப்பிட மாகவும் கொண்ட செல்லர் கணேஷ் நேற்று (11.08.2012) சனிக்கிழமை இறை பதம் அடைந்துவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.08.2012) ஞாயிற்றுக் கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி மயானத் துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சங்குவேலி, மானிப்பாய்

தகவல்:
பிள்ளைகள்.

(21690)(6.7.8)

VACANCIES @

ESOFT
The Leader in Professional ICT Education

Join Srilanka's #1
Northern Region

LECTURER – Business Management

Should possess degree or higer Diploma in relevent field. Experience in lecturing for atleast one year is essential.

ASS . LECTURER – IT

Should possess degree or higer Diploma in relevent field. Conducting the Programming or Hardware & networking moduels. Able to work in Jaffna, Kilinochchi &Nelliady.

VISITING LECTURER – ENGLISH

Able to conducting Diploma in English, IELTS & City& guilds Courses.

MARKETING EXCUTIVIES

With or without part qulifications in marketing. Must have a pleasant, outlooking personallity. shoud be have a motor bike.(commission basics)

STUDENT COUNSELOR / RECEPTIONIST

Excellent communication in English & have an IT background. Trainees also requierd.

HOW TO APPLY

Send your CV **within 10 Days** to reach The Manager. mark the position that you are applyng for on the top left corner of the Envelope.

(சி/2230)(6.7.8)

ESOFT
The Leader in Professional ICT Education

ESOFT Computer Studies [Pvt] Ltd
17/1,Brown Road, Jaffna.
Hotline:077 3099308 Tel:021 222 4142
Mail : jaffna@esoft.lk Web : www.esoft.lk

United Nations Development Programme

Empowered lives. Resilient nations.

REQUEST FOR QUOTATION

PROVISION OF TECHNICAL FIELD SUPERVISION SERVICES TO CIVIL WORK CONSTRUCTION SITES IN KILINOCHCHI AND MULLAITIVU DISTRICTS

The Transition Recovery Programme (TRP) is UNDP's flagship recovery programme, and supports the socio-economic recovery of conflict-affected populations in the North, East and adjacent districts of Sri Lanka. TRP supports sustainable resettlement through integrated community- and area-based assistance for Internally Displaced Persons (IDPs) and host communities, through support to livelihoods, micro-finance and micro-enterprise development, community infrastructure development, housing, social transformation and community-based environment management.

UNDP Transition Recovery Programme (TRP) in Kilinochchi/Mullaitivu has been implementing livelihood and community based infrastructure projects through Community Based Organizations (CBOs) and private civil work contractors with the collaboration of government departments and institutions. The infrastructure interventions consist of renovation of minor and medium tanks and related structures, irrigation line channels, construction of community buildings, renovation of rural roads, school buildings, etc, in selected villages/ GN divisions in Kilinochchi and Mullaitivu districts.

In order to confirm the quality of work of the constructions activities, UNDP Kilinochchi/Mullaitivu wishes to engage field level supervision workforce (field/ site Technical Supervisors). The said workforce will be managed by an external consultancy firm. The consultancy firm is expected to be responsible for all aspects of human resource management (recruitment, placement, remuneration, etc.) of the workforce and provide the field supervision service to ensure quality of work. Further, the service provider is expected to handle security and all legal obligations of their workforce. The technical supervisors will be involved in daily supervision of construction activities and provide technical assistances to CBOs and civil works contractors. Technical guidance for the site supervisor will be given by the UNDP Kilinochchi/Mullaitivu Technical Team. The site level workforce requirements are as follows:

DS Division	Village/ GN division	Required Number of Site Supervisors *
Karaichchi, Kilinochchi	Uruthirapuram West	3
Oddusuddan, Mullaitivu	Oddusuddan	
Maritimepattu	Kumulamunai	

** Number of units (personnel) may be negotiated as per the change in field requirements from 2 to 4*

The service provider should,

1. be a registered organization capable of handling human resources,
2. demonstrate experience in managing human resources, especially, in civil works construction activities,
3. demonstrate experience in working with government and private stakeholders
4. have sufficient staff with qualifications and experience in monitoring construction activities, human resource management.

In respect of the above, the United Nations Development Programme (UNDP) wishes to call for bids from qualified registered civil work consultancy organizations or human resource management organizations to fulfil the above requirements. Only service providers that can demonstrate proof of the above stipulated requirements are eligible to apply, along with their certificates of registration/incorporation, profile and estimated budget. All terms of reference and reference tables and related documents can be collected from UNDP Kilinochchi/Mullaitivu Field Office between 13-20th of August 2012.

Deadline for the submission of the bids is Monday 20th August 2012 at or before 2.00pm, Sri Lanka standard time. The bids must be sealed and delivered to the UNDP Kilinochchi/Mullaitivu Field Office. All late submissions will be rejected and returned to the bidder unopened.

Head of Field Office
United Nations Development Programme
13c, 2nd Farm, Kanakapuram
Kilinochchi, Sri Lanka.

vijayakumar.navaneethan@undp.org

(P/2317) (2-7-6)

வாடகைக்கு

கைதடி தெற்கு பொன்னம்பலம் பெற்றோல் நிலையத்துக்கு அருகில் சிறிய ஆறு வீடுகள் வாடகைக்கு உண்டு. உடன் தொடர்பு கொள்ளவும்.

(21469)(2-6-7) தொடர்பு: 0777197029, 0771150544

காணி விற்பனைக்கு

பருத்தித்துறை பிரதான வீதி, புத்தூர் சந்தியில் 5 பரப்புக் காணியுடன் சகல வசதிகளுடனும் வீடு விற்பனைக்குண்டு. உடன் தொடர்பு கொள்ளவும்.

(21606)(2-6-7) தொடர்பு: 0771726854

கணினிகள் மற்றும் மடிக்கணினிகள் திருத்திக் கொடுக்கப்படும்

அனைத்து வகையான மடிக்கணினிகள் (Toshiba,Hp,Compaq, Acer,Sony,Lenovo) மற்றும் கணினிகள் (CPU, Monitor, UPS) திருத்திக்கொடுக்கப்படும். அனைத்து கணினிகளுக்குமான உதிரிப்பாகங்கள் (Hard Disk, DVD ROM, Monitor, Processor, Batteries, Screen, RAM,Mother board, etc) எம்மிடம் உண்டு.

நாடவேண்டிய இடம்:
i Buy Computers
75/10, Front Lane, Palay Road, Thirunelvely,Jaffna.
T.P.077 707 2092

(21674)(2-6-7)

(C/2161)(2-6)

இலவச அழகுக்கலை பயிற்சி
மற்றும்
ஒருநாள் பயிற்சிப் பட்டறை

சுவீடன் நாட்டு ஒறிபிளேம் (Oriflame) நிறுவனம் இலவச அழகுக்கலை பயிற்சி மற்றும் ஒருநாள் பயிற்சிப் பட்டறையை ஆசிரியர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், வெளிநாட்டில் இருந்து வந்து நிற்போர் எனப் பலரின் நலன் கருதி மீண்டும் ஆரம்பிக்கின்றது.

அனைத்துப் பயிற்சிகளும் செய்முறை விளக்கத்துடன் இடம் பெற்று பயிற்சியின் முடிவில் சர்வதேச சான்றிதழ்கள் வழங்கப்படும். அறிமுக நிகழ்வில் கலந்துகொண்டு உங்கள் பதிவுகளை மேற்கொள்ளவும்.

காலம்:- 14.08.2012
நேரம்:- முற்பகல் 10
இடம்:- 187/30, யூனியன் ஒழுங்கை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சத்திரச்சந்தி அருகில், கொட்டடி வீதி)
முக்கிய குறிப்பு:- ஆசனங்கள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. முற்பதிவுக்கு உங்கள் விவரங்களை எஸ்.எம்.எஸ். ஊடாக அனுப்பிவைக்கவும்.
* நிபந்தனைக்குட்பட்டது.
தொடர்புகளுக்கு:- 0772288243/ 021 4925152

(21628)(2-6-7)

(21497)(7.8.54)

உங்களுக்கு என்ன தொழில் இல்லையா?
வாருங்கள் எங்களுடன் உங்கள் திறமைக்கேற்ப சம்பளம்

எங்கள் பிரதான கைத்தொழிற்சாலைகளின் கிளைகளுக்கு ஜாம், பிஸ்கட், சொக்லேட், கேக், கிளவுஸ்,தேயிலை, பால்மா, டயர், சுவீட்ஸ், சிமெந்து ஆகிய உற்பத்தி பிரிவிற்கு, லேபர் பிரிவிற்கு (6 ஆம் ஆண்டு முதல் A/L வரை) 17 - 55 வயது வயதுவரையான தொழிலாளர்கள் தேவை. சாப்பாடு, தங்குமிடம் இலவசம் பயிற்சியுடன் 20,000/= முதல் 40,000/ = வரை சம்பளம். நண்பர்கள் குழுவும் சேர்த்துக் கொள்ளப்படும். கணவன், மனைவி இருவரும் ஒரே இடத்தில் வேலை செய்யும் வாய்ப்பும் உண்டு. கிளை-

தொடர்புகளுக்கு: 071 3460295

துறைமுகம் (தனியார்) பிரிவிற்கு மேசன், வெல்டர் சாதாரண சேவையாளார்கள் விமானத்தளம் (தனியார்) பிரிவிற்கு கேட்டரிங்,கிளினிங் பாதுகாப்பு உத்தியோத்தர் 6 wheel, 10 wheel டிப்பர், புசிவர், பார ஊர்திகள் சாரதிதேவை. JCB ஒப்பரேட்டர், வில்லேடர், ரோலர் ஒப்பரேட்டர், மேசன், சட்டரிங், பெயின்டர், எங்கள் இலங்கை முழுவதும் உள்ள கட்டட நிர்மாண வேலை வாய்ப்புகளும் உண்டு. சாப்பாடு தங்குமிடம் இலவசம் 50,000/= முதல்.

தொடர்புகளுக்கு: 071 3460295 (16935) (45.6.7)

காணி விற்பனைக்கு

கொழும்புத்துறை வீதியில் கணக்கர் சந்திக்கு அருகில் 1 ½ பரப்புக் காணி உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 077 5889971, 0777177343 (21634) (2-6)

வேலையாள் தேவை

பான்சிக்கடைக்கு வேலையாள் (பெண் பிள்ளை) தேவை. முன்பு வேலை புரிந்த அனுபவம் உடையவர்களும், யாழ். நகருக்கு அருகில் வசிப்பவர்களும் விரும்பத்தக்கது. பயிலுநரும் தொடர்புகொள்ளலாம்.

தொடர்பு: 077 9793 300 (21261) (6.7.2)

பெண் பணியாளர்கள் தேவை

எமது நிறுவனத்துக்குப் பொதி செய்யும் பகுதியில் வேலை செய்வதற்கு முன் அனுபவமுள்ள பெண் பிள்ளைகள் தேவை.

* நாளொன்றுக்கு 300/= சம்பளம் வழங்கப்படும்
* நேரில் வரும் போது கிராம சேவகரின் சிபாரிசுக் கடிதமும், சுயவிவரக்கோவையும் கொண்டு வரவும்.
* யாழ். மாநகரசபை எல்லைக்குள் வசிப்பவர்களுக்கும், திருமணமாகாதவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

குறிப்பு : முன்பு கப்பர் மார்க்கெட்டில் பொதி செய்தவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்

சிவா றணமணப் பூங்கா,
இல. 288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (21261) (6.7.2)

வீடு விற்பனைக்கு

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரிக்கு அருகில் வீட்டுடன் கூடிய நான்கு(4) பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 077 017 0389 , 021 225 0287 (21615)(2-6-7)

குத்தகைக்குக் காணிதேவை

யாழ்.மாநகர சபை எல்லையில் இருந்து 6 கிலோ மீற்றர் தூரத்துக்குள் பருத்தித்துறை றோட்/ பலாலி றோட்/ கே.கே.எஸ்.றோட்/ ஏ- 9 றோட் ஆகிய பிரதேசங்களை அண்டிய பகுதிகளில் நீர், மின்சார வசதியுடன் 5 பரப்புக் காணி தேவை.

தொடர்புகளுக்கு:-
0773296407/ 0215670350
(திங்கள் - வெள்ளி 8.30 - 5.00 வரை) (21625)(2-6-7)

Metro Travels

விசேட விமானக் கட்டணங்கள்

Colombo-Chennai-Colombo	18200
Colombo-Tiruchirapally-Colombo	18500
Colombo-Doha	23500
Colombo-London	50000
Colombo-Toronto	80000
Colombo-Singapore-Colombo	31500
Colombo-kualalumpur -Colombo	34500
Colombo-Frankfurt	71000
Colombo-Milan	68000
Colombo-Rome	68000
Colombo-Paris	71000
Colombo-Zurich	68000

All Taxes included, credit card Accepted with a surcharge & Travel insurance,
Above Fares Are Subject to seat Availability
Terms & Conditions Apply

மேலதிக தொடர்புகளுக்கு

(Branch office) No-272/1, Stanley Road, Jaffna.
Tel:-021 222 4647,021 222 9424
Week days 8.30 am to 5.00 pm
Saturday 9.00 am to 1.30 pm
New Branch office: No-34, New Bus Stand Complex, Vavuniya. Tel:024 222 6800 / 024 222 6801. (C\1605 (2,6,7)

Capital TRUST Securities is the number ONE Stock Broking Company in Sri Lanka in terms of Turnover, Brokerage Turnover & Trades in 2010 & FY 2010/2011. Due to rapid growth of our client base we have felt the need to recruit high calibre professionals to compliment our team.

INVESTMENT ANALYST – JAFFNA BRANCH

Ideal candidates we are looking for should possess either

- A degree from a recognized university in Finance/Accountancy/ Economics/Marketing or
- Full or part qualifications in CIMA/ACCA/ICASL/HND

Selected candidates should ideally possess excellent Marketing skills, preferably with some experience in the field of financial services marketing. They should also possess strong numerical and language skills including fluency in English and Tamil.

Those who are just after A/Ls will be recruited as Management Trainees.

Please enclose an updated resume including a clear recent photograph of the applicant to **ghrm@capitaltrust.lk** stating post you are applying for on the subject line by 24th August 2012.

capitaltrust
Capital TRUST Securities (Pvt) Ltd.
A Capital TRUST Group Company

42, Sir Mohammed Macan Markar Mawatha, Colombo 03 Phone : (011)5335225
Branches: Kandy Matara Negombo Kurunegala Kalutara Jaffna Kiribathgoda Moratuwa
www. capitaltrust.lk (21689)(2-7)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
24.11.1959

இறப்பு
25.07.2011

நாராயணன் கமலாசினி

மாதங்கள் பன்னிரண்டு சென்றதே அம்மா
ஆனாலும் எங்கள் ஈர விழிகள் காயவில்லையே
கல்வி தந்து உங்கள் செல்வமெல்லாம்
தந்து நாம் வல்லவராய் நல்லவராய்
வாழ வைத்த எங்கள் அன்புத் தெய்வமே
உங்கள் அன்பான திருமுகத்தை
என்று நாம் காண்போம் தாயே!

தொல்லை தனக்கென்று சுகமெல்லாம் எமக்கென்று
தோழமையோடு வாழ்ந்தாய் அம்மா
நெடுதூரம் நீ இன்றி – உன் பிள்ளை நான்
தொலைந்து போகிறேன் விதியின் சதியில்
மீளா உன் நினைவுகளுடன்
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

குடும்பத்தினர்.

இல.115, திருநகர், கிளிநொச்சி. (19300)(2-6-7)

தேவை

வேலைவாய்ப்பு குழுத்தலைவர்களுக்கும் சந்தைப்படுத்தல் முகவர்களுக்கும் ஒவ்வொரு பிரிவிலும் பயிற்சி வழங்கப் படும்.
தொடர்புகளுக்கு: செரி - 077 911 9111, 072 777 1288
email : abravff25@gmail.com
(க/2225)(6-7-8)

மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1977 இல் பிறந்த பரணி நட்சத்திரம் மேட ராசி, கிரகபாவம் 92, 8 இல் செவ்வாய் குற்றமுடைய மணமகனுக்கு தகுந்த மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றார்கள்.
தொடர்பு :077 480 2062
(21650)(7-8-8)

காணி விற்பனைக்கு

கிளிநொச்சி கரடிப்போக்குச் சந்திக்கு அருகில் கரைச்சிப் பகுதி பெரிய பரந்தனில் 09 ஏக்கர் வயல் காணி விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு: 077 8249711, 077 2054615
(க/2228)(6-7-8)

உயிரூட்டுகின்றோம்

தொழில்சார் மின்சார உபகரணங்கள், அனைத்தையும் உடனடியாகத் திருத்தி உயிரூட்டிக் கொள்ளவும் புதியனவற்றைக் கொள்வனவு செய்யவும் எங்கள் ஸ்தாபனத்தை நாடுங்கள். நாங்கள் விற்பனை செய்யும் சகல உபகரணங்களுக்குமான உத்தரவாத சேவை உடனடியாக எங்களால் வழங்கப்படும்.

5K, 2 K Diesel Generator

மின்சார பிரேக்கர்கள் 40,000/-

Green House Trading Company,
No.05, Karuwapulam Lane,
Adiyapatham Road, Kokuvil East,
Tel/Fax: 021 2226459, 071 4843432, 071 6805668.
(ஸ்ரீ மாகாண பிரதேச காரியாலயத்துக்கு அருகில்)

லண்டன்/கனடா/அமெரிக்கா/சுவிஸ்/ஜெர்மன்/பிரான்ஸ்/இத்தாலி/டென்மார்க்/ஆஸ்ரேலியா/நியூசிலாந்து மற்றும் ஏனைய நாடுகளில் விசா பெற்றுக் கொள்வதற்காக
அரச வங்கியில் ஒரே தினத்தில் - முன் 6 மாதம் பின் 3 மாதம்

பணவைப்பு வங்கியில்

077 863 4449

ஸ்ரூடன்/விசிட்/PR/மைகிரேஷன்/வேக்பொமிட்/பிஸ்னஸ்/விசாவுக்கு

FLEX Graphic

UNION SPEED LINE

395, Galle Road, Kollupitiya, Colombo-3
நேரத்தை முன்கூட்டியே பதிவு செய்துவிட்டு வரவும்.

காணி விற்பனைக்குண்டு

நல்லூர்வடக்கில், பூங்கனிச்சோலைக்கு முன் பாக 2 பரப்புக்காணி உடன் விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை
தொடர்பு : 077 6184431
(21647)(6-7-8)

ROOM வாடகைக்கு

பரமேஸ்வராச் சந்திக்கு அருகில் வாடகைக்குண்டு.
தொடர்புகளுக்கு : 077 1304944
(21644)(6-7-8)

வாடகைக்கு

யாழ். 03 ஆம் குறுக்குத்தெருவில் சகல வசதிகளுடனும் கூடிய மாடி வீடு வாடகைக்குண்டு. (தனியார் நிறுவனங்கள், கம்பனிகள் விரும்பத்தக்கது
தொடர்புகளுக்கு: 075 0524698
(21649)(6-7-8)

காணி, வீட்டுடன் கூடிய காணியும் விற்பனைக்கு

பொன்னாலை வீதி, 1 ஆம் ஒழுங்கை மானிப்பாயில் உள்ள
* 2 பரப்பு 0058 குளி வீட்டுடன் காணியும்
* 2 பரப்பு 05.71 குளி காணியும் விற்பனைக்குண்டு
தொடர்புகளுக்கு :075 0431145
(21637)(6-7-8)

காணி விற்பனைக்கு

கொக்குவில், தாவடி மேற்கு, இல. 20/7 நந்தாவில் குறுக்கு ஒழுங்கையில், ஐந்து வேம்படி என்னும் இடத்தில் 41 பனைகளும் பொழி கல்லால் கட்டப்பட்ட கிணறும் கொண்ட வீடு கட்டுவதற்கு ஏற்ற 5 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு : 077 9789793
(21653)(7-8-54)

காணி விற்பனைக்கு

யாழ். வடமராட்சி கற்கோவளம் கடற்கரை வீதி, ஐயன் கோயில் வெளி காணி ஆறு ஏக்கரள வில் விற்பனைக்குண்டு. குறித்த காணி வரை தார் இடப்பட்ட வீதியும் மின்சார இணைப்பும், கிணற்றில் நல்ல நீரும் உண்டு. தென்னைச் செய்கைக்கு அல்லது ஐஸ் தொழிற்சாலைக்கு அல்லது சுற்றுலா விடுதி அமைப்பதற்கு உகந்தது. தொடர்பு : 077 7745973 அல்லது 077 893 5404
(சி/2231)(7-8-54)

DAMRO

SALES ASSISTANTS

(Trainee)

Jaffna Showroom

We seek to recruit dynamic & self motivated individuals for the above showroom, who are expected to welcome, treat & fulfill the needs of our customers to their entire satisfaction.

APPLICANTS SHOULD :

- be males below 26 years of age.
- be permanent residents within 20km from the above showroom.
- have G.C.E (A/L) qualification.
- have a flair for customer relations.

Total earnings will not be less than Rs. 25,000/- p.m.

If the above positions are of interest to you, please forward a detailed resume with your contact numbers & contact details of two non-related referees to reach us within ten days of this advertisement.

The Human Resources Manager,
DAMRO
No: 361, Kandy Road, Nittambuwa.
E-mail: hrm@damro.lk

(21636)(6.7.8)

டிஜிட்டல் எலக்ரோணிக்ஸ் வழங்கும்

நல்லூர் திருவிழாக்கால சிறப்பு விலைத் தள்ளுபடி

SHARP

நிழற்படப்பிரதி இயந்திரங்களுடன் பெறுமதிமிக்க பரிசில்கள்

22,000 இக்கு மேற்பட்ட பிரதிகள் 112,000.00+ VAT

அல்லது

fax with Auto Cutter 116,000+VAT

அல்லது

டிஜிட்டல் கமரா 14.mp 116,000+VAT

* 01 வருடம்/60000 பிரதிகளுக்கான உத்தரவாதம்
* 01 வருடத்துக்கு இலவச திருத்தல் சேவைகள்

லீசிங் வசதி செய்து கொடுக்கப்படும்

உங்கள் மின்சார தேவைகளை இன்றே பூர்த்தி செய்யுங்கள்
மண்ணெண்ணெய் / டீசல் ஜெனரேட்டர்கள்

2KV

3.2.KV

5KV

* 06 மாதம்/01 வருட உத்தரவாதத்துடன்

இன்றே நாடுங்கள்

பிறவுஸ் & கம்பனியின் அங்கீகாரம் பெற்ற ஏக விநியோகஸ்த்தர்

டிஜிட்டல் எலக்ரோணிக்ஸ்
62/16, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
021 222 4040.
உடனடி அழைப்புக்கு- 077 662 3824/077 207 8636

(C232)(2.5.6.7)

மரண அறிவித்தல்

செல்வநாயகம் தெய்வசிகாமணி

(பிரபல புகையிலை வர்த்தகர்)

புதுவீதி, ஆறுகால்மடம், ஆனைக்கோட்டையை பிறப் பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்வநாயகம் - தெய்வசிகாமணி நேற்று முன்தினம் (10.08.2012) வெள்ளிக்கிழமை சிவபத மடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வர்களான செல்வநாயகம் இரத்தினம் தம்பதியரின் அருமை மகனும் காலஞ் சென்றவர்களான பொன் னையா - தங்கம்மா தம்பதி யரின் மருமகனும் நாகரத் தினம் அவர்களின் அன்புக் கணவரும், கருணாகரன், காலஞ்சென்ற மாலினி மற்றும் கிருபாகரன், கஜேந் திரன் (சுவிஸ்), கமலராணி ஆகியோரின் அன்புத் தந்தையும் சந்தானலட்சுமி, காலஞ்சென்ற நேசராசா மற்றும் நாகரஞ்சினி, சாந்தகௌரி (சுவிஸ்), யோகலிங்கம் ஆகியோரின் அன்பு மாமனும் கவிதா, விபுசன், ஜனார்த்தன், கோபிகா, கார்த்திகா (சுவிஸ்), சரனி (சுவிஸ்), சந்தியா (சுவிஸ்), சுஜேகா, மயூரி ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.08.2012) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

புது வீதி, ஆறுகால்மடம்,
ஆனைக்கோட்டை.

(21676)(45.6.7)

நித்தியசுகத்தை நோக்கி... உதயன் வைத்தியமலர் 76

கர்ப்பகால நீரிழிவு

நீரிழிவும் கர்ப்பகாலமும் என்பதை இரண்டு வகையாக உற்று நோக்கலாம்.

1.ஏற்கனவே நீரிழிவு நோய் உள்ள பெண் கர்ப்பமடைதல்.

2.கர்ப்பகாலத்தில் மட்டும் ஏற்படும் நீரிழிவு நோய்.

இங்கு கர்ப்ப காலத்தில் மட்டும் ஏற்படும் நீரிழிவு நோயைக் கருத்தில் கொள்வோம்.

கார்ப்பகாலத்தின் போது 2–4% பெண்கள் கர்ப்பகால நீரிழிவு நோயால் பாதிக்கப்படுகிறார்கள். இவ்வகை நீரிழிவு நோயானது பெரும்பான்மையினருக்கு குழந்தை பிறந்தவுடன் குணமடைந்துவிடுகின்றது. இருப்பினும் தாயின் பிற்கால வாழ்க்கையில் நீரிழிவு உண்டாவதற்கான வாய்ப்பு அதிகரிக்கின்றது.

வயது கூடிய பெண்கள், உடற்பருமன் கூடியவர்கள், முன்னைய கர்ப்பகாலங்களில் நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டவர்கள், நெருங்கிய உறவினர்களிடையே சலரோகம், கர்ப்பகால சலரோகம் இருத்தல், குழந்தைகளில் பிறப்பு நிறை அதிகரித்துக் காணப்படல் என்பன தாயின் தற்போதைய கர்ப்ப காலத்தில் நீரிழிவு நோய் ஏற்படுவதற்கான சந்தர்ப்பத்தை அதிகரிக்கின்றது.

கர்ப்பகால நீரிழிவைக் கண்டறிய கர்ப்ப காலத்தின் 26 ஆம் கிழமைகளில் வழமையாக செய்யப்படும் PPBS [உணவு அருந்தி இரண்டு மணிநேரம் பின் குருதியில் குளுக்கோஸ் அளவு அறியப்படல்] என்ற சோதனை துணைபுரிகிறது.

மேற்குறிப்பிட்ட சோதனையில் குருதி குளுக்கோஸ் அளவு உயர்வாக இருக்கும் இடத்து அதை உறுதிப்படுத்த OGTT என்ற சோதனை வைத்தியசாலையில் வைத்து செய்யப்படும்.

கர்ப்பகால சலரோகமானது குழந்தையிலும் தாயிலும் பல பாதிப்புக்களை ஏற்படுத்தலாம். அவையாவன.

★நிறைகூடிய குழந்தைகள் உருவாவதால் சுகப்பிரசவத்தில் சிக்கல்களும், சத்திரசிகிச்சை பிரசவத்தின் தேவையும் அதிகரிக்கின்றது.

★குழந்தை பிறந்தவுடன் குழந்தையின் இரத்தத்தில் சீனியின் அளவு சடுதியாகக் குறைவடைவதால் குழந்தைக்கு பாதிப்புக்கள் ஏற்படலாம்.

★குழந்தையின் சுவாசப்பை முதிர்ச்சி அடைதல் பாதிக்கப்படுவதால் மூச்சுத்திணறல் ஏற்படும்.

★குழந்தை இறந்து பிறத்தல்.

★குழந்தை பிற்காலத்தில் உடல்நிறை கூடியவராகவும் சலரோக நோயால் பாதிக்கப்படக் கூடியவராகவும் இருத்தல்.

கர்ப்பகால நீரிழிவு நோயால் மேற்கூறிய பாதிப்புக்கள் ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்கள் இருந்தபோதும். இந்தநோயை ஆரம்பகாலத்திலேயே கண்டறிவது மற்றும் தொடர்ச்சியான மருத்துவ கண்காணிப்பின் கீழ் சிகிச்சை பெறுவது என்பன ஆரோக்கியமான குழந்தையை, சாதாரணமாக பிரசவிக்க துணை புரியும். இதற்கு மருத்துவர்களின் பங்களிப்புடன் தாயின் ஒத்துழைப்பும் மிக அவசியமானது.

கர்ப்பம் தரித்தவுடன், கர்ப்பிணிகள், சிகிச்சை நிலையத்தில் பதிவு செய்து கிரமமாக Clinic சென்று வழக்கமான சோதனைகளை செய்வதன் மூலம் ஆரம்பகாலத்திலேயே நோயைக் கண்டறிவதுடன் மருத்துவ ஆலோசனை மற்றும் Scan சோதனைகளுக்கும் உள்ளாக்கப்பட முடியும்.

கர்ப்பகால நீரிழிவு நோயைத் தனியே உணவுக்கட்டுப்பாட்டுடன் கட்டுப்படுத்தல் வெகு சிலரால் மட்டுமே சாத்தியமாகின்றது.

பெரும்பாலான தாய்மார்களுக்கு உணவுக் கட்டுப்பாட்டிற்கு மேலதிகமாக Insulin தேவைப்படுகின்றது. மேலும் இறுக்கமான குளுக்கோஸ் கட்டுப்பாட்டை பேணுவதற்காக குறுகிய கால அளவுகளில் வைத்தியசாலை சென்று BSS என்ற சோதனை செய்வதன் மூலம் Insulin அளவு மாற்றி அமைக்கப்படும். கர்ப்பகால முடிவில் குழந்தை பிறப்போடு பெரும்பாலான தாய்மார் இந்நீரிழிவு நோயிலிருந்து விடுபடுவார்கள்.

Insulin பாவிக்கும் தாய்மார் குருதியில் குளுக்கோஸ் சடுதியாக குறைவடைவதாலும் பாதிக்கப்படலாம். குருதியில் சீனியின் அளவு குறையும் போது தாயிற்கு தலை சுற்றல், மயக்கம், வியர்த்தல்,நெஞ்சு படபடப்பு, பசி, பார்வை மங்குதல் போன்ற அறிகுறிகள் ஏற்படும்.



இவ்வறிகுறிகள் தென்படுமிடத்து உடனடியாக சீனி/glucose கொண்ட உணவுகளை எடுக்க வேண்டும். பின் வைத்திய ஆலோசனை பெற வேண்டும். உணவை நேரம் தவறாது உட்கொள்ளல் மற்றும் அளவான மருந்துப் பாவனை மூலம் இதனைத் தவிர்க்கலாம்.

உணவு முறை

கர்ப்பகாலத்தின் போது போசாக்குள்ள உணவுகளை போதிய அளவில் எடுத்தல் குழந்தையின் வளர்ச்சிக்கு அவசியம். எனினும் குருதியில் குளுக்கோசின் அளவில் சடுதியாக மாறுதலை ஏற்படுத்தக் கூடிய உணவுகளான சீனி, சக்கரை, தேன், இனிப்புப் பண்டங்கள், Malted பானங்கள் என்பவற்றைத் தவிர்த்தல் வேண்டும்.

ஒருவேளை உணவின் போது அதிகமாக உட்கொள்வதைத் தவிர்த்து, மூன்று பிரதான உணவுடன் 3 இடை உணவுகளைச் சிறிய அளவுகளில் எடுத்தல் நன்று. ஒரு தடவை உணவு உட்கொள்ளும்போது, அதில் 50% மாச்சத்தும் 25% கொழுப்பும், 25% புரதமும் உணவில் சேர்ந்திருத்தல் நன்று. உணவைத் தேர்ந்தெடுக்கும் போது அனைத்துப் போசனைகளையும் உள்ளடக்கியதாகவும் நார்ச்சத்து அதிகமாக உள்ளதாகவும் இருத்தல் உகந்தது.

பிரசவம்

நீரிழிவு நோய் தனியே பிரசவத்தின் தன்மையை நிர்ணயிக்காது. பிள்ளையின் அளவு, தாயின் இடுப்புக்குழி அளவு என்பவற்றைக் கொண்டு சாதாரண சுகப்பிரசவமாகவோ சத்திரசிகிச்சைப் பிரசவமாகவோ அமையலாம். எனினும் பிரசவம் நடைபெறும் வைத்தியசாலை சத்திரசிகிச்சை வசதி, சிசுக்களுக்கான கவனிப்புப் பகுதி உள்ள இடத்தில் இருக்கவேண்டும்.

குழந்தை பிறந்தவுடன் தாய்பாலூட்டப்படல் வேண்டும். இது குழந்தையின் குருதியில் குளுக்கோஸ் அளவு சடுதியாக குறைவதைத் தடுக்கும். பெரும்பாலான கர்ப்பகால நீரிழிவு உள்ள தாய்மார்கள் பிரசவத்தின் பின் மருந்துகள் பாவிக்க வேண்டியதில்லை.

மருத்துவர் இ.வித்தியா,இ.பௌத்திரா,
மகப்பேற்று பெண் நோயியல் பிரிவு,
யாழ்.மருத்துவமனை.

எஸ்.ரஜனி,அராலி

நான் 26 வயதுடைய எழுதுவினைஞராகப் பணிபுரிபவர். எனது முதலாவது கர்ப்பந்தங்கலில் 32 வாரங்கள் முடிவடைந்துள்ளன. இந்த நிலையில் கடந்த 2 வாரங்களாக எனது இரு முலைக்காம்புகளிலும் கடுமையான கடியால் பாதிக்கப்பட்டுள்ளேன். இது ஆபத்தான அறிகுறியா? இதற்கு என்ன செய்யலாம்?

கர்ப்பந்தரித்தலின் பின் தாயின் மார்பகங்களில் ஏற்படும் மாற்றங்கள் பிறக்கப்போகும் சிசுவுக்கான தாய்ப்பாலை உற்பத்தி செய்து வழங்குவதற்கு உதவுகின்றன. மார்பகங்களில் ஏற்படும் கடி பிரதானமாக முலைக்காம்புப் பிரதேசத்தில் உணரப்படுகிறது. இது கர்ப்பந்தரித்தலின் அறிகுறியாகக் கொள்ளப்படுவதுடன் பிறக்கப்போகும் சிசுவுக்கு தாய்ப்பாலை வழங்குவதுக்கு ஏற்றதாக விருத்தி அடைவதையும் குறிக்கின்றது.

கர்ப்பிணிப் பெண்களில் ஏற்படும் ஓமோன் மாற்றங்களினால் மார்பகங்களில் அதிகளவு கொழுப்பு படிவதுடன் பாற்சுரப்பிகளும் கான்களும் விருத்தியடைகின்றன. இதனால் மார்பகங்கள் அளவில் பெரிதாவதால் அதிக வலியும் அதன் தோல் அதிக உணர்ச்சி கூடியதாகவும் மாறுகிறது. தோல் இலகுவில் வறண்டதாகவும் வலிகொண்டதாகவும் காணப்படுவதால் கடியுணர்ச்சி தோன்றுகிறது.

ஒவ்வாமை, எக்சிமா, பங்கசு கிருமித்தொற்று, மார்பகப்புற்றுநோய் போன்ற நோய்களும் பவுடர் வகைகள், பழைய உள்ளாடைகள் போன்றவையும் முலைக்காம்பில் கடியை ஏற்படுத்தலாம். நீரிழிவு நோயுடைய பெண்களில் இது பொதுவாகக் காணப்படுகிறது.

கடுமையான கடி, தோல் அழற்சி, நோ, முலைக்காம்பில் திரவப் பதார்த்தம் வெளியேறல் (கீழ் இரத்தம்), மார்பகக் கட்டி போன்ற அறிகுறிகள் காணப்படின் வைத்திய ஆலோசனையை உடனடியாக நாடுதல் வேண்டும். சில பெண்கள் தமது மாதவிடாய் போக்கின் போதும் முலைக்காம்பில் கடியால் பாதிக்கப்படுகின்றனர். அதிகளவு வறண்ட தோலும் கடி ஏற்படக் காரணமாகிறது. கர்ப்பகாலத்தில் காணப்படும் இந்தக் கடியானது சிசு பிரசவிக்கப்பட்டு பாலூட்டத் தொடங்கும் போது மறைந்து விடுகிறது. எனினும் பாலூட்டும் போதும் கடி உணரப்படின் உடனடியாக வைத்திய ஆலோசனை பெறுதல் நன்று.

கர்ப்பகாலத்தில் முலைக்காம்பில் ஏற்படும் கடியைக் குறைப்பதற்கு ஈரலிப்பாக்கும் லோசன்களையும் கிறீம்களையும் பாவிக்கலாம். ஒலிவ் எண்ணெய், தேங்காயெண்ணெய் போன்ற எண்ணெய் வகையைப் பூசுவதால் தோலில் ஏற்படும் கடியைக் குறைக்கலாம். கிறீம் அல்லது எண்ணெய் வகையினைப் பூசி மசாஜ் செய்வதன் மூலமும் அந்த இடத்துக்கான குருதியோட்டத்தை அதிகரிப்பதன் மூலமும் தோல் வறட்சியைக் குறைக்கலாம்.

தோலிற்கு பவுடர் வகைகளைப் பூசுவதை நிறுத்தல் வேண்டும். பவுடர் தோலின் ஈரலிப்பை உறிஞ்சுவதன் மூலம் உலர்வாக்கி கடியை அதிகரிக்கும். அதிகளவு சவர்க்காரத்தை உபயோகித்தல் சுடுநீரில் நீராடுதல் போன்றவையும் உலர்ந்த சருமத்தை ஏற்படுத்தி கடியைத் தோற்றுவிக்கும்.

நீராடியபின் ஈரலிப்பைப் பேணும் கிறீம், எண்ணெய் வகைகளைப் பூசுதல், தோலிற்கு ஒவ்வாமையை ஏற்படுத்தாத உள்ளாடையை அணிதல் போன்றவை நலம் பயக்கும்.

ஒவ்வாமையை உலர்வை ஏற்படுத்தும் சவர்க்காரம், பவுடர் வகை, வாசனைத் திரவியங்களைத் தவிர்க்க வேண்டும். கடியுள்ள இடங்களை நகங்களால்சொறிதல் கூடாது. பழைய, இறுக்கமான தோலைப் பாதிக்கும் உள்ளாடைகளை அணியக் கூடாது.

கர்ப்பம் தங்கலால் முலைக்காம்பில் தோன்றும் கடி பெரிய பிரச்சினைகளை ஏற்படுத்தாது. ஆனால் அசௌகரியத்தை ஏற்படுத்தலாம். எனவே வைத்திய ஆலோசனையை நாடி தகுந்த சிகிச்சையைப் பெற்றுக்கொள்ளலாம்.

மருத்துவர் யோ.சிவாகரன்
யாழ்.போதனா வைத்தியசாலை

உதயனின் இந்த வைத்தியமலர் யாழ்.போதனா வைத்தியசாலையின் நீரிழிவுச் சிகிச்சைப் பிரிவால் தொகுத்து வழங்கப்படுகிறது. மலர் சம்பந்தமான உங்கள் அபிப்பிராயங்களையும் மருத்துவம் சம்பந்தமான உங்கள் சந்தேகங்களையும் - நித்திய சுகத்தை நோக்கி..., நீரிழிவு சிகிச்சை நிலையம், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம். என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள். உங்கள் வினாக்களும் அதற்கான பதில்களும் இந்தப் பகுதியில் பிரசுரமாகும்.

நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

துர்க்கா மணி மண்டபத்தில் நடைபெறும் தெய்வீக இசை யரங்கில் இருபதாம் திருவிழாவான இன்று மாலை 6.30 மணிக்கு சென்னை அரவிந் பார்கவ் மென்டலின் இசைச்சுச்சேரி நடைபெறவுள்ளது. மிருதங்கம்- சென்னை சத்தியநாராய ணன், கடம் - எஸ்.ஹரிகர சுப்பிரமணியன்.

பிற்பகல் 2 மணிக்கு வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலய அற நெறி பாடசாலை கூட்டுப்பிரார்த்தனை நிகழ்வு இடம்பெறும். (3-14-86)

* * *

நல்லை ஆதீன குருமூர்த்தி மண்டபத்தில் இன்று மாலை 6.30 மணிக்கு 'கானகதா வாரிதி' பிரம்மஸ்ரீ சிவ.வை. நித்தி யானந்த சர்மா நிகழ்த்தும் கந்தபுராணம் பற்றிய தெய்வீகத் தொடர் இசைப் பேருரை யில் 'முதல் மரியாதை' இடம்பெறவுள்ளது.(3)

* * *

நடராசா பரமேஸ்வரி மணி மண்டபத்தில் இன்று மாலை 6.30 மணிக்கு நடராசா தேவராசா "திருக்கோயில் வழிபாடு" என்ற கருப்பொருளில் சிறப்புச் சொற் பொழிவு ஆற்றுவார். (3)

* * *

நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மணிமண்டபத்தில் இன்று பிற்பகல் 3 மணிக்கு மு. திருநாவுக்கரசு 'சிந்தனை செய்வோம்' எண்ணும்கருப்பொருளில் சொற்பொழிவு நிகழ்த்துவார். தொடர்ந்து அராலி கோகுலம் அறநெறிப் பாடசாலை, அளவெட்டி காமாட்சி அம்மன், நீர்வேலி ஸ்ரீ முருகன் அற நெறிப் பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்வுகள் இடம் பெறும். சிறப்பு நிகழ்ச்சியாக செல்வி கதிரவேலு சிவ யோகராணியின் பக்திப் பாமாலை இடம்பெறும். (3-7-86)

* * *

மகேஸ்வரன் மணிமண்டபத்தில் மாலை 7மணிக்கு ஜாக் கிரத சைதன்யாவின் "என் நாளும் நல்லூரை வலம் வந்து வணங்கினால்' என்னும் கருப்பொருளில் ஆன்மிக அருளுரை இடம்பெறும். (3-14)

ரஷ்யப் பிரஜையை காவெடுத்தது அலை

கொஸ்கொட - இதுருவ பகுதி ஹோட்டல் ஒன்றில் தங்கியிருந்து ஹோட்டலின் பின்புறமாகவுள்ள கடலுக்கு நீராடச் சென்ற ரஷ்யப் பிரஜை அலையில் அடித்துச் செல்லப்பட்டு உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை மாலை இடம்பெற்றதாக கொஸ்கொட பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது:-

தனது மனைவி மற்றும் மற்றுமொரு வெளிநாட்டு பிரஜையுடன் கடலில் நீராடச் சென்ற 32 வயதுடைய பெதரினோ விக்டர் என்ற நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவரது சடலம் பரிசோதனைக்கென கராபிட்டிய வைத் தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது என கொஸ்கொட பொலி ஸார் கூறினர். (3)

நல்லூர் உற்சவத்தை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் நிகழ்வில் மூளாய் ஞானஒளி அறநெறிப்பாடசாலை மாணவிகளின் கிராமிய நடன நிகழ்வை க் காணலாம். (7)

முட்டையின் விலை வீழ்ச்சி

வலி.வடக்கு, ஓக.12

யாழ். குடாநாட்டில் முட்டையின் விலை பெரும் அளவில் வீழ்ச்சி கண்டுள்ளது.

கடந்த மாதம் 12 ரூபா முதல் 14 ரூபா வரையில் விற்பனை செய்யப்பட்டு வந்த முட்டை இந்த மாதம் 09 ரூபா முதல் 10 ரூபா வரையான விலையில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

நல்லூர் ஆலய உற்சவம் இடம்பெறுவதைத் தொடர்ந்து முட்டையைக் கொள்வனவு செய்பவர்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ள நிலையில் முட்டையின் விலையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (3-86)

விவசாயிகளுக்கான ஓய்வூதியம் வெள்ளி முதல் வழங்கப்படும்

விவசாயிகளுக்கான ஓய்வூதியக் கொடுப்பனவை எதிர்வரும் 17ஆம் திகதி வெள்ளிக்கிழமை முதல் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என நிதி மற்றும்நிதித் திட்டமிடல் அமைச்சு தெரிவித்துள்ளது.

பிரதேச செயலகங்கள் ஊடாக குறித்த கொடுப்பனவை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. விவசாய ஓய்வூதியம் பெற தகுதிபெற்று அதனைப் பெற்றுக் கொள்வதில் சிக்கல்களை எதிர்நோக்கி வந்த விவசாயிகளுக்கு இந்தக்கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

மேலும் இந்த வருடம் பெரும்போக நெற்செய்கையில் வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சு அறிவித்துள்ளது.

நிதித்திட்டமிடல்அமைச்சு மற்றும் கமநல சேவைகள் அமைச்சு ஆகியன இணைந்து இந்த நடவடிக்கையில் ஈடுபடவுள்ளன.(3)

அச்சுவேலி குழுமத்தால் மாணவர்களுக்கு கற்றல் உபகரணம் வழங்கல்

ஒருங்கிணைந்த அச்சுவேலிக் குழுமம்(ஏ.சீ.சீ.) அச்சுவேலிப் பகுதியில் உள்ள ஆரம்பப் பாடசாலைகளில் கல்வி கற்கும் குடும்ப உறவுகளை இழந்த மாணவர்களுக்கு கற்றல் துணைச் சாதனங்களை வழங்கி வருகின்றது.

புலம்பெயர் நாடுகளில் வாழும் அச்சுவேலிப் பகுதியைச் சேர்ந்த வர்களின் அமைப்பான ஒருங்கிணைந்த அச்சுவேலிக் குழுமம் (ஏ.சீ.சீ) பாடசாலை மாணவர்களுக்குச் சப்பாத்து, பயிற்சிக் கொப்பிகள், பேனா, கணித உபகரணப் பெட்டி, சாப்பாட்டுப்பெட்டி, பாடசாலைப் பை மற்றும் உபகரணங்கள் உள்ளடக்கிய 3 ஆயிரம் ரூபாவுக்கு மேற்பட்ட பெறுமதி கொண்ட கற்றல் உபகரணத்தொகுதியை ஒவ்வொரு மாணவர்களுக்கும் வழங்கியது.

பாடசாலை அதிபர்கள் மற்றும் பொறுப்பாசிரியர்கள் மூலம் உறவுகளை இழந்த மாணவர்களின் விவரங்களை திரட்டி தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு பாடசாலை தோறும் நேரடியாகச் சென்று கற்றல் உபகரணத் தொகுதியை வழங்கியது. மேற்படி உபகரணத் தொகுதியை வழங்கும் நிகழ்வில் ஜேர்மனியில் இருந்து வருகை தந்திருந்த அமைப்பின் பிரதிநிதி எஸ்.டமேஸ் இந்த நிகழ்வில் கலந்து கொண்டு கற்றல் உபகரணத் தொகுதியை மாணவர்களுக்கு வழங்கினார்.

ஒருங்கிணைந்த அச்சுவேலி குழுமம் அச்சுவேலிப் பகுதி மாணவர்களின் கல்வியை வளம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு உருவாக்கப்பட்டு செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (3-11)

இன்றைய நாள்

தருவது வித்தீயா

உங்களுக்கு எப்படி?

மேடம்: நீங்கள் தேடிச் சென்று பார்க்க நினைத்த நண்பர் ஒருவர் உங்களைத் தேடி வருவார். தொழில், வியாபார ரீதியாக வர வேண்டிய பண வரவுகளைப் பெறுவீர்கள். குழந்தைகள் கேட்டதை வாங்கிக் கொடுப்பீர்கள். உறவினர் ஒருவர் ஆதாயம் பெற நீங்கள் உதவிகரமாக இருப்பீர்கள்.

இடபம்: சில விஷயங்கள் குறித்து பெரிய அளவில் கற்பனை செய்து அது நடக்காமல் போகலாம். உங்களுக்கு வேண்டிய ஒருவருக்காக மற்றொருவரிடம் உதவி கேட்பீர்கள். இறை வழிபாடுகளில் நாட்டம் செல்லும். சுபகாரிய நிகழ்ச்சியில் பங்கேற்பீர்கள். நீண்ட நாள்களாக தள்ளி வைத்த வெளியூர் பயணங்களை மேற்கொள்வீர்கள்.

மிதுனம்: மற்றவர்களின் விமர்சனங்களுக்கு ஆளாகலாம். குறைந்த செலவில் முடியும் என, நினைத்த வேலை ஒன்றுக்கு அதிகமாகச் செலவாகும். சக ஊழியர்கள் விடுமுறையால், கூடுதல் வேலைப்பளு ஏற்படும். நீங்கள் சில தவறுகளைச் செய்து விட்டு, அது தெரியாமல் மற்றவர்களிடம் சண்டை போடலாம். வெறுப்பு உண்டாகும்.

கடகம்: மதிப்பு, கௌரவம் பார்த்து சில காரியங்களைச் செய்வீர்கள். சில விஷயங்களில் புத்திசாலித்தனமாக செயல்படுவதன் மூலம், கூடுதல் ஆதாயம் பெறுவீர்கள். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். நண்பர்களுடன் சில விஷயங்களைக் கலந்து ஆலோசிப்பீர்கள். அலைச்சல் இல்லாமல், சில வேலைகளைச் சுலபமாக முடிக்கும் வாய்ப்புக் கிட்டும்.

சிங்கம்: மற்றவர்களை நம்பி எந்தக் காரியத்திலும் இறங்க வேண்டாம். வெளியிடங்களுக்கு செல்லும் போது, நண்பர் ஒருவரை எதிர்பாராமல் பார்க்க நேரிடும். சில வேலைகளுக்காக நீண்ட நேரம் காத்திருக்க வேண்டியிருக்கும்.

கன்னி: வேலை நெருக்கடிகளால் வெறுப்பு, விரக்தி உண்டாகும். மற்றவர்களின் பேச்சைக் கேட்டு, சில காரியங்களில் இறங்கி விட்டு, அவதிப்படுவீர்கள். கடன் மீதி ஒன்றை கண்டிப்புடன் வசூலிப்பீர்கள். வெளியிடங்களுக்கு செல்லும் போது, உடனுக்குடன் வாகனங்கள் கிடைத்து சந்தோஷம் அடைவீர்கள். மற்றவர்களுக்காகச் செலவிடலாம்.

நாலடி

ஆடி 29 திங்கட்கிழமை 13.08.2012
திதி: ஏகாதசி மு.இ. 07.56 வரை
நட்சத்திரம்: மிருகசீரிடம், பி.ப. 03.50 வரை
சுபநேரம்:12.05-01.35 வரை
ராகு காலம்: 07.35-09.05 வரை

துலாம்: எடுத்த காரியங்களில் எதிர்பாராத வெற்றி கிடைக்கும். இரண்டு மூன்று நாள்களாக எதிர்பார்த்த பணவரவு ஒன்று இன்று கைக்கு வரும். மற்றவர்கள் பாராட்டும் வகையில், எந்தக் காரியத்தையும் செய்ய முற்படுவீர்கள். உறவினர் ஒருவர் வழியில் எதிபார்த்த உதவி கிடைக்கும்.

விருச்சிகம்: பணம் கொடுக்கல், வாங்கல் விஷயங்களில் சிலரிடம் கண்டிப்புடன் நடந்து கொள்வீர்கள். நண்பர்கள் சிலர் உங்களுக்காகச் செலவு செய்வார்கள். வெளியூரில் வசிக்கும் ஒருவர், உங்களைத் தொடர்பு கொண்டு முக்கிய விஷயமாகப் பேசுவார்கள்.

தனுசு: நடக்குமோ, நடக்காதோ என நினைத்த காரியம் ஒன்று நல்ல விதமாக நடந்து முடியும். சில விஷயங்களில் மற்றவர்களை முந்திக் கொண்டு செயல்பட முற்படுவீர்கள். எதிர் பாராத பண வரவுகளைப் பெறுவீர்கள். தாய்வழி உறவுகள் மூலம் சில நன்மை ஏற்படும்.

மகரம்: தர்ம, புண்ணிய காரியங்களில் மனம் ஆர்வம் கொள்ளும். சில செலவுகளுக்கு சேமிப்பில் இருந்து எடுத்துச் செலவு செய்வீர்கள். தொழில் ரீதியாக சிலருக்கு உதவி செய்வீர்கள். அல்லது யோசனை சொல்வீர்கள். நீண்ட நாள்களாக எதிர்பார்த்த முக்கிய செய்தி வந்து சேரும்.

கும்பம்: நண்பர்கள் சிலர் உங்களைப் பாராட்டிப் பேசலாம். குழந்தைகளின் எதிர்காலம் தொடர்பான விஷயங்களில் அக்கறை காட்டுவீர்கள். நீங்கள் குறைவாக மதிப்பட்ட ஒருவர் மூலம் பெரிய அளவில் உதவி கிடைக்கும். விருந்தினர்கள் வருகையால் வீட்டில் கலகலப்பு குடி கொள்ளும். வாகன பராமரிப்புச் செலவு கூடும்.

மீனம்: பரபரப்பாகச் செயல்பட்டு பணியாற்றுவீர்கள். கனிவான பேச்சுக்களால் சிலரிடம் காரியம் சாதிப்பீர்கள். எதிர்பார்த்த பண வரவுகள் மட்டுமின்றி, எதிர்பாராத பண வரவுகளையும் பெறலாம். பெண்கள் சிலர் மூலம் முக்கியமான உதவி கிடைக்கலாம்.

சுடோக்கு

எண் விளையாட்டு

		2		7			9	
3	7				4	2	8	
				6			7	5
	2			4	1	7		
		8	5		2	6		
		1	7	3			4	
5	3			2				
	9	6	1				3	4
	8			5		9		

சுடோக்கின் நேற்றைய விடை

1	5	6	7	8	2	9	3	4
3	4	2	6	1	9	7	5	8
8	7	9	3	5	4	6	2	1
5	9	1	2	7	8	3	4	6
4	2	8	9	6	3	1	7	5
7	6	3	1	4	5	8	9	2
9	3	5	8	2	1	4	6	7
6	1	4	5	3	7	2	8	9
2	8	7	4	9	6	5	1	3

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்ளெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

ஆஸ்திரேலியா 5 வருட குடும்ப விசா ஆலோசனை நிரந்தர குடியுரிமை பெறலாம்

★ கணவன்/ மனைவி 54 வயதிற்குக் கீழ்
★ சட்டரீதியான ஆலோசனை
★ நிரந்தர குடியுரிமை பெற 2 வருடங்களில் தகுதி
★ தொழில் வாய்ப்பில் ஆலோசனை.

திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்டெட் (PV82703)
முன் மாதிரியான விசா ஆலோசனை நிறுவனம்
37, சிவகுருநாதர் ஒழுங்கை. பிறவுன் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.021 221 9016

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ

வீட்டுக்கிருத்திய அழைப்பு

பிறப்பு 07 ★ 02 ★ 1929
இறப்பு 28 ★ 07 ★ 2012

கடந்த 28.07.2012 சனிக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வம்

அமரர் செல்லையா நடராஜா

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (12.08.2012) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நாகலிங்க சுவாமிகள் வீதி,
சங்கானை. (21685)(6.7.8)

குடும்பத்தினர்.

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 1980 ★ 06 ★ 03
இறப்பு 2011 ★ 07 ★ 25

ஜெகதீஸ்வரன் சுஜீவன்

(மடு பெரிய பண்டிவிரிச்சான்)

ஆண்டு ஒன்று ஆன போதும்
ஆறவில்லை எம் துயரம்
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் நினைவலைகள்
எம் நெஞ்சை விட்டு அகலாது

பிரிவால் துயருறும்:
தாய், தந்தை, மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள்.

(19802)(6.7.8)

திருடப்பட்ட சைக்கிள்கள் மீட்பு

சந்தேகத்தின் பேரில் மானிப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்ட இரண்டு சந்தேக நபர்கள் கொடுத்த தகவலின் அடிப்படையில் திருட்டுப்போன நான்கு சைக்கிள்கள் மீட்கப்பட்டுள்ளன.

மானிப்பாய் பொலிஸார் இரண்டு பேரில் சந்தேகம் கொண்டு இருவரையும் கைது செய்து பொலிஸ் நிலையம் கொண்டு சென்று விசாரணையை மேற்கொண்டார்கள்.

அவர்கள் வழங்கிய தகவலின் அடிப்படையில் களவாடப்பட்ட நான்கு சைக்கிள்கள் மீட்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாணத்தில் கடந்த மே மாதம் திருட்டுப் போன சைக்கிள்களுடன் மேலும் மூன்று லுமாலா சைக்கிள்களும் மீட்கப்பட்டுள்ளன. உரிய சைக்கிள்களின் உரிமையாளர்கள் மானிப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியுடன் தொடர்பு கொண்டு சைக்கிள்களை பெற முடியும் எனப் பொலிஸார் கூறியுள்ளனர்.

(ம-86)

தவறி வீழ்ந்து காயம்

கொழும்பு கதிர்காமக் கந்தன் திருவிழாக் காலத்தில் வழிபடச் சென்ற பருத்தித்துறையைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் மலையிலிருந்து திரும்பும் போது படிக்கட்டுகளில் தவறிவிழுந்து படுகாயமடைந்தார். பருத்தித்துறை கல்லூரி வீதியைச் சேர்ந்த வசிகரன் (வயது-19) என்பவரே காயமடைந்தவராவர்.

தலை, கை, கால்களில் காயங்களுக்கு ஆளான இவர் உடனடியாக அம்பந்தோட்டை அரசினர் வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு அவசர சிகிச்சை அளிக்கப்பட்ட பின்னர் யாழ். போதனா வைத்திய சாலைக்கு மாற்றப் பட்டுச் சிகிச்சை பெற்று வருகின்றார். (ம-8)

காணி விற்பனைக்கு

யாழ். வடமராட்சி 15 ஆம் கட்டை, உடுப்பிட்டியில் அரைத்தும் ஆலை (Grinding Mill) 2½ பரப்பு காணியுடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 7680 430
(சி/2233) (45.6.7)

காணி விற்பனைக்கு

யாழ். நகரில் மானிப்பாய் வீதியில் 5½ பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு. தேவையானவர்கள் மாத்திரம் தொடர்புகொள்ளவும்.
தொடர்பு: 077 3087 110 நேரங்கள் வேண்டாம்.
(சி/2235) (45.6.7)

HONDA மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

Honda (CD 125 T Benly) NO WJ - xxxx
உற்பத்தி 2007 பதிவு 2011 (1 st Owner)
விற்பனைக்கு Rs. 315.000/=
Tel : 077 7535749
(சி/2234)(6-7-8)

நாய்க்குட்டி விற்பனைக்கு

பொம்மேரியன் நாய் இரண்டு விற்பனைக்கு உண்டு. பெரியநாய் பெண் 1½ வயதும் சிறிய நாய்க்குட்டியும் - 4 மாதம் விற்பனைக்குண்டு.
தொடர்பு: மு. செல்வவிநாயகமூர்த்தி,
கொக்குவில் மேற்கு,
குளக்கரை லேன், புகையிரத நிலையம் - மேற்கு
கொக்குவில். (வவா) (21679) (45.6.7)

காணி விற்பனைக்கு

மல்லாகம் புகையிரத வீதிக்கு அருகில்
1½ பரப்புக்காணி கிணற்றுடன்
விற்பனைக்கு உண்டு.
தொடர்பு : 071 4357256, 075 088 4533
(சி/2229)(6-7-8)

குடியிருப்பு காணி உடன் விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நல்லூர் சட்டநாதர் சிவன் கோயில் சூழலில் இல. 23, இராஜ வீதியில் அமைந்த நிலப்பரப்பு 4 - 16 குளி காணி உடன் விற்பனைக்கு உண்டு. தரகர் மூலமான கோரிக்கை நிராகரிக்கப்படும், ஏற்கக்கூடிய விலைக்கோரிக்கையாளர்களுக்கு காணிக்குள் சென்று பார்வையிட வசதி செய்யப்படும். உத்தேச கொள்வனவு விலையை பரப்பு 1இக்கு தெரிவிக்கவும் மீண்டும் அளந்தே விற்பனை செய்யப்படும்.

விளம்பர இல : 4390
மே / பா உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(சி/2230)(6-7-8)

Multilac PREMIUM PAINTS
Macksons Paints Worldwide
SGS ISO 9001:2008 CERTIFIED

■ விற்பனை நிறைவேற்று அதிகாரி
■ விற்பனை பிரதிநிதி
■ விற்பனை பிரதிநிதி பயிலுநர்

பதவிகளுக்கு தேவைப்படும் தகைமைகள்:

- விண்ணப்பதாரி 35 வயதுக்குட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
- க.பொ.த உயர்தர தகைமையை கொண்டிருத்தல் வேண்டும்.
- சிறந்த தலைமைத்துவம் மற்றும் தொடர்பாடல் திறன் உள்ளவராக இருத்தல் வேண்டும்.
- நாட்டின் எப்பகுதியிலும் குழுவாக வேலை செய்யக்கூடியது விரும்பத்தக்கது.
- அனுபவம் மேலதிகத் தகைமையாகக் கொள்ளப்படும்.

தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகளுக்கு தகுந்த சம்பளமும், ஊக்குவிப்பு கொடுப்பனவும் வழங்கப்படும். சம்பளம் ஐந்து இலக்கங்களுக்கு அதிகமான தொகை பெற வாய்ப்புண்டு. அத்துடன் வெளிநாட்டு பயண வசதி. கம்பனியால் வழங்கப்படும் மோட்டார் சைக்கிள் மற்றும் திறமைக்கேற்ப கார் ஒன்றையும் சொந்தமாக்கும் வாய்ப்புகள் உண்டு.

உங்கள் சுயவிபரக் கோவையை உறவினரல்லாத இருவரின் பெயர், தொ.பே.இல. என்பனவற்றை குறிப்பிட்டு, இவ்விளம்பரம் பிரசுரித்து 07 நாட்களுக்குள் எமக்கு கிடைக்கக்கூடியதாக கீழே உள்ள முகவரிக்கு அனுப்பி வைக்கவும். விண்ணப்பிக்கும் பதவியைக் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் எழுதவும்.

Group Manager – Human Resources & Administration
Macksons Paints Lanka (Pvt) Ltd
No. 75/1, Wattalpola Road, Henamulla – Panadura.
E-mail: hrm@multilac.com Fax: 0115550268
(சி/1896)(6.7.2)

இலங்கையில் கைப்பேசி சந்தைப்படுத்தல் மற்றும் விநியோக துறையில் உயர்ந்த நிலையில் இருக்கும் எமது நிறுவனம் மேலும் நிறுவனத்தை விஸ்தரிக்கும் முகமாக சந்தைப்படுத்தல் துறையில் மிகவும் துடிப்புள்ள, தூரநோக்கு கொண்ட முன்னேற்ற பாதையில் செல்ல விரும்பும் இளைஞர்களை எதிர்பார்க்கின்றோம்.

நேரடி விற்பனை பிரதிநிதிகள்

விண்ணப்பதாரிகள்

- 18-30 வயதிற்கு இடைப்பட்டவர்கள் • க.பொ.த (சா.த) (உ.த) கல்வி தகைமை
- சந்தைப்படுத்தல் துறையில் அறிவு மற்றும் சிறந்த பேச்சுத்திறன் கொண்டவர்கள்
- உந்துருளி அனுமதிப்பத்திரம் கொண்டவர்களாயிருத்தல் வேண்டும்.

பகுதி நேர விற்பனை பிரதிநிதிகள்

விண்ணப்பதாரிகள்

- 22-34 வயதிற்கு இடைப்பட்டவர்கள் • க.பொ.த (சா.த) (உ.த) கல்வி தகைமை பெற்றவர்கள் ஆங்கிலம் மற்றும் தமிழ் / சிங்களத்தில் உரையாடக்கூடியவர்கள் கைப்பேசித் துறையில் பகுதி நேர விற்பனை பிரதிநிதிகளாய் அனுபவம் கொண்டவர்கள் முழு நேர அல்லது பகுதி நேர விற்பனை பிரதிநிதிகளாய் இணைந்துக்கொள்ளலாம்.

தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள்

- சிறந்த கொடுப்பனவுகள் மற்றும் மேலதிக கொடுப்பனவுகள்
- மருத்துவ காப்புறுதி வசதிகள் • உந்துருளி மற்றும் எரிபொருள் கொடுப்பனவு

கீழ் காணும் பிரதேசங்களில் வதிவோருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
கொழும்பு, கம்பஹா, காலி, மாத்தறை, திஸ்ஸமஹாராமை, தங்காலை, அவிஸ்ஸாவலை இரத்தினபுரி, பலாங்கொடை, மட்டக்களப்பு, அம்பாறை, பதுளை, பண்டாரவளை, கல்முனை நுவரெலியா, ஹட்டன், நாவலப்பிட்டி, அனுராதபுரம், மதவாச்சி, குருணாகலை, வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, கண்டி, தம்புளை, பொலன்னறுவை, திருகோணமலை.

விருப்பமுள்ள விண்ணப்பதாரிகள் தங்களுடைய சுயவிபரக்கோவையை உங்களை பரிந்துரைக்கக்கூடிய இருவரின் பெயர்களைக் குறிப்பிட்டு, 10 நாட்களுக்குள், நீங்கள் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிட்டு தபால் அல்லது மின்னஞ்சல் மூலம் எமக்கு அனுப்பிவைக்கவும்.

உதவி மனிதவள முகாமையாளர்
Abans (Pvt) Ltd.
498, Galle Road, Colombo 03.
careers@abansgroup.com
(சி/2237)(6.7.8)

Abans

சாரதிகள் தேவை

யாழ்.குடாநாட்டில் வேலைசெய்வதற்கு நன்கு தேர்ச்சி பெற்ற பாரஊர்தி சாரதிகள் தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு:
Eswarabagawaan & Company
No - 91, Stanly Road, Jaffna.
021 222 7603
(21684) (2-7-6)

கணினியாளர் தேவை

அலுவலகத்தில் பணியாற்றக் கணினியில் MS Offce தேர்ச்சி பெற்றவர்கள் தேவை. ஆண், பெண் இருபாலாரும்
தொடர்புகளுக்கு:
Eswarabagawaan & Company
No - 91, Stanly Road, Jaffna.
021 222 7603
(21684) (2-7-6)

தேவை

எமது நிறுவனத்துக்கு ஆண்/ பெண் விற்பனையாளர்கள் தேவை. முன்னனுபவமுள்ளவர்கள் தென்மராட்சியைச் சேர்ந்தவர்கள் விரும்பத்தக்கது.
யாழ்.ரெக்ஸ்
13 A, நவீனசந்தை, சாவகச்சேரி.
(அ/2200)(2-7-8)

அனைத்து பொலிஸ் பிரிவிலும் சீரான சேவைகள்

யாழ்.மாவட்டத்திலுள்ள சகல பொலிஸ் நிலையங்களிலும் சிறுவர், பெண்கள் பிரிவு சரியான முறையில் இயங்கு வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று யாழ்.பிரதிப் பொலிஸ் மா அதிபர் எரிக் பெரேரா தெரிவித் தார். யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் நேற்று நடைபெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்திலுள்ள அநேகமான பொலிஸ் நிலையங்களில் சிறுவர், பெண்கள் பிரிவு உள்ளது. ஆனால் அவை சரியான முறையில் இயங்குவதில்லை. இதனால் மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர் கொண்டுள்ளனர். எனவே இவற்றுக்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றார் அவர். (4)

காணி விற்பனைக்கு

நாவற்குழி - கைதடி A9 வீதியில் தென்னம் பிள்ளை, நன்னீர்க் கிணற்றுடன் 8 பரப்பு உறுதி காணி விற்பனைக்குண்டு. பிரித்தும் கொடுக்கப்படும். தரகர் தேவை இல்லை.
(21692) (2-7-8)
தொடர்பு : 021 2223385, 077 3101274

காணி விற்பனைக்கு

தாவடி, மானிப்பாய் வீதியில் 1½ பரப்பு காணி உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு:-
0750469872
(21685) (2-7-6)

கார் விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள Toyota Corrla 121 model (G Grade Model) நிறம் வெள்ளை. விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:- 0776630450
(21702) (2-7-6)

glyndŵr
GLYNDWR UNIVERSITY LONDON

Study at Glyndŵr University London
Highly Trusted Sponsor

Spot Admission on 16th & 17th of August 2012

Book your on-the- spot admission for February, June and October 2012 Intakes

Internationally Recognised UK Degrees

Bachelor Degree Courses £4000 per year (3 year programme)
Master Degree Courses £6500 Full programme (16 Months)

- MBA
- BA(Hons) Business Management
- BA(Hons) Business Marketing
- BA(Hons) Business Accounting

Authorised Recruitment Centre for Glyndŵr University London
BIBM
81,1/1, W.A. De Silva Mawatha, Colombo -08. Tel. 0112 586894
E mail: info@bibm.lk

Hotline: 0771 553323
(அ/2245)(2-7-8)

மாவட்ட செயலகம் யாழ்ப்பாணம்
யாழ்ப்பாண மாவட்ட செயலக கேட்போர்கூடம் புனரமைத்தல்
வேலைக்கான கேள்வி அறிவித்தல்

தவிசாளர் பெறுகைக்குழு மாவட்ட செயலகம் சார்பாக அரச அதிபர்/ மாவட்ட செயலரால் கேட்போர்கூடம் புனரமைத்தல் வேலைக்காக தகைமை உடையோரிடம் இருந்து குறியீடு செய்யப்பட்ட விலைக் கேள்விகள் கோரப்படுகின்றன

01. விலைக் கேள்வியானது தேசியப்போட்டி விலைக் கேள்வியின் மூலம் நடத்தப்படும்

02. தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் விலைக்கேள்வி ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

03. ஆர்வமுள்ள தகைமையுடைய விலைக் கேள்வியாளர்கள் உதவிமாவட்ட செயலாளர், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் (தொலைபேசி இல. 021 222 2771) அவர்களிடமிருந்து மேலதிக தகவல்களைப் பெறலாம் என்பதுடன், பொறியியற் பிரிவு, மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் 15.08.2012 தொடக்கம் காலை 9 மணியிலிருந்து பிற்பகல் 3 மணிவரை விலைக் கேள்வி ஆவணங்களைப் பரிசோதனை செய்யலாம்.

04. ஆர்வமுள்ள விலைக் கேள்வியாளர்களினால் விலைக்கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதியொன்றை பொறியியலாளர், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து 15.08.2012 முதல் காலை 9 மணியிலிருந்து மாலை 3 மணி வரையான காலப்பகுதியில் மீளளிக்கப்படாத தொகையான 1000/= கட்டணமாக செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

05. மூடி சீல் வைக்கப்பட்ட விலைக்கேள்விகள் யாவும் தவிசாளர் பெறுகைக் குழு மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 30.08.2012 திகதியன்று 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ இரு பிரதிகளில் ஒப்படைத்தல் வேண்டும். நேரடியாக ஒப்படைப்பவர்கள் பிரதம கணக்காளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் இடுதல்வேண்டும். காலம் தாழ்த்தப்பட்ட விலைக்கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வி தாரர்கள் வேலையின் பெயர் மற்றும் கேள்வியிலக்கத்தை தபால் உறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். அன்றைய தினம் கேள்விகள் யாவும் மேல் குறிப்பிடப்பட்ட முகவரியில் நேரடியாக வருகைதர விரும்பும் விலைக் கேள்வியாளர்கள் அல்லது பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.

06. கேள்விகளை ஏற்றுக்கொள்ளுவதும் நிராகரிப்பதும் பெறுகைச் சபையின் இறுதித் தீர்மானத்துக்கு அமைவானதாகும்

07. கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட விலைக் கூறல் பிணையானது கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதியிலிருந்து 90 நாள்களுக்கு செல்லுபடியாகும் விதத்தில் இருத்தல் வேண்டும்.

08. கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறு கேள்விப்பிணைப் பொறுப்பு இலக்கமிடப்பட்டிருத்தல் வேண்டும். பிணைப் பொறுப்புக்காலம் கேள்வி முடிவு திகதியிலிருந்து 90 நாள்கள் இருத்தல்வேண்டும்.

வேள்வி இல	வேலை விவரம்	மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்)	ஒப்பந்த காலம் (மாதம்)	தேவையான தரம்	கேள்வி பிணைத் தொகை(ரூ)	மீளளிக் கப்படாத தொகை (ரூ)
JK/A DM.03/ Cons work	யாழ். மாவட்ட செயலகேட் போர் கூடம் புனரமைத்தல் வேலை	11.494	06 மாதம்	C 6	115000.00	10000.00

சுந்தரம் அருணைநாயகம்,
அரச அதிபர்/ மாவட்ட செயலாளர்,
யாழ்ப்பாண மாவட்டம்.
(சி/2331) (45.6.7)

3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
23★ 11★ 1941
உதிர்வு
15★ 08★ 2009

திருமதி பரமவதி இராசையா

திதி:அபரபக்க தசமி

அம்மா உன்னை நாம் தினமும் மலர்களால் பூசை செய்யவில்லை
ஆனால் இதயத்தால் தினமும் ஆராதிக்கின்றோம்!
எம் இதய ஆராதனைகளால்
உன் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

"பரமபதி" அணியாவோடை, அல்வாய் வடக்கு.

என்றும் நினைவில்,
கணவர், மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
(அ/2333) (2-7-6)

கண்ணீர் அஞ்சலி

எமது நண்பன்
தெய்வசிகாமணி செல்வம்
(செல்வம் வெற்றிலைக்கடை)
அவர்களின் அன்புத்தந்தை

செல்வநாயகம் தெய்வசிகாமணி

அவர்கள் (10.08.2012) சிவபத மடைந்த செய்தி கேட்டு துயரடைகின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இராஜமகாமாரி தொழிலகம்,
வங்களாவடி, வேலணை.
(21689)(6.7.8)

கண்ணீர் அஞ்சலி

எமது சக ஆசிரியர் **க.சிவஞானம்** அவர்களின் பாசமிகு தாய்

திருமதி புஸ்பவதி கனகரத்தினம்

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரிய மாணவர்கள், பட்டப்பின் கல்வி டிப்ளோமா (முழுநேரம்) 2009/ 2010
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
(21695) (2.6.7)

31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்
23★ 08★ 1954
மறைவு
13★ 07★ 2012

அமரர் இராமசாமி முருகேஸ்

கண்ணின் கருமணியாய் எமைக்காத்து
இன்று கண்ணீர் மல்ல விட்டுச் சென்றதேனோ?
விண்ணில் விடிவெள்ளியாய்ப் போன பின்பும்
எங்கள் விழியில் ஈரம் தனைத் தந்ததேனோ?
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
என்றென்றும் உம் நினைப்பில் நாமிருப்போம்!!!

இன்று (12.08.2012) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அனைவரையும் அழைக்கின்றோம்.

எமது அன்புத் தெய்வத்தின் மரணச் செய்திசெய்தியறிந்து எமது துயரில் நேரில் வந்து அஞ்சலி செலுத்தியோருக்கும் மற்றும் தொலை பேசி, தந்தி மூலம் ஆறுதல் கூறியோருக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவிபுரிந்த அனைத்து அன்புள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

56/1,யமுனா வீதி, நல்லூர். (21696) (2-7-6) - குடும்பத்தினர்.

அன்ரனி நிக்சன் அதிரடி ஆட்டம் அளவெட்டி மத்தி வி.க. சம்பியன்

யாழ்ப்பாணம்,ஓக.12

ராசபூபதி ஞாபகார்த்த வெற்றிக்கிண்ண மென்பந்தாட்ட தொடரின் இறுதிப் போட்டி கடந்த சனிக்கிழமை வட்டுக்கோட்டை இளைஞர் கழக மைதானத்தில் நடைபெற்றது. வட்டுக்கோட்டை இளைஞர் கழகத்தினால் 11பேர் பங்குபற்றிய 20 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட யாழ்.மாவட்டத்திற்குட்பட்ட அழைக்கப்பட்ட கழகங்களுக்கிடையில் நடாத்தப்பட்ட மென்பந்தாட்ட சுற்றுத் தொடரில் இறுதி ஆட்டத்தில் அளவெட்டி மத்தி விளையாட்டுக் கழகமும் மானிப்பாய் ஒக்ஸ் போர்ட் விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற மானிப்பாய் ஒக்ஸ்போர்ட் விளையாட்டுக் கழகம் முதலில் களத் தடுப்பை தெரிவுசெய்தது. அதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் ஒக்ஸ்போர்ட் விளையாட்டுக் கழக ஆரம்ப வீரர்கள் அதிரடியான ஆட்டத்தை வெளிப்படுத்தி ஆடியபோதும் ஒக்ஸ்போர்ட் விளையாட்டுக் கழகத்தின் இலக்குகள் வீழ்ந்த வண்ணம் இருந்தன.

18.4 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 137 ஓட்டங்களைப் பெற்றது. இதில் நிதர்சன் 37ஓட்டங்களையும், பபி 24 ஓட்டங்களையும், ஐஸ்ரின் 21 ஓட்டங்களையும்தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் பார்த்தீபன் 3இலக்குகளையும், கபிலன், சுதன், வைகுந்தன் ஆகியோர் தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

138ஓட்டங்களை வெற்றி இலக்காக கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய அளவெட்டி மத்தி ஆரம்ப துடுப்பாட்ட வீரனான அன்ரனி நிக்சனின் அதிரடியான துடுப்பாட்டத்தின் மூலம் அளவெட்டி மத்தி விளையாட்டுக்கழக அணி 19.4 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 7 இலக்குகளை இழந்து 138 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது.

துடுப்பாட்டத்தில் அன்ரனிநிக்சன் 51 ஓட்டங்களையும், பார்த்தீபன் 30, ஓட்டங்களையும், கபிலன் ஆட்டமிழக்காது 21 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் அஜன் 3 இலக்குகளையும், அனுசன் 2 இலக்குகளையும் வீழ்த்தினர். இந்தப் போட்டியின் ஆட்டநாயகனாக அளவெட்டி மத்திய விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த பார்த்தீபனும், அதிக ஆறு ஓட்டத்தைப் பெற்றமைக்காக அளவெட்டி மத்திய விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த அன்ரனிநிக்சனும், சிறந்த பந்துவீச்சாளராக மானிப்பாய் ஒக்ஸ்போர்ட் கழகத்தைச் சேர்ந்த அயனும் இந்தத் தொடரின் ஆட்டநாயகனாக அளவெட்டி மத்திய விளையாட்டுக்கழகத்தைச்சேர்ந்த தயாளனும்தெரிவு செய்யப்பட்டார்கள். (23)

இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,ஓக.12

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் அல்வாய் மனோகரா சனசமூக நிலையத்தின் 85 ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு மனோகரா விளையாட்டுக் கழகம் நடத்தும் 11 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டத்தில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு-

பி.ப. 4 மணி

கலட்டி ஐக்கியம் விளையாட்டுக் கழகம் எதிர் நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகம்.

* * *

தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழகம் நடத்தும் 7 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை நவாலி அட்டகிரி விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டத்தில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு-

பி.ப. 3.30 மணி

சென். நீக்கிளஸ் விளையாட்டுக்கழக ''பி'' அணி எதிர் அராலிஜேம்ஸ் விளையாட்டுக்கழக

பி.ப. 4.30 மணி

இளவாலை சென்.லூட்ஸ் விளையாட்டுக்கழக அணி எதிர் முளாய் வளர்மதி விளையாட்டுக்கழகம்

* * *

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் கற்கோவளம் ஐஸ்தொழிற்சாலை ஆதரவுடன் கற்கோவளம் உதயதாரகை விளையாட்டக்கழம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று சனிக்கிழமை இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு-

பி.ப. 3.30 மணி

ஆதிபராசக்தி விளையாட்டுக்கழகம் ''ஏ'' எதிர் மைக்கல் விளையாட்டுக்கழகம்

பி.ப. 4.30 மணி

நவசக்தி விளையாட்டுக்கழகம் எதிர் யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழகம்.

(ங-23)

சென்றலைட்ஸை வீழ்த்தியது கே.ஸி.ஸி.ஸி

யாழ்ப்பாணம்,ஓக.12

இலங்கைக் கிரிக்கெட் நடத்தும் பிரிவு III இற்கான 50 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெற் சுற்றுப் போட்டித் தொடரின் வடமாகாண ரீதியில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியின் இறுதி ஆட்டத்தில் கே.ஸி.ஸி.ஸி. அணி 88 ஓட்டத்தால் வெற்றி பெற்றது.

கடந்த செவ்வாய்க்கிழமை யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம் மோதிக்கொண்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக் கழக அணி 47.2 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 200 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் ஜனுதாஸ் 59 ஓட்டங்களையும், உத்தமன் 43 ஓட்டங்களையும்,கோபி 21ஓட்டங்களையும், உமாநாத் 15 ஓட்டங்களையும், சத்தியன் 14 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழக அணி சார்பாக சாள்ஸ், விகாசர், எரிக்துசாந், பிரசாத் ஆகியோர்தலா2இலக்குகளை வீழ்த்தினர்.

201ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழக அணி 39.1 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து112 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

இதில் மதுஷன் 26 ஓட்டங்களையும், கபிலன் மற்றும் சௌமிதரன் 14 ஓட்டங்களையும், எடின் 13 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்துவீச்சில்கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக் கழக அணி சார்பாக கிருபவன்4 இலக்குகளையும் சிலோசன் 3 இலக்குகளையும், உமாநாத் 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

(23)

வலைப்பந்தாட்டம் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஓக.12

அரச அதிபர் வெற்றிக்கிண்ணத்திற்கான யாழ். மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களுக்கு இடையிலான உத்தியோகஸ்தர்களுக்கான பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது. (86-23)

மைக்கல் வெற்றிக் கிண்ண உதைபந்து முடிவுகள் சில

யாழ்ப்பாணம்,ஓக.12

மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக்கழகம் வருடந்தோறும் நடத்தும் விளையாட்டு விழாவில், ஓர் அங்கமான யாழ். மாவட்டத்தின் முன்னணி நட்சத்திர விளையாட்டுக்கழகங்கள் பங்குபற்றும் 7 பேர் கொண்ட விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் வெற்றி பெற்ற அணிகளின் விவரம்-

டைமன்ஸ் விளையாட்டுக்கழக அணிக்கும் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையில் இடம்பெற்ற ஆட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகம் 3:1 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது.

இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக்கழக அணிக்கும் இளவாலை சென்.லூட்ஸ் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையில் இடம்பெற்ற ஆட்டத்தில் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக்கழக அணி 6:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

டைமன்ஸ் விளையாட்டுக்கழக அணிக்கும் மயிலன்காடு ஞானமுருகன் அணிக்கும் இடம்பெற்ற ஆட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழக அணி 3:0 என்ற கோல்க் கணக்கில் வெற்றிபெற்றது.

இளவாலை சென்.லூட்ஸ் விளையாட்டுக்கழக அணிக்கும் திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழக அணிக்கும் இடம்பெற்ற ஆட்டத்தில் இளவாலை சென். லூட்ஸ் விளையாட்டுக்கழக அணி 3:2 என்ற கோலக்கணக்கில் வெற்றிபெற்றது. (23)

கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டு மைதானத்தில் எதிர்வரும் 25ஆம் திகதி முதல் 31ஆம் திகதி வரை 8 ஆவது ஆசிய வலைப்பந்தாட்ட வெற்றிக்கிண்ண போட்டிகள் இடம்பெறவுள்ளன. இந்தத் தொடருக்கு பிரதான அனுசரணையாளராக மக்கள் வங்கி செயற்படவுள்ளது.

ஆசிய வலைப்பந்தாட்ட போட்டியை முன்னிட்டு மக்கள் வங்கியினால் ஒழுங்கு செய்யப்பட்ட, வலைப்பந்தில் கையெழுத்திடும் நடமாடும் நிகழ்வு நேற்று சனிக்கிழமை யாழ்.மாவட்டத்தில் இடம் பெற்றது. வேம்படிச் சந்தியில் இருந்து பாண்ட் வாத்திய இசையுடன் ஊர்தி மணிக்கூட்டு கோபுரப் பகுதியில் பவனி வந்தது. இதன்போது

யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் ரூபினி வரதலிங்கம் மற்றும் யாழ்.மாவட்ட வலைப்பந்தாட்ட சங்கத் தலைவி சறோஜினி சிவச்சந்திரன் மற்றும் யாழ்.மாவட்ட வர்த்தக சங்கத் தலைவர் ஜெயசேகரம் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தரர் வசந்தி அரசரத்தினம் ஆகியயோர் பந்தில் கையொப்பம் இடுகின்றனர்.

சர்ச்சையை கிளப்பிய உசைன் போல்ட்

உலகின் குறுந்தூர ஓட்டச் சம்பியனான உசைன் போல்ட் சர்ச்சையொன்றை கிளப்பியுள்ளார். 200 மீற்றர் ஓட்டத்தில் வெற்றிபெற்ற பின்னரே அவர் இந்த சர்ச்சையை எழுப்பினார்.

இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் இதுவரை உலகின் தோன்றிய மிகச்சிறந்த குறுந்தூர ஓட்ட வீரர்களைப் பற்றிய வினா எழுப்பப்பட்ட போது ஜாம்பவான்களான ஜெஸி ஒவன்ஸ், கார்ல் லூயிஸ் ஆகியோரின் பெயர்களும் கேட்கப் பட்டன. ஜெஸி ஒவன்ஸின் பெயரை ஏற்றுக் கொண்ட உசைன் போல்ட், அதன் பின்னர் சர்ச்சையான விடயத்தை எழுப்பினார்.

தான் சர்ச்சையான ஒரு விடயத்தைத் தெரிவிக்கப் போவ தாகத் தெரிவித்த அவர், தனக்கு கார்ல் லூயிஸ் மேல் மதிப் பெதுவும் கிடையாது எனத் தெரிவித்தார். தடகள வீரர்களைப் பற்றி கார்ல் லூயிஸ் தெரிவித்த கருத்துக்கள் மிகவும் கீழ்த்தர மானவை எனவும், அவர் சர்ச்சையை எழுப்பி அதன் மூலம் கவனத்தை ஈர்க்க முயற்சிக்கிறார் எனவும் உசைன் போல்ட் தெரிவித்தார்.

கடந்த ஒலிம்பிக் போட்டிகளின் போது கார்ல் லூயிஸ் தெரிவித்த கருத்துக்களே தனது கோபத்திற்குக் காரணம் எனத் தெரிவித்த உசைன் போல்ட், இவ்வாறான முட்டாள்தனமான கருத் துக்களைத் தெரிவிப்பது ஆச்சரியம் தருவதாகத் தெரிவித்தார்.

கடந்த ஒலிம்பிக் போட்டிகளில் உசைன் போல்ட் 100 மீற்றர் ஓட்டத்தில் தங்கப் பதக்கம் வென்ற பின்னர் கருத்துத் தெரிவித்த தடகள ஜாம்பவானான கார்ல் லூயிஸ், ஒரு வருடத்தில் 10.03 என்ற நேரத்திலிருந்து 9.69 என்ற அளவுக்கு நேரம் குறை வடைந்திருப்பது சந்தேகமளிப்பதாகத் தெரிவித்திருந்தார். அந்தக் கருத்தே உசைன் போல்டை ஆத்திரமடையச் செய்துள்ளது.

ஐக்கிய அமெரிக்காவைச் சேர்ந்த தடகள வீரரான கார்ல் லூயிஸ், 100 மீற்றர், 200 மீற்றர், நீளம் பாய்தல் ஆகியவற்றில் ஜாம்பவானாகக் கருதப்படுகிறார். அவர் ஒலிம்பிக் போட்டிகளில் மொத்தமாக 9 தங்கப் பதக்கங்களையும், ஒரு வெள்ளிப் பதக்கங்களையும் பெற்றுள்ளார். அவர் 1984 முதல் 1996 வரை யிலான காலப்பகுதியில் ஒலிம்பிக் போட்டிகளில் பங்குபற்றி யிருந்தார். (5)

ஒலிம்பிக் பதக்கப் பட்டியல்

11.08.2012

LONDON 2012

நாடுகள்	தங்கம்	வெள்ளி	வெண்கலம்	மொத்தம்
அமெரிக்கா	41	26	28	95
சீனா	37	25	21	83
பிரிட்டன்	26	15	18	59
ரஷ்யா	19	23	28	70
தென்.கொரியா	13	7	7	27
ஜேர்மனி	10	19	14	43
பிரான்ஸ்	10	9	12	31
ஹங்கேரி	8	4	4	16
ஆஸ்திரேலியா	7	16	11	34
இத்தாலி	7	6	8	21

எட்டு ஆண்டுகளுக்குப் பின்னர் பதக்கம் பறிப்பு



எட்டு ஆண்டுகளுக்கு முன்னர் ஏதேன்ஸ் ஒலிம்பிக் போட்டி களில் தங்கப் பதக்கம் வென்ற ஒரு வீரரின் பதக்கம் இப்போது சர்வதேச ஒலிம்பிக் சம்மேளனத்தால் பறிக்கப்பட்டுள்ளது.

சைக்கிள் ஓட்டும் போட்டியின் ரோட் ரேஸ் பிரிவில் வெற்றி பெற்ற அமெரிக்காவின் டைலர் ஹாமில்டன் ஊக்க மருந்து பயன்படுத்தியிருந்தது தெரியவந்ததை அடுத்தே அவரி டமிருந்து பதக்கம் பறிக்கப்பட்டுள்ளது. ஏதேன்ஸ் ஒலிம்பிக் போட்டிகளின் போது ஊக்க மருந்து பரிசோதனைக்காக அவர் கொடுத்த இரத்த மாதிரி அழிக்கப்பட்டுவிட்டது.

எனினும், ஊக்க மருந்து எதையும் தான் பயன்படுத்த வில்லை என்று பல ஆண்டுகளாகக் கூறி வந்த ஹாமில்டன், கடந்த ஆண்டு அமெரிக்க தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் தான் அந்த மருந்துகளை எடுத்துக் கொண்டதை ஒப்புக் கொண்டார்.

சர்வதேச ஒலிம்பிக் சம்மேளனத்தின் இந்த முடிவை அடுத்து அப்போது வெள்ளிப் பதக்கம் வென்ற ரஷ்யாவின் வியாட்செஷ்லாவ் எகிமோவ் தகுதி உயர்த்தப்பட்டு அவருக்கு தங்கப் பதக்கம் வழங்கப்படுகிறது.

இதேபோல் வெண்கலப் பதக்கம் பெற்ற அமெரிக்காவின் பாபி ஜூலிச்சுக்கு வெள்ளிப் பதக்கமும், நான்காவது இடத்தை அப்போது பெற்ற ஆஸ்திரேலியாவின் மைக்கேல் ரோஜர்ஸுக்கு வெண்கலப் பதக்கமும் வழங்கப்படுகின்றன.

டைலர் ஹாமில்டனிமிருந்து பதக்கம் பறிபடுவதும் அவர் போட்டியிலிருந்து தகுதி நீக்கம் செய்யப்பட்டிருப்பதும் அவருக்கு முறைப்படி வெள்ளிக்கிழமை தெரிவிக்கப்பட் டுள்ளதாக சர்வதேச ஒலிம்பிக் சம்மேளனத்தின் பேச்சாளர் மார்க் ஆடம்ஸ் கூறியுள்ளார். (5)

ஒலிம்பிக் கொண்டாட்டம் இன்று நிறைவு

லண்டன் ஒலிம்பிக் போட்டி இன்று15 தங்கப் பதக்கங்களுடனான போட்டியு டன் நிறைவடைகிறது.

உலகின் மிகப்பெரிய விளையாட்டுத் திருவிழாவான ஒலிம்பிக் போட்டி லண்டனில் கடந்த 27 ஆம் திகதி தொடங்கியது. 16 நாள்களாக நடைபெற்று வந்த இந்தப் போட்டி இன்றுடன் முடிகிறது. கடைசி நாளில் 15 தங்க பதக்கத்திற்கான போட்டிகள் நடக்கின்றன.

ஆண்களுக்கான மரதன், கூடைப்பந்து, கைப்பந்து, தண்ணீர் பந்து (ஆண்கள்) இறுதிப்போட்டி மல்யுத்தம் (2), குத்துச்சண்டை (5), ஜிம்னாஸ்டிக், சைக்கிளிங், மாடர்ன் பெண்டத்லா ஆகிய போட்டிகள் இன்று நடைபெற உள்ளது.

இறுதியாக நிறைவு விழா நடக்கிறது. அமெரிக்கா, சீனா தற்போது பதக்க பட்டியலில் அமெரிக்கா முதல் இடத்தைப் பிடித்துள்ளது.

இன்று நடைபெறும் போட்டிகளின் முடிவை பொறுத்து இடவரிசை மாறலாம். அமெரிக்காவும், சீனாவும் முதல் இடத்தைப் பிடிக்க கடுமையாக போராடி வரு கின்றன. (5)

நடந்தார் வென்றார்

லண்டன் ஒலிம்பிக் நடைபந் தய போட்டியின் ஆண்களுக்கான 50 கிலோ மீற்றர் பிரிவில் ரஷ்ய வீரர் சொஜி கிர்டுயாப்கின் தங்கம் வென்றார்.

லண்டனில் நடைபெற்று வரும் ஒலிம்பிக் போட்டியில் ஆண் களுக்கான 50 கிலோ மீற்றருக் கான பிரிவில் நடைபந்தயப் போட்டி நடைபெற்றது.

இதில் ரஷ்யா வீரர் செர்ஜி கிர்டுயாப்கின் சீரான வேகத்து டன் நடந்து பந்தய தூரமான 50 கிலோ மீற்றர் தூரத்தை 3 மணி 35 நிமிடம் 59 செக்கன்களில் கடந்து தங்கப்பதக்கத்தை தட்டிச் சென்றார்.

இதற்கு அடுத்ததாக, ஆஸ்திரேலிய வீரர் ஜேரட் டேலண்ட் 3:36:53 செக்கன்களில் கடந்து வெள்ளிப்பதக் கத்தையும், மூன்றாவதாக வந்த சீனா வீரர் டியான்பெங் சீ 3:37:16 செக்கன்களில் பந்தயத் தூரத்தை கடந்து வெண்கலப் பதக்கத்தையும் வென்றனர். (5)

நஹநெஹிர நாஹாஸ் வெற்றி

மத்தியூஸ் தலைமையிலான நஹநெஹிர நாஹாஸ் அணி டக்வேர்த் லூயிஸ் முறைப்படி 5 ஓட்டங்களால் ருஹுணு றோயல்ஸ் அணியை வெற்றி பெற்றுள்ளது.

இலங்கையில் முதல் முறையாக இடம் பெறுகின்ற எஸ்.எல்.பி.எல். 'ரி-20' கிரிக்கெட் தொடர் நேற்று ஆரம்பமாகியது. இதில் முதலாவது ஆட்டத்தில் மஹேல தலைமை யிலான ருஹுணு றோயல்ஸும், மத்தியூஸ் தலைமையிலான நஹநெஹிர நாஹாஸ் அணியும் ஆர்.பிரேமதாஸா மைதானத்தில் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ருஹுணு றோயல்ஸ் அணி முதலில் துடுப் பெடுத்தாட தீர்மானித்தது.

அதற்கமைய துடுப்பெடுத்தாடி 20 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 134 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக் கொண்டது. துடுப்பாட்டத்தில் அதிகபட்சமாக திரிமன்னே 34, ஹரிஸ் 19, அப்ரிடி 18 ஓட் டங்களைப் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச் சில் எரங்க, அஜந்த மென்டிஸ் தலா 3 இலக்கு களைக் கைப்பற்றினர்

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடத் தொடங்கி ய நஹநெஹிர நாஹாஸ் அணி 12 பந்துப் பரி மாற்றங்களில் 2 இலக்குகளை இழந்து 77 ஓட் டங்களைப் பெற்ற நிலையில் மழை குறுக்கீடு செய்ததன் காரணமாக ஆட்டம் இடைநிறுத் தப்பட்டது. இந்த நிலையில் டக்வேர்த் லூயிஸ் முறைப்படி நஹநெஹிர நாஹாஸ் அணி 5 ஓட்டங்களால் வெற்றி பெற்றதாக அறிவிக் கப்பட்டது. அந்த அணி சார்பில் துடுப்பாட் டத்தில் பிரிட் ஆட்டமிழக்காது 33 ஓட்டங் களையும், ஜெயசுந்தர 25 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் மலிங்க, லக்ஷித தலா ஒரு இலக்கினை கைப்பற்றினர். (5)

ஒலிம்பிக் கிளிக்ஸ்



வலி.கிழக்கு பிரதேச சபை உறுப்பினரும் மூத்த ஊடகவியலாளருமான அ.த.க.கிருஸ்ணராசாவின் அஞ்சலிக் கூட்டம் ஆவரங்கால் மத்திய முன்பள்ளி மண்டபத்தில் நடைபெற்றபோது அச்சுவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க முன்னாள் பொது முகாமையாளர் எம்.ஆனந்தகிருஷ்ணன் நினைவுரை நிகழ்த்துகிறார். நிகழ்வில் கலந்துகொண்ட ஒரு பகுதியினர் அமர்ந்துள்ளனர். (ம-11)

ஆனைக்கோட்டை இந்து சமய விருத்திச் சங்கம் பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்திய செய்முறைப் போட்டியில் மாணவி ஒருவர் கோலம் போடும் போட்டியில் ஆர்வத்துடன் பங்குபற்றுகிறார். (ம-100)



சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் மாணவ முதல்வர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வில் பாடசாலையின் பழைய மாணவர் சங்க கனடாக் கிளைச் செயலாளர் செ.ஆறுமுகம் மாணவ முதல்வர் ஒருவருக்குச் சின்னம் சூட்டுகிறார். (ம-14)

இணுவில் மத்திய கல்லூரியின் நிறுவுனர் தினமும் பரிசளிப்பு விழாவும் அண்மையில் இடம்பெற்றபோது பாடசாலை அதிபர் அ.சதானந்தன், வலயக் கல் விப் பணிப்பாளர் ஆ.இராஜேஸ்வரன், கலாநிதி க.ஸ்ரீகணேசன் உட்பட விருந் தினர்கள் மாலை அணிவித்து மண்டபத்துக்கு அழைத்து வரப்படுகின்றனர். (ம-11)

நல்லூர் பிரதேச சபையின் ஏற்பாட்டில் நல்லூர் பொது நூலகம் நடத்திய தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான விசேட வழிகாட்டல் கருத்தரங்கு நல்லூர் பிரதேச சபை மண்டபத்தில் சபை உறுப்பினர் து.துரைமணி தலைமையில் நடைபெற்றது. (ம-14)

பொலிகண்டி மக்கள் படிப்பக முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டுப்போட்டியில் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை முன்னாள் அதிபர் திருமதி . சி. இராமநாதன் கிராமஅலுவலர் சி.சிவபாலன் ஆகியோர் விருந்தினராகக் கலந்துகொண்டு சிறார்களின் வரவேற்பு ஆக்கப்போட்டியை பார்வையிடுகின்றனர். நிகழ்வில் மாணவர்கள் இணைந்து சத்தியப்பிரமாணம் செய்கின்றனர். (ம-253)

அளவெட்டி அருணாசலம் வித்தியாலயத்தின் நிறுவுனர் தினமும் பரிசளிப்பு விழாவும் அண்மையில் நடைபெற்ற போது தெல்லிப்பழைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சு.சண்முக குலகுமாரன் மாணவர் ஒருவருக்கு பரிசில் வழங்குகிறார். (ம-14)

சாவகச்சேரி மக்கள் வங்கிக் கிளையால் நடத்தப்பட்ட கைதடிப் பிரதேச முன்பள்ளி ஆசிரியர்களுக்கான சிறுவர் அரங்கம் தொடர்பான பயிற்சிப் பட்டறையில் கிளை முகாமையாளர் க.சண்முகலிங்கம், உதவிமுகாமை யாளர் க.சிறிதரன், தென்மராட்சி கல்வி வலய முன்பள்ளி உதவிக்கல்விப் பணிப்பாளர் சு. பாக்கியராஜா ஆகியோருடன் வளவாளராக திருமதி .ஜெயந்தினி சந்திரகாந்தனும் கலந்து கொண்டார். (ம-9)

உதைபந்து இறுதியாட்டம்

அகில இலங்கை ரீதியிலான தேசிய மட்ட ஆண்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு கொழும்பு விளையாட்டு அமைச்சின் மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இறுதியாட்டத்தில் வடமாகாண உதைபந்தாட்ட அணியை எதிர்த்து தென்மாகாண உதைபந்தாட்ட அணி மோதவுள்ளது. (23)

கணக்கீட்டு மாணவர்கள் சமூகம் தரவும்

A/L - 2012

ஒகஸ்ட் - 14
(செவ்)
பிற்பகல்
3 மணி

DMI
Jaffna.

Java அடிப்படையிலிருந்து கற்பதற்கு...
100% Practical oriented
MIS
Open Source College
OOP / Swing / Applet
For 10 years...
Call Us: 0776577359
விரும்பிய எவரும் கற்கலாம்...
By R.Kumaran-B.Sc.
74, சபாபதி வீதி, KKS வீதியிலிருந்து 200 m
கொக்குவில் பூநாறி மரத்தடி
(21670)

CITY DRIVING SCHOOL
அரச அனுமதி பெற்ற சாரதி பயிற்றுனர் பாடசாலை (DS 390)
உங்களை நம்பிக்கையான சாரதியாக்குவதே எமது பொறுப்பு !
இன்றே எம்மை நாடுங்கள்...
No.05, Vaverset Place, Colombo - 06.
HOT LINE
0777 344 844
▶ உங்கள் நம்பிக்கையான சாரதி பயிற்சி நிலையம்
▶ (Instructor License) உள்ள அனுபவமிக்க பயிற்றுனர்களை கொண்டு பயிற்சியளிக்கப்படும்.
▶ உங்களுக்கு வசதியான நேரத்தை நீங்களே தெரிவு செய்யலாம்.
▶ அனைத்து வகையான வாகனங்களையும் இங்கே பயிற்சி பெறலாம்.
▶ ஆண் / பெண் இருபாலாருக்கும் பயிற்சியளிக்கப்படும்.
(சி/2238)
Tel : 011 2505672

STUDY IN UK
உங்கள் LONDON
செல்லும் கனவை நனவாக்க இன்றே எம்முடன் இணையுங்கள்
GCE(O/L)
தகமை போதுமானது
July/August Intake க்கான அனுமதிகள் தற்போது ஏற்றுக்கொள்ளப்படுகின்றன
நடைமுறைகள் மாறினும் எவ்வித மாற்றமும் இன்றி London செல்லுங்கள்
நீங்கள் ஏன் Exponet ஐ தெரிவுசெய்ய வேண்டும்
• ஆகக் கூடுதலான விசாக்களைப் பெற்றுக்கொடுத்து சாதனைபடைத்துக் கொண்டிருப்பதால்
• பல வருடங்கள் அனுபவம் வாய்ந்த சட்டத்தரணிகளின் உதவியுடன் உங்கள் VISA தேவைகள் பூர்த்தி செய்யப்படுகின்றன
• 4 வருட visa உத்தரவாதம்
• ஒரு மாதத்தில் பயணம்
• 20 மணித்தியாலம் வேலை செய்யும் வசதி(per week)
• GCE(O/L) தகமை போதுமானது
• இலவச IELTS வகுப்புகள்
HOTLINE : 021 7538395 / 021 2227230
011 7 555511/14
EXPONET Overseas Consultants
379 - ½, Galle Road, Colombo 06.
197,Arasady Road, Jaffna.
E-mail:nimal@expogroup.lk
Web:www.expogroup.lk

உதயன் விளம்பரத் தொடர்புக்கு—
advt@uthayan.com
0215671111

German Swiss மொழிகள்
தமிழ் மொழி பெயர்ப்புடன் புதிய வகுப்புக்கள் ஆரம்பம் (17.08.2012) தொடர்புகளுக்கு 10, Palaly Road, Jaffna. (ஆரியகுளத்திற்கு அருகில்)
Kajenthini miss T.P - 0771604823
(21643)(3.8.7)

தேவை
Receptionist (பெண் வரவேற்பாளர்) யாழ்நகரில் உள்ள பிரபல நிறுவனம் ஒன்றிற்கு தேவை. ஆங்கிலத்தில் சரளமாக உரையாடக்கூடியவர்கள் யாழ் நகரிற்கு அண்மையில் வசிப்பவர்கள் மாத்திரம் விண்ணப்பிக்கவும்.
விளம்பர இலக்கம் - 1387
மே/பா உதயன்
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

Don't Miss Your Chance
50 % off on all courses ends on 31/08/2012
Microsoft, Cisco & Linux ஆன் online Certification ஆக MCTS, MCITP, CCNA, CCNP & RHCSA ஆகியவற்றை பெறுவதன் மூலம் உள்நாட்டில் அல்லது வெளிநாட்டில் (Middle East, Singapore, Malaysia & etc) உங்களால் மிக இலகுவாக Help Desk, System Administrator, Network Administrator & Network Engineer போன்ற வேலைகளை பெற்றுகொள்ள முடியும்.
நாங்கள் 100 % Live Devices (Routers, Switches & Servers) பாவித்து கற்பித்தலை மேற்கொள்வதால் மாணவர்கள் Real Time Experience ஐ பெற்றுக்கொள்ள முடியும். அத்துடன் Exam ஐ மிக இலகுவாக Pass பண்ணமுடியும்.
* உங்களது கட்டணத்தை இலகுவான தவணை முறை அடிப்படையில் கட்டலாம். *
கற்கை நெறி விபரங்கள்
* Cisco Certified Network Associate (CCNA)
* Cisco Certified Network Professional (CCNP)
* Microsoft Certified Technology Specialist (MCTS)
* Microsoft Certified IT Professional (MCITP)
* Red Hat Certified System Administrator (RHCSA)
(21422)
IP Tech Training & Consultancy
255, K.K.S Road, Mathavadi, Chunnakam
Email: info@iptech.lk
Web: www.iptech.lk
T.P: 0217539925

பணியாளர் தேவை
யாழ் நகரில் இயங்கும் "உல்லாசப் பயணிகள் விடுதிக்கு" கீழ்க்காணும் பணிநிலைகளுக்கு பணியாளர்கள் தேவை.
1. முகாமையாளர்
2. வரவேற்பாளர் (ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்)
} மும்மொழிகளும் தெரிந்தவர்கள்
3. கணக்காளர்
4. றூம்போய்
5. தோட்டப்பராமரிப்பாளர். (ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்)
6. சமையலாளர் (யாழ். உணவு வகைகளை திறம்படத் தயாரிக்கக்கூடிய முன் அனுபவம் உள்ளவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்.
* மேற்படி பணிநிலைகளில் முன் அனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது.
* பணிநிலைகளுக்கு தகுந்த சம்பளம் வழங்கப்படும். *
விண்ணப்பங்களை பணிநிலை, தொலைபேசி இலக்கத்தைக் குறிப்பிட்டு 18/08/2012 ஆம் நாளுக்கு முன்னர் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.
விளம்பர இல- 4389
மே/பா. உதயன்
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(சி/2301)(3.7.54)

பழைய பட்டுப்புடவை பணமாகிறது!
ஸ்ரீ காஞ்சிபுரம் காமாட்சி பட்டு சொசைட்டி சென்டர்
யாழ்ப்பாணம்
தியாகி அறக்கொடை நிறுவன வளாகம்,
T.C.T. வணிக வளாகம்.
527, நாவலர் வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.
Tel : 075 8447 994
திருகோணமலை
இந்து கலாச்சார மண்டபம்
H.S.C. ஹால்
இல. 302/5, இன்னர் ஹார்பர் ரோடு
திருகோணமலை.
Tel : 075 6752 415
12-08-2012 முதல் 18-08-2012 வரை
பழைய (கிழிந்த) பட்டுப்புடவைகள்
பட்டு வேஷ்டிகள், பட்டுப்பாவாடைகள்,
பழைய கிழிந்த கூரைப்புடவைகளும், எந்த நிலையில் இருந்தாலும் காஞ்சிபுரம் மில் விலைக்கே வாங்கிக் கொண்டு உடனே பணம் தரப்படும்.
7 தினங்கள் மட்டுமே!
(21681)
பழைய டீலக்ஸ் புடவைகள் ரூபா 5000/= க்கு மேல் ரூபா 20,000/= வரை வழங்கப்படும்.
பழைய காலத்து கல்லவைத்த நகைகள் வாக்குழி, ஊடில்லை, பவளம், பவள மாலைகள் நல்ல விலைக்கு வாங்கப்படும்
குறிப்பு : எங்களுக்கு மேலே உள்ள இரண்டு கிளைகள் மட்டுமே வேறு கிளைகள் கிடையாது.
இந்த விளம்பரத்தை கொண்டு வந்து பட்டு புடவை கொடுத்தால் 1 ஜோடி வெள்ளி கொலுசு (அரை இலவசம்.
காலை 9.30 மணி முதல் இரவு 8.30 மணி வரை - ஜாயிறு கடை உண்டு. கார் பார்க்கிங் வசதி உண்டு.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 12.08.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.